# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2010
ரூ. 7.00




## தெலுங்கானா ஆதரவும் எதிர்ப்பும்:
# புதைந்துள்ள உண்மைகள்



டிசம்பர் 21, தோழர் ஸ்டாலின் 130-வது பிறந்த நாள்:

# "தோழர் ஸ்டாலின் வழி நடப்போம்! முதலாளித்துவப் பயங்கரவாதத்தை முறியடிப்போம்!"

## -தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் சூளுரை!

''தோழர் ஸ்டாலின் - அவர் உலக முதலாளித்துவத்தின் சிம்ம சொப்பனம். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒப்புயர்வற்ற தலைவர்.வரலாற்றில் மனிதகுலம் கண்டிராத பல அரிய சாதனைகளை நம் கண்முன்னே நிகழ்த்திக் காட்டியது சோசலிச ரஷ்யா. அந்தச் சோசலிச மண்ணின் தந்தையாக, கம்யூனிசத்தின் குறிபீடாக விளங்கினார் தோழர் ஸ்டாலின்.

கம்யூனிஸ்டு முன்முயற்சி, வேலைத்திறன், கட்டுப்பாடு, தியாகம் என்ற சொற்களுக்கான இலக்கணத்தை ரஷ்ய போல்ஷ்விக்குகள் உருவாக்கிக் காட்டியது அவருடைய தலைமையின்கீழ்தான். அவருடைய தலைமையின் கீழ் சோசலிசத்தைக் கட்டியெழுப்பிய ரஷ்யா, 20 இலட்சம் மக்களைப் பறிகொடுத்து இட்லரின் பாசிசத்திலிருந்து உலக மக்களைக் காப்பாற்றியது.

மனித குலத்தின் ஒப்புயர்வற்ற இந்த வரலாற்றுப் பெருமைகள் அனைத்துக்கும் உலகின் எந்த மூலையில் இருக்கும் ஒரு கம்யூனிஸ்டும் இன்று நெஞ்சு நிமிர்த்தி உரிமை கொண்டாட முடிகிறதென்றால், அந்த கௌரவத்தை நமக்கு வழங்கியவர் தோழர் ஸ்டாலின்

எதிரிகளிடம் வெறுப்பையும் உழைக்கும் மக்களிடம் பெருமிதத்தையும் தோற்றுவித்த ஒரு பெயர் உண்டென்றால் அந்தப் பெயர் - ஸ்டாலின். பாட்டாளி வர்க்கத் தலைவர்களிலேயே அதிகம் தூற்றப்படுபவர் அவர்தான். அவரை வெல்ல முயற்சி செய்தார்கள். முடியாததால் அவரைக் கொல்ல முயற்சித்தார்கள். பொய்களை ஆதாரமாக்கி அவரைத் தூற்றினார்கள். ஆண்டுகள் பல கடந்த போதிலும் எதிரிகளின் வெறி இன்னும் அடங்கவில்லை.

கம்யூனிசத்தை அது பிறந்த மண்ணிலேயே புதைத்து விட்டதாக எக்காளமிட்டுப் பிதற்றிய முதலாளித்துவம், இதோ, இன்று மரணப்படுக்கையில் கிடக்கிறது. சாக மறுக்கும் முதலாளித்துவம் உலகெங்குமுள்ள உழைக்கும் மக்களைக் கொன்றொழித்து வருகிறது. அவரது நினைவு தரும் உத்வேகத்தால் முதலாளித்துவத்தைக் கொன்று புதைப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!''என்ற பிரச்சாரத்துடன் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள், தோழமை அமைப்புகளுடன் இணைந்து தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் உற்சாகத்துடனும் பெருமிதத்துடனும் தோழர் ஸ்டாலின் பிறந்த நாளை, உலக முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராட சூளுரை ஏற்கும் நாளாகக் கொண்டாடின.தோழர் ஸ்டாலின் உருவப்படமேந்தி பேரணி, கொடியேற்றி இனிப்புகள் வழங்குதல், தோழர் ஸ்டாலின் உருவப் படத் திறப்பு, கலை நிகழ்ச்சிகள், தெருமுனைக் கூட்டங்கள், கவிதை வாசிப்பு, குறும்படம் திரையிடல் முதலான நிகழ்ச்சிகள் மூலம் தோழர் ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை உழைக்கும் மக்கள் திருவிழாவாக நடத்தி, அப்பாட்டாளி வர்க்க சர்வாதிகாரியின் புகழைப் பரப்பின.

உலகெங்கும் பாட்டாளி வர்க்கமும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் இந்த நாளைப் பேருற்சாகத்துடன் கொண்டாடிய வேளையில், செஞ்சட்டை அணிந்து செங்கொடிகள் விண்ணில் அசைந்தாட நடந்த இந்த விழாக்கள், அனைத்துலக பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவரை உழைக்கும் மக்களின் நெஞ்சில் நிறுத்தி, அவர் வழியில் முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராட அறைகூவின.

ஓங்கட்டும் தோழர் ஸ்டாலின் புகழ்!
ஒழியட்டும் முதலாளித்துவம்!
பரவட்டும் பாட்டாளி வர்க்கப் புரட்சி!

-பு.ஜ.செய்தியாளர்கள்.



வேலூரில்...


கோத்தகிரியில்...



சென்னையில்...


பொய்கை அரசூரில்...



2 புதிய ஜனநாயகம் ஜன. 2010

# நாட்டு மக்கள் மீதான போர்தான் இந்த நக்சல் ஒழிப்புப் போர்

'ஆபரேசன் கிரீன் ஹண்ட்' (காட்டு வேட்டை) என்ற பெயரில் மாவோயிஸ்டு கட்சியையும், நக்சல்பாரி இயக்கத்தையும் நசுக்கி ஒழிக்கும் நோக்கத்துடன் இந்திய அரசு ஒரு உள்நாட்டுப் போரை அறிவித்திருக்கிறது. சட்டிஸ்கர், ஜார்கண்ட், ஒரிசா மாநிலங்களிலும் மகாராட்டிரம், ம.பி, ஆந்திர மாநிலங்களின் எல்லைப்புறங்களிலும் பரவியிருக்கும் தண்ட காரண்யா காடுகளிலிருந்தும் மாவோயிஸ்டு கொரில்லாக்களை ஒழித்துக் கட்டுவதே இந்தத் தாக்குதலின் நோக்கம் என்று அறிவித்திருக்கிறார், உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம்.

சுமார் ஒரு லட்சம் போலீசு மற்றும் துணை இராணுவப் படையினருடன் சல்வாஜுடும், ஹர்மத் வாகினி, நாகிரிக் சுரக்சா சமிதி, சன்லிட் சேனை முதலான அரசு ஆதரவு பெற்ற கூலிப் படைகளும் மாவோயிஸ்டுகளுக்கும் பழங்குடி மக்களுக்கும் எதிராகக் களத்தில் நிற்கின்றன. ''இராணுவம் நேரடியாகக் களத்தில் இறங்காது'' என்று கூறிக் கொண்டே சொந்த நாட்டின் மக்களுக்கு எதிராக, இந்த மண்ணின் பூர்வீகக் குடிகளுக்கு எதிராக ரூ. 7,300 கோடி நிதி ஒதுக்கி, இராணுவ ஹெலிகாப்டர்கள் துணையுடன், இராணுவ அதிகாரிகளின் மேற்பார்வையில் இந்தப் போர் நடத்தப்படுகிறது. சிப்பாய்களுக்கு கொரில்லா எதிர்ப்பு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆயுதப் படைகளின் அட்டூழியங்களையும் அத்துமீறல்களையும் வெளிக் கொண்டு வரும் பத்திரிக்கையாளர்களையும் மனித உரிமை ஆர்வலர்களையும் நசுக்குவதற்கென்றே எல்லா வகையான ஆள் தூக்கிக் கருப்புச் சட்டங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. ''இலங்கை இராணுவத்தின் இறுதிப்போர்தான் எங்களுக்கு வழிகாட்டி'' என்று வக்கிரமாகப் பிரகடனம் செய்திருக்கிறார், சட்டிஸ்கர் மாநில டி.ஜி.பி விசுவரஞ்சன்.

இந்தப் போர்வெறிக்குள் புதைந்திருக்கும் இரகசியம் இதுதான்: தண்டகாரண்யாவின் காடுகளிலும் மலைகளிலும் அற்புதமான அரிய கனிம வளங்கள் புதைந்து கிடக்கின்றன. உயர்தரமான இரும்புத் தாது, செம்பு, தங்கம், வைரம், அலுமினியத்தின் மூலப்பொருளான பாக்சைட், சிமெண்டு உற்பத்திக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்கள், நிலக்கரி, பளிங்கு, கிரானைட், சிலிகா, குவார்ட்சைட் போன்ற 28 வகைக் கனி வளங்களும் காட்டு வளங்களும் நீர் வளமும் நிறைந்திருக்கின்றன. பன்னாட்டுக் கம்பெனிகளும், இந்தியத் தரகு முதலாளிகளும் இஷ்டம் போல இந்தப் புதையலை அள்ளிச் செல்ல முடியாமல் குறுக்கே நிற்கிறார்கள் மாவோயிஸ்டு கொரில்லாக்கள். சிதம்பரத்தின் கொலைவெறிக்குக் காரணம் இதுதான்!

ஆகவே, இந்தப் போர் சாராம்சத்தில் மூன்று நோக்கங்களைக் கொண்டிருக்கிறது. காட்டுவளமும் கனிமவளமும் செறிந்த அந்தப் பிராந்தியம் முழுவதிலிருந்தும் பழங்குடி மக்களை விரட்டி விட்டு, அவற்றைப் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் தரகு முதலாளிகளுக்குத் தாரை வார்க்கும் வகையிலான ஒப்பந்தங்களைப் போட்டிருக்கும் மத்திய-மாநில அரசுகள், அதற்குத் தடையாக இருக்கும் மாவோயிஸ்டு இயக்கத்தை ஒழித்துக் கட்ட விரும்புகின்றன. இது, இந்திய அரசின் உடனடி இலக்காக இருக்கின்ற அதேநேரத்தில், நாடு முழுவதிலும் உள்ள நக்சல்பாரி இயக்கத்தை நசுக்குவதே ஆபரேசன் கிரீன் ஹண்டின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது. கம்யூனிசப் புரட்சியாளர்களை ஒடுக்குவதென்பது எப்போதுமே ஆளும் வர்க்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது என்ற போதிலும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ஆபரேசன் கிரீன் ஹண்ட் என்பதை அத்தகைய வழமையான ஆளும் வர்க்க ஒடுக்குமுறையின் அங்கமாக மட்டும் புரிந்து கொள்ளக் கூடாது.


புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 3
ஜனவரி 2010

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561



சோட்டா நாகபுரி, தண்டகாரண்யாவின் காடுகள், மலைகள், ஆறுகள் அனைத்தையும் அம்மண்ணின் மைந்தர்களான பழங்குடி மக்களுக்குத் தெரியாமலேயே அறுத்துக் கூறு கட்டி விற்றுவிட்டது அரசு. வேதாந்தா (ஸ்டெரிலைட் கம்பெனியின் தாய் நிறுவனம்) என்ற பிரிட்டிஷ் பன்னாட்டு நிறுவனத்துக்கு ஒரிசா அரசு 40 கி.மீ நீளமுள்ள நியாம்கிரி மலையைத் தாரை வார்த்திருக்கிறது. பழங்குடி மக்களின் கிராமங்களும் விட்டுவைக்கப்படவில்லை. அவர்களுக்கே தெரியாமல், அவர்களது கிராமங்கள் தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சின்னஞ்சிறிய ஜார்கண்ட் மாநிலத்தில் மட்டும் 1,10,000 ஏக்கர் நிலம் இப்படி கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு கைமாறி விட்டது. இங்கிருந்து மட்டும் 10 இலட்சம் பழங்குடி மக்களும் விவசாயிகளும் வெளியேற்றப்பட இருக்கிறார்கள்.




சத்தீஸ்கர் மாநிலப் பழங்குடியினரின் வாழ்வாதாரங்களை அழித்துப் பீதியூட்டி வரும் அரசு ஆதரவு பெற்ற கூலிப்படையான சல்வாஜூடும்.

பழங்குடி மக்களோ வெளியேற மறுக்கிறார்கள். போஸ்கோ, டாடா, வேதாந்தா, மிட்டல், ஸ்டெர்லைட், ரிலையன்ஸ், ஜின்டால் என ஒவ்வொரு நிறுவனத்துக்கு எதிராகவும் ஆங்காங்கே உள்ள மக்கள் போராடுகிறார்கள். அலுமினிய உருக்காலையை வேதாந்தா நிறுவனம் கட்டி முடித்து விட்டது. ஆனால், பாக்சைட் மலையை நெருங்க முடியவில்லை. கோபால்பூரில் டாடாவின் இரும்பாலை தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. ஜார்கண்ட் மாநிலத்தில் சுரங்கம் தோண்டி தங்கமும் பிளாட்டினமும் எடுக்க வந்த ஜின்டால் நிறுவனம் அங்கே நுழையவே முடியவில்லை. இவையெல்லாம் மாவோயிஸ்டு ஆயுதக் குழுக்கள் நடத்திய தாக்குதல்கள் அல்ல; தங்கள் மண்ணைப் பறிக்கும் மறுகாலனியாக்கத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள மக்களின் போராட்டங்கள். எனவே, மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் தொடுக்கப்பட்டிருக்கும் இந்தப் போர் உண்மையில் மக்களுக்கு எதிரான போர்!

‘‘நமது நாட்டில் இயற்கை வளங்கள் நிறைந்துள்ள பகுதிகளில் இடதுசாரித் தீவிரவாதம் தொடர்ந்து வளருமானால், அது முதலீட்டுச் சூழலைப் பெரிதும் பாதிக்கும்’’ என்று இந்தப் போருக்கான காரணத்தை நாடாளுமன்றத்தில் பச்சையாகப் பேசியிருக்கிறார், மன்மோகன் சிங். தரகு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு முதலாளிகளின் பகற்கொள்ளையைப் பாதிக்கும் விதத்தில் யார் போராடினாலும், அவர்களுக்கு எதிராக அரசு போர் தொடுக்கும் என்பதே மன்மோகன் சிங் கூறும் செய்தி. இந்தப் போர், மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போர் மட்டுமல்ல, இது மக்களுக்கு எதிரான போர்.

மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் கூர்முனையாக இருக்கும் நக்சல்பாரி இயக்கத்தைக் குறிவைத்து அழிப்பதன் மூலம்தான், உடனடியாகவும் நீண்டகால நோக்கிலும் அரசியல் ரீதியில் தன்னைத் தற்காத்துக் கொள்ள இயலும் என்பதை ஆளும் வர்க்கம் அறிந்தே இருக்கிறது. அதன் விளைவுதான் ‘‘ஆபரேசன் கிரீன் ஹண்ட்’’. இதற்காகத்தான் இந்திய இராணுவமும் போலீசும் அங்கே இறக்கப்பட்டிருக்கின்றன என்பது ஊரறிந்த இரகசியமாகிவிட்டது.

**மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் கூர்முனையாக இருக்கும் நக்சல்பாரி இயக்கத்தைக் குறிவைத்து அழிப்பதன் மூலம்தான், அரசியல் ரீதியில் தன்னைத் தற்காத்துக் கொள்ள இயலும் என்பதை ஆளும் வர்க்கம் அறிந்தே இருக்கிறது. அதன் விளைவுதான் ‘‘ஆபரேசன் கிரீன் ஹண்ட்’’.**




இது தண்டகாரண்யாவுடன் முடிவடைகின்ற வேட்டை அல்ல. வெளியேற்றப்படுவதும் உரிமை பறிக்கப்படுவதும் பழங்குடி மக்கள் மட்டுமல்ல. பன்னாட்டு மீன்பிடி நிறுவனங்களுக்காக மீனவர்களை அவர்களுக்குச் சொந்தமான கடலிலிருந்து விரட்டும் சதி, பாரம்பரிய விவசாய அறிவையும் மரபையும் கிரிமினல் குற்றமாக்கும் சட்டம், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக நடத்தப்படும் விவசாயிகளின் வெளியேற்றங்கள், விலை நிர்ணயம் என்ற பெயரில் கரும்பு விவசாயிகளின் கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் சுருக்கு.. எனப் பல வடிவங்களில், பல்வேறு தரப்பு மக்கள் மீதும் தீவிரமடைந்து வருகிறது மறுகாலனியாதிக்கத் தாக்குதல்.

இந்த மறுகாலனியாக்க கொள்கைகள் அனைத்திலும் எல்லா ஓட்டுக் கட்சிகளும் கருத்து வேறுபாடின்றி ஓரணியில் நிற்கின்றன. கொள்ளையின் ஆதாயங்களைப் பங்கு போட்டுக் கொள்வதற்கு மட்டுமே, அவை தமக்குள் மோதிக் கொள்கின்றன.

சீரழிந்து நாறிக்கொண்டிருக்கும் இந்த அரசியலுக்கு வெளியே மக்கள் நலனுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்களாக, தன்னலனைத் துறந்தவர்களாக, இலஞ்சத்தால் விலைக்கு வாங்க முடியாதவர்களாக, பட்டங்களுக்கும் பதவிகளுக்கும் பல்லிளிக்காதவர்களாக, இழப்புக்கும் தியாகத்துக்கும் அஞ்சாதவர்களாக - நாடெங்கும் அரசியல் களத்தில் நிற்பவர்கள் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் மட்டும்தான். ஓட்டுக்கட்சிகள் மீது மக்கள் மென்மேலும் நம்பிக்கை இழந்து வரும் சூழலில், மறுகாலனியாக்கத் தாக்குதல்களின் தீவிரம், மக்களை நக்சல்பாரிப் புரட்சியாளர்களை நோக்கி நகர்த்துகிறது.



அடுக்கடுக்காகத் தொடுக்கப்படும் மறுகாலனியாக்கத் தாக்குதல்களால் வாழ்க்கை பறிக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு, எதிர்த்துக் கேட்டால் ஒடுக்கப்பட்டு, கிடிக்கப்பட்ட வெடிமருந்தாக வெடிக்கக் காத்திருக்கிறார்கள் மக்கள். இதை அரசு அறிந்தே இருக்கிறது. இந்த வெடியின் திரியும் அதனைப் பற்றவைக்கும் பொறியும் நக்சல்பாரிகள் தான் என்ற உண்மையும் அரசுக்குத் தெரிந்தே இருக்கிறது. எனவேதான், திரியைக் கிள்ளுவதில் கவனம் செலுத்துகிறது. மறுகாலனியாக்க எதிர்ப்பின் கூர்முனையை - நக்சல்பாரி இயக்கத்தை முறிக்க முயல்கிறது. ''ஆபரேசன் கிரீன் ஹண்ட்'' என்ற நக்சல் வேட்டையின் நோக்கம் இதுதான்.



''எங்களது மலையை வேதாந்தா நிறுவனம் பறித்துக்கொள்ள விடமாட்டோம்''
— ஒரிசாவின் கோண்ட் பழங்குடி மக்களின் போராட்டம்.

- **நக்சல் வேட்டை என்ற பெயரில் நடத்தப்படும் நர வேட்டைப் போரைத் தடுத்து நிறுத்தப் போராடுவோம்!**
- **பன்னாட்டுக் கம்பெனிகள், தரகு முதலாளிகளுடன் போடப்பட்டிருக்கும் அனைத்து தேசத்துரோக ஒப்பந்தங்களையும் கிழித்தெறிவோம்!**
- **போராடும் பழங்குடி மக்களுக்குத் துணை நிற்போம்! மறுகாலனியாக்க எதிர்ப்புப் போராட்டங்களைத் தீவிரப்படுத்துவோம்!**

●

# தெலுங்கானா ஆதரவும் எதிர்ப்பும்: புதைந்துள்ள உண்மைகள்

**தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தின் வேட்கையாகவே தனிமாநிலக் கோரிக்கை அமைந்துள்ளது.**

இந்திய அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது, தெலுங்கானா தனி மாநில விவகாரம். தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியின் தலைவரான சந்திரசேகரராவின் தொடர் உண்ணாவிரதம், உஸ்மானியா பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டம், உயிர்த்தியாகங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து, காங்கிரசு தலைவி சோனியாவின் பிறந்த நாளான டிசம்பர் 9-ஆம் தேதியன்று, தெலுங்கானாவைத் தனி மாநிலமாக்க கொள்கையளவில் ஒப்புக் கொண்டது, ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு. இதை எதிர்த்து ஆந்திராவின் பிற பகுதிகளில் போராட்டங்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகல், அதைத் தொடர்ந்து, ஒருமித்த கருத்து உருவாகும்வரை உடனடியாகத் தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்கப் போவதில்லை என்று காங்கிரசு ஆட்சியாளர்கள் அடித்த பல்டி, அதை எதிர்த்து தெலுங்கானாவில் மீண்டும் போராட்டம் - என ஆந்திர மாநிலம் தொடர் போராட்டங்களால் நிலைகுலைந்து போயுள்ளது.

•••

கடலோர மாவட்டங்கள், ராயலசீமா, தெலுங்கானா என மூன்று பெரும் பிராந்தியங்களைக் கொண்டதுதான் ஆந்திரப் பிரதேசம். இதில் தெலுங்கானா ஒப்பீட்டளவில் பெரியது. வாரங்கல், அதிலாபாத், கம்மம், மெஹ்பூப் நகர், ரங்கா ரெட்டி, கரீம் நகர், நிஜாமாபாத், மேடக், நலகொண்டா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிதான் தெலுங்கானா என்றழைக்கப்படுகிறது. முன்பு நிஜாம் சமஸ்தானமாக இருந்த காரணத்தால், தெலுங்கானாவில் பேசப்படும் தெலுங்கில் உருது கலப்பு அதிகமாக உள்ளது. கம்யூனிஸ்டுகள் தலைமையிலான மாபெரும் தெலுங்கானா பேரெழுச்சியைத் தொடர்ந்து, போலி சுதந்திரத்துக்குப் பின்னர் கடுமையான அடக்குமுறைக்குப் பிறகு, தெலுங்கானா சமஸ்தானம் இந்தியாவுடன் கட்டாயமாக இணைக்கப்பட்டது.

காந்தியவாதியான பொட்டி சிறீராமுலு, தெலுங்கு பேசும் மக்களுக்கான தனி மாநிலம் கோரி உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்ததன் விளைவாக, அன்று சென்னை ராஜதானியில் இருந்த ஆந்திரப் பிரதேசம், மொழிவழி மாநிலமாக 1953-இல் பிரிக்கப்பட்டது. அப்போது கர்நூல்தான் அதன் தலைநகர். பின்னர், மொழிவாரி மாநிலம் என்ற அடிப்படையில் தெலுங்கு மொழி பேசும் மக்களைக் கொண்ட தெலுங்கானாவையும் உள்ளடக்கிய ஆந்திரப் பிரதேசமாக 1956-இல் ஒருங்கிணைக்கப்பட்டது. தெலுங்கானா பிராந்தியத்தைக் கொண்ட நிஜாம் சமஸ்தானத்தின் தலைநகராக இருந்த ஐதராபாத், ஆந்திரப் பிரதேசத்தின் தலைநகரானது. ஒட்டுமொத்த ஆந்திராவின் மக்கள்தொகையில் நான்கு சதவீதம் மட்டுமே உள்ள ரெட்டிகளும் சவுத்திரிகளும் தெலுங்கானா பகுதியில் அரசாங்கத்தால் குடியமர்த்தப்பட்டனர். நிலப்பிரபுக்களான இவர்களின் ஆதிக்கம், அரசாங்கப் பதவிகளில் இவர்கள் பெரும்பாலானவற்றைக் கைப்பற்றிக் கொண்டதன் காரணமாக, தெலுங்கானா பிராந்திய நடுத்தர வர்க்கத்தினர் ஆந்திராவுடன் இணைய மறுத்து, தனி மாநிலமாக்கக் கோரினர்.




அதன் பின்னர், 1961 தேர்தலுக்குப் பிறகு உருவாகும் அம்மாநில சட்டசபை, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஆந்திரப் பிரதேசத்தில் இணைவதாகத் தீர்மானம் நிறைவேற்றினால் மட்டும், தெலுங்கானா பிராந்தியத்தை ஆந்திரப் பிரதேசத்துடன் இணைப்பது; இல்லையேல், தனிமாநிலமாக நீடிக்க அனுமதிப்பது என்று அன்றைய மாநில மறுசீரமைப்புக் கமிஷன் பரிந்துரை செய்தது. அப்பரிந்துரையையும் இதர எழுதப்படாத ஒப்பந்தங்களையும் மைய அரசு கைகழுவியது. இதனால் தெலுங்கானா பிராந்திய நடுத்தர வர்க்கத்தினர் அதிருப்தியடைந்தனர். தனி மாநிலக் கோரிக்கை அவ்வப்போது குமுறலாக வெளிப்பட்டு வந்தது.

ஆந்திராவின் பிற பகுதிகளைச் சேர்ந்த நிலப்பிரபுக்கள்-முதலாளிகளின் ஆதிக்கம், கல்வி - வேலைவாய்ப்பு, அரசாங்கப் பதவிகளில் தெலுங்கானா நடுத்தர வர்க்கத்துக்கு உரிய பங்கு கிடைக்காமை ஆகியவற்றினால் ஏற்பட்ட குமுறல்களின் காரணமாக 1969-இல், தெலுங்கானா பகுதியில் மாணவர்கள்-இளைஞர்கள்

தனித் தெலுங்கானா மாநிலம் கோரிப் போராட்டங்களை நடத்தினர். ஏறத்தாழ 360 பேர் அப்போராட்டத்தில் உயிரிழந்தனர். கடும் அடக்குமுறைக்குப் பிறகு, அந்தப் போராட்டம் படிப்படியாக நீர்த்துப் போனது.

தனியார்மய-தாராளமயமாக்கலைத் தொடர்ந்து கல் குவாரி, நிலக்கரி மற்றும் சுண்ணாம்புக்கல் சுரங்கங்கள், வீட்டுமனைத் தொழில், தகவல் தொழில்நுட்பத்துறை, சேவைத் துறை, சினிமாத் துறை, காடுகள் முதலானவற்றில் தெலுங்கானாவுக்கு வெளியேயுள்ள பிற மாவட்டங்களின் புதுப் பணக்கார மாஃபியா கும்பல்களின் ஆதிக்கமும் சூறையாடலும் தெலுங்கானா பிராந்தியத்தில் தீவிரமடைந்தன. ஆடம்பர, உல்லாச, களிவெறியாட்டங்களில் இக்கும்பல் கொட்டமடித்தது. இப்புதுப் பணக்கார கும்பலின் வாரிசுகள் உயர்கல்வி, வேலைவாய்ப்பு, அரசாங்கப் பதவிகளைப் பெருமளவில் கைப்பற்றிக் கொண்டனர். தெலுங்கானா நடுத்தர வர்க்கம் அவர்களோடு போட்டியிட இயலாமல் குமுறியது.

அதன் எதிரொலியாக, தெலுங்கு தேசம் கட்சியிலிருந்து விலகிய சந்திரசேகர ராவ் தலைமையில், தெலுங்கானா ராஷ்டிர சமிதி என்ற புதிய கட்சி 2001-இல் உருவாகியது. தெலுங்கானாவைத் தனி மாநிலமாக்க வேண்டும் என்பதே இக்கட்சியின் மையமான கோரிக்கை.

ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் மறைவைத் தொடர்ந்து, காங்கிரசில் நிலவும் கோஷ்டிச் சண்டையைச் சாதகமாக்கிக் கொண்டு, தோல்வியடைந்து கிட்டத்தட்ட முடமாகிவிட்ட தமது கட்சிக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கத்துடன், தனித் தெலுங்கானா கோரி கடந்த நவம்பர் இறுதியிலிருந்து உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார், சந்திரசேகர ராவ். அதை ஆதரித்து மாணவர்களும் இளைஞர்களும் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றனர். மாணவர்கள் மீதான போலீசின் கண்மூடித்தனமான தடியடித் தாக்குதலைத் தொடர்ந்து ஆசிரியர்கள், பத்திரிகையாளர்கள், வழக்குரைஞர்கள், அறிவுத்துறையினர் - என அம்மாநிலமெங்கும் போராட்டத்தை ஆதரித்து நடுத்தர வர்க்கத்தினர் அணிதிரண்டனர். தனித் தெலுங்கானா மாநிலம் கோரி சிலர் தற்கொலை செய்து கொண்டதும், உணர்ச்சிமிகு போராட்டமாக அது மாறத் தொடங்கியது.



தனித் தெலுங்கானா மாநிலம் உருவாக்க கொள்கை அளவில் மைய அரசு ஒப்புக் கொண்டதையடுத்து, தனது உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துக் கொள்ளும் நடுத்தர வர்க்கத்தின் 'திடீர் தியாகி' சந்திரசேகர ராவ்.

இதற்கு மேலும் தெலுங்கானா தனிமாநிலக் கோரிக்கையைத் தட்டிக் கழித்தால், தெலுங்கானா பிராந்தியத்தில் காங்கிரசு செல்லாக்காசாகிவிடும் என்பதாலும், இதேபோல நாட்டின் இதர பகுதிகளிலும் தனி மாநிலம் கோரி போராட்டங்கள் பெருகத் தொடங்கிவிடும் என்ற அச்சத்தாலும், போராட்டத்தைச் சாந்தப்படுத்தி நீர்த்துப் போக வைக்கும் உத்தியுடனும் காங்கிரசு ஆட்சியாளர்கள் தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கையை கொள்கையளவில் ஏற்பதாக அறிவித்தனர். தனி மாநில அறிவிப்பைத் தொடர்ந்து சந்திரசேகர ராவ், உண்ணாவிரதத்தைக் கைவிட்டதோடு, போராட்டங்களை நிறுத்திக் கொள்வதாக அறிவித்து, 2014-க்குள் தெலுங்கானா தனி மாநிலத்தை உருவாக்கித் தருமாறு மைய அரசிடம் கோரினார்.

தனித் தெலுங்கானா கோரி உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம்: புதுப் பணக்கார மாஃபியா கும்பலுடன் போட்டி போடமுடியாத நடுத்தர வர்க்கக் குமுறலின் வெளிப்பாடு.



ஆனால்,தெலுங்கானா மாநிலம் உருவானால், அது இன்றைய ஆந்திரப் பிரதேசத்துக்கு இழப்பாக இருக்கும், தலைநகரான ஐதராபாத் தெலுங்கானாவுக்குப் போய்விடும் என்றெல்லாம் வாதங்களை வைத்து, தெலுங்கானா கோரிக்கையை ஆந்திராவின் பிற பகுதிகளில் உள்ள பெரு முதலாளிகளும், புதுப் பணக்கார நில மாஃபியா-சுரங்க மாஃபியாக்களும் எதிர்க்கின்றனர். தெலுங்கானா பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவதும் இவர்கள்தான். ஐதராபாத் மற்றும் தெலுங்கானா பிராந்தியத்திலுள்ள பெரு நகரங்களில் சினிமாத் துறை, வீட்டுமனைத் துறை, தகவல் தொழில்நுட்பத் துறை முதலானவற்றில் கோடிகோடியாய் முதலீடு செய்து சூறையாடுவதும் இந்தக் கும்பல்கள்தான். இவர்கள்தான் இப்போது தெலுங்கானா

எதிர்ப்புப் போராட்டத்தை பின்னணியிலிருந்து இயக்கு கிறார்கள்.

அரசியல் சட்டப்படி, புதிய மாநிலத்தை உருவாக்கு வதற்கான மசோதா, நாடாளுமன்றத்தில்தான் அறிமுகப் படுத்தப்பட வேண்டும். அதன் பிறகு, அரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று, கருத்தறிவதற்காக அம்மாநிலச் சட்ட மன்றத்துக்கு அனுப்பப்பட வேண்டும். சட்டமன்றத் தின் கருத்தை நாடாளுமன்றம் ஏற்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் காங்கிரசு ஆட்சியாளர் களோ, இத்தீர்மானம் ஆந்திர சட்டமன்றத்தில் அறி முகப்படுத்தப்பட்டு ஒருமித்த கருத்தின்படி முடிவு செய் யப்படும் என்று கூறுகின்றனர். காங்கிரசின் நிதியாதார மாக உள்ள புதுப் பணக்கார மாஃபியா கும்பலைச் சாந் தப்படுத்தவும், ஒருமித்த கருத்து ஏற்படவில்லை என்று காரணம் காட்டி,மீண்டும் இழுத்தடிக்கவுமே காங்கிரசு கயவாளிகள் முயற்சிக்கின்றனர். இதனாலேயே, தனித் தெலுங்கானாவை எதிர்த்து நடக்கும் போராட்டங் களைக் காரணம் காட்டி, தீர்மானம் நிறைவேறாத வகை யில் ஆந்திர சட்டமன்ற நடவடிக்கைகள் ஒத்திவைக்கப் பட்டுள்ளன.


ஆந்திராவின் பிற பகுதிகளில், புதுப்பணக்கார மாஃபியா கும்பலால் வழிநடத்தப்படும் தனித் தெலுங்கானா எதிர்ப்புப் போராட்டம்.

தெலுங்கானா தனி மாநிலம் உருவாக்க மைய அரசு கொள்கை அளவில் இசைவு தெரிவித்துள்ளதன் எதிரொ லியாக, பல்வேறு பெரிய மாநிலங்களிலும் இத்தகைய கோரிக்கை எழுந்துள்ளது. வன்னியர் நாடு என்ற கோரிக் கையுடன் தமிழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று முன்பு கோரி வந்த பா.ம.க.வின் ராமதாசு, இப் போது மீண்டும் சென்னையைத் தலைநகராகக் கொண்ட வட தமிழ்நாடு என்றும், மதுரையைத் தலை நகராகக் கொண்ட தென் தமிழ்நாடு என்றும் பிரிக்க விரும்புவதாக சாதிய அடிப்படையில் அறிவித்துள்ளார். இந்திய அரசியல் சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் கடந்த 50 ஆண்டுகளில் 12 புதிய மாநிலங்கள் உருவாகியுள்ள தைக் காட்டி, உ.பி. மாநிலத்தை மூன்றாகப் பிரிக்கக் கோருகிறார், மாயாவதி. உ.பி.-பீகாரிலிருந்து போஜ்பூர், அசாமிலிருந்து போடோலாந்து, உ.பி.-ம.பி.யிலிருந்து பண்டேல்கண்ட், மகாராஷ்டிராவிலிருந்து மரத்வாடா மற்றும் விதர்பா, ஒரிசாவிலிருந்து மகா கவுசல், பீகாரி லிருந்து மிதிலாஞ்சல், ராஜஸ்தானிலிருந்து முரு பிர தேஷ், உ.பி.யிலிருந்து பூர்வாஞ்சல், குஜராத்திலிருந்து சௌராஷ்டிரா - எனத் தேசிய இன அடிப்படையில் அல்லாமல், ஒரே இனம் - ஒரே மொழி பேசும் மாநி லத்திலேயே, பிராந்திய அடிப்படையில் - சாதிய அடிப் படையில், மொழிச் சிறுபான்மையினர் அடிப்படையில் தனி மாநிலக் கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன.

முதலாளித்துவ அரசியல் பொருளாதாரக் கட்டுமா னத்தில், நிர்வாகத்தைத் துறை வாரியாகப் பிரிப்பதும், அது போல மாநிலங்களையும், மாவட்டங்களைப் பிரிப் பதும் நடக்கக்கூடியதுதான். அவ்வாறு மாவட்டங் களைப் பிரிக்கக் கோரி மக்கள் போராடுவதை ஜன நாயகக் கோரிக்கையாகக் கருத முடியாது. பெரம்பலூர் மாவட்டத்துடன் அரியலூரைச் சேர்க்கக் கூடாது என்று அப்பகுதி மக்கள் நடத்திய போராட்டமும், செங்கல்பட்டில் இருந்து மாவட்ட நீதிமன்றங்களை காஞ்சிபுரத் துக்கு மாற்ற வேண்டும், மாற்றக் கூடாது என்று அந்தந்த பகுதிவாழ் மக்கள் நடத் திய போராட்டமும், அரசுத் திட்டங்கள்-சலுகைகளைப் பெறுவதற்கான பொருளா தாரப் போராட்டம்தானே தவிர, அது முற் போக்கான - ஜனநாயகக் கோரிக்கையுடன் நடத்தப்படும் போராட்டமல்ல.

இப்படித்தான் தெலுங்கானா தனி மாநிலப் போராட்டத்தையும் பார்க்க முடி யும். பிராந்திய உணர்விலிருந்து எழும் பொருளாதாரவாதக் கோரிக்கைதான் இது. ராயலசீமா மற்றும் கடற்கரையோர மாவட் டங்களைச் சேர்ந்த புதுப் பணக்கார மாஃபியா கும்பல்களின் ஆதிக்கம்-சூறை யாடலைக் கண்டு குமுறி, அவர்கள் இடத்தை தாங்கள் பிடிக்க வேண்டும் என்ற ஏக்கத்திலிருந்துதான் தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கைக்கான போராட் டம் நடக்கிறது. தெலுங்கானா பிராந்தியத்தில் வீட்டு மனை, கல் குவாரிகள், கனிம சுரங்கங்கள், காட்டுவளம் முதலானவற்றைச் சூறையாடி ஆதிக்கம் செலுத்திவரும் புதுப் பணக்கார மாஃபியா கும்பல்களுக்கு எதிராக தெலுங்கானா பிராந்திய மக்கள் இதுவரை எந்தவொரு போராட்டத்தையும் கட்டியமைக்கவில்லை. மாறாக, தாங்கள் வளர்ச்சித் திட்டங்களில் புறக்கணிக்கப்படுவ தாக, பின்தங்கிய நிலையில் இருத்தி வைக்கப்பட்டுள்ள தாகவே நடுத்தர வர்க்கம் குமுறுகிறது. உயர்கல்வி-வேலைவாய்ப்பு, அரசாங்கப் பதவிகள் முதலானவற்றில் தாங்களும் அமர வேண்டும் என்ற வேட்கையே தனி மாநிலக் கோரிக்கையாக எழுந்துள்ளது.

ஆனால் மாவோயிஸ்டுகளோ, அரசுக்கு எதிரான எந்தப் போராட்டத்தையும் நாம் ஆதரிக்க வேண்டும்,

அது முற்போக்கான போராட்டம் என்று கருதுகின்றனர். போராட்டத்தின் கோரிக்கையைப் பற்றிப் பரிசீலிக்காமல், அப்போராட்டத்தைப் போர்க்குணமிக்கதாக மாற்றுவதன் மூலம், அதை புரட்சிகரப் போராட்டமாக வளர்த்தெடுக்க முடியும் என்றும் குருட்டுத்தனமாக நம்புகிறார்கள். ஏற்கெனவே, காலிஸ்தான் போராட்டத்தை இந்த நோக்கத்தில்தான் ஆதரித்தனர். பின்னர், 80-களில் தனித் தெலுங்கானா போராட்டத்தை முன்னெடுப்பது என்ற பெயரில் தெலுங்கானா பகுதியில் சில சாகசவாத நடவடிக்கைகளிலும் இறங்கினர். இப்போது நடந்த தனித் தெலுங்கானா போராட்டத்தையும் இந்த அடிப்படையிலேயே ஆதரித்துப் பத்திரிகைகளுக்குப் பேட்டியளிக்கின்றனர்.


தனித் தெலுங்கானாவை ஆதரித்து ஆசிரியர்கள்-வழக்குரைஞர்கள் நடத்தும் மறியல் போராட்டம்: வீதிக்கு வந்த நடுத்தர வர்க்க ஆதங்கம்.

ஒட்டுக்காக, சந்தர்ப்பவாதமாக பல கட்சிகள் தனி மாநிலக் கோரிக்கையை ஆதரிக்கின்றன. தெலுங்கானா தனி மாநிலக் கோரிக்கைக்கான போராட்டத்தை இந்துவெறி பா.ஜ.க.வும் ஆதரிக்கிறது. அது, ஒரே மொழி பேசும் ஒரு தேசிய இனத்தைக் கொண்ட மாநிலத்தை, நிர்வாக வசதிக்காகப் பிரிப்பதில் தவறில்லை என்று வாதிடுகிறது. இதன்மூலம் நிர்வாகம் எளிமையானதாகவும் சிறப்பாகவும் அமையும் என்கிறது. ஆனால் பா.ஜ.க.வின் நோக்கம் வேறானது. ஒரே மொழி பேசும் ஒரே இனத்தைச் சேர்ந்த மாநிலம் என்றால், அங்கு தமிழ்நாடு போல தேசிய இனப் போராட்டங்கள் எழும்; தேசிய ஒருமைப்பாடு கந்தலாகிப் போகும்; ஒரே இனத்தை பல மாநிலங்களாகக் கூறு போட்டால், அத்தகைய போராட்டங்கள் எழுவது நீர்த்துப்போகும். எனவே, தேசிய இன-மொழி அடையாளங்களுக்கு அப்பால், இந்துத்துவ அடிப்படையில் 'தேசிய' ஒருமைப்பாட்டை நிறுவவே அது விழைகிறது. காங்கிரசும் இதே நோக்கத்தைத்தான் கொண்டுள்ளது.

மேலும், பெரிய மாநிலம் என்றால் பிராந்திய கட்சிகள் செல்வாக்கு செலுத்தி மைய அரசை ஆட்டிப் படைக்கின்றன. எனவே, மாநில அளவில் செல்வாக்கு பெற்றுள்ள பிராந்திய கட்சிகள் ஆட்சியதிகாரத்தில் கூடுதல் பங்கு கேட்டு நிர்ப்பந்திப்பதைத் தடுக்க, சிறிய மாநிலங்களாகப் பிரிக்கலாம் என்பதே ராகுல் காந்தியின் பிரித்தாளும் சூழ்ச்சித் திட்டம். இதனால்தான் வெள்ளோட்டமாக இப்போது தெலுங்கானாவைப் பிரிப்பதாக அறிவித்து, விளைவுகளைப் பரிசீலித்து, அடுத்த கட்டமாக பிற மாநிலங்களையும் பிரிக்க மைய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. முன்போல, மொழி-இன அடிப்படையில் அல்லாமல், நிர்வாக அடிப்படையிலான பிரிவினை கொண்டதாக, பெரிய மாநிலங்களை மாற்றியமைக்கும் நோக்கத்துடன்தான், தற்போது மாநில மறுசீரமைப்புக் கமிசன் உருவாக்கப்படுகிறது.

மறுபுறம், ஒரே தேசிய இனத்தைக் கொண்ட பெரிய மாநிலம் என்றால், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் மறுகாலனியாக்கச் சூறையாடலுக்கான ஒப்பந்தங்களைப் போடுவதில் பல சிக்கல்கள் எழுகின்றன. பிராந்திய நலன்களை முன்வைத்து, அரசியல் ஆதாயத்துக்காக எதிர்க்கட்சிகள் இத்தகைய ஒப்பந்தங்களை எதிர்த்து நிறைவேற்ற முடியாமல் இழுத்தடிக்கின்றன. சிறிய மாநிலங்கள் என்றால், பின்தங்கிய மாநிலத்தின் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் எதிர்க்கட்சிகளை வாயடைக்கச் செய்து, இத்தகைய மறுகாலனியச் சூறையாடலுக்கான ஒப்பந்தங்களை அதிக சிக்கல் இல்லாமல் நிறைவேற்ற முடிகிறது. இதற்கு, சிறிய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட ஜார்கண்டும், சட்டிஸ்கரும் சான்றுகளாக உள்ளன. ஏகாதிபத்தியவாதிகள் இந்த நோக்கத்தோடுதான் நிர்வாக வசதிக்காக சிறிய மாநிலங்களாகப் பிரிப்பதை ஆதரிக்கின்றனர். ஏகாதிபத்தியவாதிகளின் விருப்பத்தையே தேசியக் கட்சிகளும்எதிரொலிக்கின்றன. இந்த உண்மைகளைக் காண மறுத்து, தனி மாநிலக் கோரிக்கையை குருட்டுத்தனமாக ஆதரிப்பதும் எதிர்ப்பதும் அடிப்படையிலேயே தவறானதாகும்.

எனவே தற்போது தனி தெலுங்கானா கோரி நடக்கும் போராட்டம், பொருளாதாரவாதக் கோரிக்கை தானே தவிர, அது தேசிய இன உரிமைக்கான போராட்டமே அல்ல. அரசுக்கு எதிரான போராட்டம், மக்களின் நீண்டகால விருப்பம் என்பதை வைத்து அதை முற்போக்கான-ஜனநாயகக் கோரிக்கையுடன் நடக்கும் போராட்டமாகவும் கருத முடியாது. அதேசமயம், தெலுங்கானா பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்தி சூறையாடிவரும் புதுப் பணக்கார மாஃபியா கும்பல்கள், தெலுங்கானா பிரிவினையை எதிர்த்து, ஒரே ஐக்கியப்பட்ட ஆந்திரா என்ற கோரிக்கையுடன் நடத்தும் எதிர்ப் போராட்டமும் நியாயமானதல்ல. அரசாங்கப் பதவிகளுக்கும் சுரண்டலுக்கும் ஆதிக்கத்துக்குமான போட்டா போட்டியில், பாட்டாளி வர்க்கம் இதில் எந்தத் தரப்பையும் ஆதரிக்க முடியாது.

● பாலன்

## நேபாளம்:

# கிளர்ந்தெழும் மக்கள்திரள் போராட்டங்கள் கந்தலாகிவரும் இந்திய அரசின் சதிகள்

### சுயாட்சிப் பிரதேசங்களை அறிவித்து, நேபாள பொம்மையாட்சியை முடக்கியுள்ளனர், மாவோயிஸ்டுகள்.

அண்டை நாடான நேபாளம், கடந்த மூன்று மாதங்களாக மக்கள்திரள் போராட்டங்களால் குலுங்குகிறது. ''அந்நிய எஜமானர்களிடம் சரணடையாதே! தேசிய-ஜனநாயக நேபாள மக்கள் கூட்டுத்துவ குடியரசு வாழ்க!'' என்ற முழக்கங்களுடன், மாவோயிஸ்டுகள் தலைமையில் வீதியெங்கும் மக்கள் நடத்திவரும் ஆர்ப்பாட்டங்கள், தீவட்டி ஊர்வலங்கள், மறியல் போராட்டங்களால் அந்நாடே அதிர்கிறது. இந்திய மேலாதிக்கமும் அதன் சதிகளும் நேபாளம் எங்கும் காறி உமிழப்படுகிறது.

நேபாளத்தின் புதிய இராணுவத் தலைமைத் தளபதி சத்ரமான் சிங் குருங், கடந்த டிசம்பர் மாதத்தில் டெல்லிக்கு வந்து இந்திய இராணுவத் தலைமைத் தளபதி தீபக் கபூரையும் அரசுத் தலைவர் பிரதீபா பட்டீலையும் சந்தித்திருக்கிறார். அரசுமுறை மரியாதை நிமித்தம் இந்தச் சந்திப்பு நடந்ததாகக் கூறப்பட்டாலும், மாவோயிஸ்டுகள் மீது இராணுவத் தாக்குதல் நடத்துவதற்கான திட்டம் பற்றி விவாதிக்கவே அவர் வந்திருக்கிறார்.

2006-ஆம் ஆண்டு போடப்பட்ட அமைதி ஒப்பந்தப்படி, மாவோயிஸ்டுகளின் இராணுவப் படை நேபாள இராணுவத்துடன் இணைக்கப்பட்டு, புதிய நேபாள இராணுவம் கட்டியமைக்கப்பட வேண்டும். ஆனால், இந்தியத் தலைமைத் தளபதியோ, அவ்வாறு மாவோயிஸ்டு இராணுவப் படைகள் நேபாள இராணுவப் படைகளுடன் இணைக்கப்படக்கூடாது என்று நேபாள இராணுவத் தளபதியைச் சந்தித்தபோது வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். பசுபதிநாதர் கோயில் தலைமைப் பூசாரி விவகாரம் போலவே, நேபாள நாட்டின் உள்விவகாரங்களில் அப்பட்டமாகத் தலையிடும் மேலாதிக்கம்தான் இது.

மன்னராட்சிக்கு எதிராக நடந்த மக்கள் எழுச்சியை ஒடுக்கிய, மன்னர் உள்ளிட்ட குற்றவாளிகளைப் பற்றிய விசாரணை நடத்த, மன்னராட்சி வீழ்ந்த பிறகு ரயாமஜ்ஹி கமிசன் நிறுவப்பட்ட போதிலும், தற்போதைய நேபாள கூட்டணி பொம்மை அரசு அந்த அறிக்கையை இன்றுவரை வெளியிடாமல் மறைத்துள்ளது. மேலும், தோரான்ஜங் பகதூர் சிங் என்ற இரண்டாம் நிலையிலுள்ள தளபதிக்குப் பதவி உயர்வு அளித்துள்ளது. காத்மண்டு நகரில் இயங்கிவரும் ஐ.நா. கண்காணிப்புக் குழுவும் பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் இம்முடிவை ரத்து செய்யுமாறு கோரியுள்ள போதிலும், விதிமுறைகளை மீறி அவரைத் தலைமைத் தளபதியாக்க நேபாள அரசு தீர்மானித்துள்ளது. இப்படி, அடுத்தடுத்து நேபாள பொம்மை அரசு அமைதி ஒப்பந்தத்துக்கு எதிராகவும், இந்திய - அமெரிக்க மேலாதிக்கத் தலையீட்டுக்கு விசுவாசமாகவும் செயல்பட்டு வருகிறது.

ஈழ விடுதலைப் போரை அழித்தொழிக்க இந்தியா எப்படிச் செயல்பட்டதோ, அதைவிட மூர்க்கமாகவும் வெளிப்படையாகவும் நேபாளப் புரட்சியை அழித்தொழிக்கக் கிளம்பியுள்ளது. ஈழப் போர் போலவே, இந்தியாவின் ஆதரவுடன் நேபாள இராணுவம் மாவோயிஸ்டு அழிப்புப் போரைத் தொடுக்கலாம் என்ற

நேபாள மக்கள் குடியரசை ஆதரித்தும், இந்தியாவின் மேலாதிக்கத் தலையீட்டை எதிர்த்தும் காத்மண்டு நகரில் மாவோயிஸ்டுகள் நடத்திய தீவட்டி ஊர்வலம். நேபாள பொம்மையாட்சியை எதிர்த்து, காத்மண்டு நகரை முற்றுகையிட்டு மாவோயிஸ்டுகள் நடத்திய பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி. (வலது)





அபாயம் நிலவுகிறது. இந்நிலையில், அத்தகைய போர்த் தாக்குதல் நடத்தப்பட்டால், அதை எதிர்கொண்டு முறியடிக்கவும், எவ்வித அந்நியத் தலையீடுமின்றி நேபாள மக்களின் கூட்டுக் குடியரசைக் கட்டியமைக் கவும் மாவோயிஸ்டுகள் தயாராகி வருகிறார்கள்.

நேபாளத்தில் நெவர், மகர், தரு, மைதிலி, தமாங் முதலான மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, நேபாள மொழியின் மேலாதிக்கம் தான் நிலவுகிறது. இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய நேபாள மொழி பேசும் பார்ப்பனர்களும் சத்திரியர்களும் அரசியலிலும் பொருளாதாரத்திலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மாவோயிஸ்டுகள் முன்வைக்கும் கூட்டுத்துவக் குடியரசு என்பது தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையும், சிறுபான்மை இனத்தவருக்கு சுயாட்சி உரிமையும், எவ்வித அந்நியத் தலையீடுமற்ற சுதந்திரமும் சுயாதிபத்திய உரிமையும் கொண்ட குடிய ரசாகும். இதனடிப்படையில், ஏற்கெனவே 9 மாவட்டங் களில் இணையான அரசை நடத்திவரும் மாவோயிஸ் டுகள், கடந்த நவம்பர் 25 தொடங்கி டிசம்பர் 18-க்குள் 13 சுயாட்சிப் பிரதேசங்களை அடுத்தடுத்து அறிவித் துள்ளனர்.

கடந்த டிசம்பர் 16-ஆம் தேதியன்று 5000 க்கும் மேற் பட்ட மாவோயிஸ்டுகள் செங்கொடி ஏந்தி முழக்க மிட்டபடியே வந்து, நாடாளுமன்றக் கட்டடமான தர்பார் அரங்கத்தை முற்றுகையிட்டு காத்மண்டு பள்ளத் தாக்கைத் தனி சுயாட்சிப் பிராந்தியமாக அறிவித்தனர். நேவா சுயாட்சி அரசு என்று அதைக் குறிப்பிட்டு, துப்பாக்கி வேட்டுகள் முழங்க, இந்த அறிவிப்பை மாவோயிஸ்டு கட்சித் தலைவர் தோழர் பிரசந்தா பிரகட னப்படுத்தியுள்ளார். கடந்த டிசம்பர் 20-ஆம் தேதியன்று நடந்த மாபெரும் பேரணிக்குப் பின் நடந்த பொதுக் கூட்டத்தில், ‘‘நேபாள காங்கிரசுக் கட்சியுடன் பேசிப் பார்த்தேன்; பலனில்லை. ஆளும் போலி கம்யூனிஸ்டு கட்சியான ஐக்கிய நேபாளப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்டு-லெனினிஸ்டு)-உடன் பேசிப் பார்த்தேன்; பலனில்லை. இனி அவர்களின் எஜமானர்களான டெல்லியுடன் பேசலாம் என்று கருதுகிறேன்’’ என்று பெருத்த ஆரவாரத்துக்கிடையே, இந்திய மேலாதிக்க வாதிகளை அம்பலப்படுத்திக் கிண்டலாகக் குறிப்பிட் டார், தோழர் பிரசந்தா. ஏற்கெனவே மூன்று கட்டங் களாக நடந்த போராட்டம், வருமாண்டு ஜனவரி 24 முதலாக நாடு தழுவிய காலவரையற்ற பொது வேலை நிறுத்தப் போராட்டமாகத் தொடரும் என்று மாவோயிஸ்டுகள் அறிவித்துள்ளனர்.

ரஷ்யாவில் 1905 -ஆம் ஆண்டில் நடந்த புரட்சியை ஒத்த நிலைமைதான் இன்று நேபாளத்தில் நிலவுகிறது. நேபாள மக்கள் தற்போதைய அரசின் அதிகாரிகளைப் பொருட்படுத்தவில்லை; சட்டத்தைப் பொருட்படுத்த வில்லை; சட்டங்களையும் அதிகாரத்தையும் மக்கள் போராட்டம் மீறுகிறது. சட்டபூர்வமாக அங்கீகரிக்கப் படாத செயல்கள் மூலம் புதியதோர் ஏற்பாட்டை, கண்ணெதிரே காணும் உண்மையாக உருவாக்குகிறது. புதிய - புரட்சிகர அதிகாரத்தின் மூலம் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் ஏற்பாட்டை செய்து கொள்ளுமாறு, அது மக்களின் முன்முயற்சியைக் கட்ட விழ்த்து விடுகிறது. ரஷ்யாவில் எவ்வாறு தொழிலாளர்-விவசாயிகளின் சோவியத்துகள் உருவாகியதோ, அதைப் போல மக்கள்திரள் அரசியல் வேலைநிறுத்தங்கள் மூலம், புதிய மக்கள் சோவியத்துகளைக் கட்டியமைக் கும் திசையில் நேபாளம் முன்னேறுகிறது.

இந்திய-அமெரிக்கத் தலையீட்டையும் மேலாதிக்கத் தையும் வீழ்த்த, நேபாள மக்களையும் உலகெங்கு முள்ள புரட்சிகர-ஜனநாயக சக்திகளை மட்டுமே மாவோயிஸ்டுகள் நம்புகிறார்கள். ஆயுதமேந்திய சாகசச்




செயல்கள் மூலமோ அல்லது சந்தர்ப்பவாத பேரங்கள் மூலமோ இதைச் சாதிக்க முடியாது என்பதையும் அவர் கள் நன்கறிந்துள்ளார்கள். விடுதலைப் புலிகளைப் போல, இந்திய ஓட்டுக்கட்சிகளிடம் உறவு கொண்டு, இந்திய அரசை நைச்சியமாகத் தமக்கு ஆதரவாக நிற்குமாறு அவர்கள் பேரங்களை நடத்திக் கொண்டிருக் கவில்லை. அல்லது காங்கிரசு ஆட்சிக்குப் பதிலாக, பா.ஜ.க.வும் ஜெயலலிதாவும் ஆட்சிக்கு வந்தால் தமக்குச் சாதகமாக அமையும் என்று கருதவுமில்லை.

நாடு தழுவிய மக்கள்திரள் அரசியல் போராட்டங்கள் எனும் செயல்தந்திர உத்தியின் வழியாக, மக்களை அரசி யல்படுத்துவதன் மூலம், அவர்களின் முன்முயற்சியைக் கட்டவிழ்த்துவிட்டு, மக்கள் தமது சொந்த அரசைக் கீழி ருந்து கட்டியமைக்கவும் பாதுகாக்கவும் அவர்கள் போராடி வருகிறார்கள். மேலிருந்து அதிகாரத்தைச் செலுத்திப் புரட்சியைத் தொடருவதற்கான வாய்ப்புகள் கிடைத்தபோது அதைப் பயன்படுத்திக் கொண்ட மாவோயிஸ்டுகள், இப்போது அந்த வாய்ப்பு பறிக்கப் பட்ட நிலையில், கீழிருந்து மக்கள்திரள் போராட்டங் கள் மூலம் புரட்சியைத் தொடர்கிறார்கள்.

● தனபால்

# கோபன்ஹேகன் தட்ப-வெப்பநிலை மாநாடு:

# பூவுலகின் முதன்மை எதிரிக்கு வெற்றி

**கோபன்ஹேகன் மாநாடு கேலிக்கூத்தாக மட்டுமின்றி, ஏழை நாடுகளுக்கு எதிரானதாகவே நடந்து முடிந்தது.**

இந்த நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில், முன்னெப்போதும் கண்டிராத ''இயற்கைப் பெரும் பேரழிவுகளை'' உலகம் கண்டது. கொதிக்கும் கோடைக் காலங்கள், அதிபயங்கர சூறாவளிகளும் புயல்களும், மிக மோசமான வறட்சிகளும் கொட்டித் தீர்த்த பேய் மழைகளும் வெள்ளப் பெருக்குகளும், பயபீதியும் நாசமும் விளைவித்த பெருங்கடற் சீற்றங்கள் - கடல்மட்ட உயர்வுகள், இவற்றோடு பல நாடுகளின் விவசாயத்தின் தலைகுப்புற வீழ்ச்சிகள். இத்தகைய நிகழ்வுகள் உலகின் ஏதோ சில பகுதிகளில் மட்டும், எப்போதோ ஒரு சில தடவைகள், தன்னியல்பாக வரக்கூடிய இயற்கைப் பேரழிவுகள் என்று இனியும் கருதிவிட முடியாது. இத்தகைய பேரழிவுகள் மிகப் பெரும்பாலும் உலகின் தட்ப-வெப்பநிலை மாற்றங்களால் தூண்டிவிடப்பட்டவை என்று அறிவியல்பூர்வமாக இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த வான் கோள்களில் பூமி மட்டுமே வாழும் வான் கோளாக அறியப்பட்டுள்ளது. அதாவது தாவரங்களும் விலங்குகளும் உயிரினங்களாக வாழும் இயற்கைச் சூழல் வாய்க்கப் பெற்ற வான்கோள் பூமி மட்டுமே. வட, தென் துருவங்களில் உள்ள பனிப்படலங்கள், பூமியின் சுழற்சி, புவிஈர்ப்பு சக்தி, பூமியைச் சுற்றியுள்ள வளி மண்டலம், அதில் நிலவும் காற்றழுத்த மாறுபாடுகள் போன்ற காரணங்களால் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஓரளவு சீரான தட்ப-வெப்ப நிலை ஏற்பட்டு, உயிரினங்கள் தோன்றவும், நீடிக்கவும் ஏற்றதான இயற்கைச் சூழல் நிலவி வருகிறது.

ஆனால், கடந்த சில நூற்றாண்டுகளாகப் பெருகிவரும் எரிசக்தி இயந்திரங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், மோட்டார் வாகனங்கள் ஆகியவை வெளியேற்றி வரும் கரிம வாயுக்களால் உலகம் மேலும் மேலும் வெப்பமடைந்து கொண்டே வந்து, இதுவரை மனித இன வரலாறு காணாதவாறு இப்பூவுலகையே பேரழிவின் விளிம்புக்குத் தள்ளும் பேராபத்தை விளைவித்திருக்கிறது.

இதுனால், வட,தென் துருவங்களில் உள்ள பனி மலைகள் பிளந்து பாளங்களாகி, உருகும் பனி ஆறுகளாக மிதக்கத் தொடங்கிவிட்டன. அதனால் கடல் மட்டம் உயர்ந்து, பசிபிக் மாகடலில் பல தீவுத் திட்டுகள் மூழ்கிப் போய்விட்டன. இப்படியே போனால் நமது நாட்டுக்குத் தென்மேற்கில் உள்ள மாலத்தீவுக் கூட்டங்களும், நமது நாட்டிலேயே உள்ள சுந்தரவனக் காடுகளும் கடலில் மூழ்கிப் போகும்.

எப்போதாவது நிகழக்கூடியதாக இருந்த தீயாய் எரிக்கும் எல்-நினோ என்ற கடும் வறட்சி நிகழ்வுகள் கடந்த ஒன்பது ஆண்டுகளில் மூன்று முறையும் நீண்ட நெடியதாகவும் வந்துவிட்டது. அதேசமயம் உலகின் வேறு பல நாடுகள் வெள்ளக் காடுகளாகி, பல பத்து இலட்சம் மக்கள் வீடற்றவர்களாகவும் அகதிகளாகவும் வீசியெறியப்படுகின்றனர். நுண்ணுயிரிகள் - கிருமிகள் பலவும் (நீடித்த வெப்பநிலை பருவகாலத்தில்) பல்கிப் பெருகிப் புதுப்புது கொள்ளை நோய்களைப் பரப்பி, தம் பங்கிற்கு ஏராளமான உயிர்களைப் பலிவாங்குகின்றன.



இந்தோனேஷியாவின் ரியாயு மாகாணத்திலுள்ள வெப்பமண்டலக் காட்டின் தற்போதைய தோற்றம். சுமத்ரா தீவுப் பகுதியில் கடைசியாக எஞ்சியிருந்த இக்காட்டின் அழிவு, புவி வெப்பநிலை உயர்வதற்கு வழிவகுக்கும்.

பனிமலைகள் உருகுவது பெரும் தொடர் நிகழ்வுப் போக்குகளைத் தொடங்கி நடத்துகிறது. பனிப் படலங்களின் பரப்பு தொடர்ந்து குறைவதாலும், கடல்பரப்பு அதிகரிப்பதாலும், பூமியின் மீது விழும் சூரிய வெப்பத்தைத் திருப்பி அனுப்பும் அளவும் குறைந்து, புவி வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. துருவப் பகுதிகளின் நிரந்தரப் பனிப் பாளங்களில் பல கோடி டன்

அளவுக்கு கரிம வாயுக்களான கரியமில வாயு, மீதேன், நைட்ரஸ் ஆக்சைடு, கந்தக-டை-ஆக்சைடு, குளோரோ ஃபுளோரோ கார்பன் ஆகிய பசுமைக் குடில் வாயுக்கள் புதைந்து கிடக்கின்றன.

பனிப் பாளங்கள் உருகும்போது அவற்றிலிருந்து ஏராளமான பசுமைக் குடில் வாயுக்கள் வெளிப்பட்டு, வளி மண்டலத்தில் ஏற்கெனவே உள்ள பசுமைக் குடில் வாயுக்களின் அடுக்கை மேலும் பருமனாக்கி, பசுமைக் குடில் பாதிப்பை மேலும் கூடுதலாக்கி விடும். சூரிய னிலிருந்து வரும் வெப்பத்தை ஓசோன் மண்டலத்தைப் போல வடிகட்டுவது அல்லது தடுப்பதற்கு மாறாக, அதை இந்த கரிம வாயுக்கள் உள்வாங்கிக் கொண்டு வளி மண்டலத்தையும் புவியையும் மேலும் வெப்பமடை யச் செய்வதைத்தான் பசுமைக் குடில் பாதிப்பு என்கி றார்கள்.

உலகளாவிய வெப்பநிலை மேலும் 3 செல்சியஸ் டிகிரி உயர்ந்தால், உலகிலுள்ள காடுகள் அழிந்து சிதைந்து கரிமவாயுக்களைக் கக்கத் தொடங்கி விடும். அத்தகைய நிலைமை ஏற்பட்டால், 100 கோடி ஆண்டு களுக்கு முன்பு பூமி எப்படி இருந்ததோ, இன்று வெள் ளிக் கிரகம் எப்படி இருக்கிறதோ, அப்படி பூமி எங்கும் வெப்பமும் புகை மண்டலமும் நீராவியுமாகவே இருக் கும். மனிதர்களோடு எல்லா உயிரினங்களும் உயிர்வாழ் வதே சாத்தியமற்றதாகி விடும்.

இதுவெறும் அனுமானம் அல்ல. பருவகால மாற்றம் பற்றிய நாடுகளுக்கிடையிலான குழுவின் தலைவராகிய ஆர்.கே. பச்செளரி அறிவியல் ஆய்வுகளின் அடிப்படை யில் பின்வருமாறு கூறுகிறார்: தற்போதைய அளவு மட் டத்தில் தேசங்கள் பசுமைக்குடில் கரிம வாயுக்களை வெளியிடுமானால், 2015-ஆம் ஆண்டே உலகின் சராசரி வெப்ப அளவு பொறுத்துக் கொள்ள முடியாத அதன் விளிம்பு முனையைத் தாண்டி விடும். பிறகு திரும்ப வும் மாற்றமுடியாத பருவகால மாற்றங்களை ஏற்படுத்தி விடும்.



இப்பூவுலகைப் பேரழிவின் விளிம்பிற்குத் தள்ளும் அளவிற்கு புவியை வெப்பம டையச் செய்ததற்கு யார் யார் காரணமாக இருந்திருக்கிறார்கள்? பேரழிவு என்ற நிலை யிலிருந்து இப்பூவுலகைக் காப்பதற்கான முயற்சியில் யார், யார் ஈடுபட்டிருக்கிறார்கள்? அதற்குத் தடையாக யார் யார் நிற்கிறார்கள்? புவி வெப்பமடைவதைத் தடுப் பதற்கான அறிவியல்பூர்வமான - ஆக்கப்பூர்வமான வழி வகைகள் தாம் என்னென்ன? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் மட்டும் தொடக்கப்பள்ளி மாணவர் முதல் கற்றுத் தேர்ந்த அறிவுஜீவிகளில் பலருக்கும் தெரிய வில்லை. உலகின் எல்லா நாடுகளும் தேசங்களும் மோட்டார் வாகனங்களும், குளிர்பதனப் பெட்டிகளும், தொழிற்சலைகளில் உற்பத்தியாகும் பொருட்களைப் பாவிக்கும் எல்லா மனிதர்களும் புவி வெப்பமடைவ தற்குக் காரணமாக இருக்கிறார்கள்; வீட்டுக்கொரு மரம் வளர்ப்பது முதல் போக்குவரத்துக்கு மிதிவண்டிகளைப் பாவிப்பது வரையிலான தனிமனித முயற்சிகள் மூலம் புவி வெப்பமடைவதைத் தடுத்துவிட முடியும் என்று பாமரத்தனமான பிரச்சாரங்களில் மக்கள் மூழ்கடிக்கப் படுகின்றனர்.

நமது நாட்டிலுள்ள இந்தியா டுடே செய்தி ஊடகம் தான் முதன்மையான அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத் திய ஆதரவு நிலை கொண்டது. உலகிலேயே மிக அதிக அளவு கரிம வாயுக்களை வெளியேற்றிப் புவிவெப்ப மடையச் செய்யும் அமெரிக்காதான், புவி வெப்பமடை வதைத் தடுக்கும் முயற்சிகளுக்கு எதிராக நிற்கிறது என் பதற்காக, அமெரிக்காதான் இப்பூவுலகின் முதன்மை யான எதிரி என்று அடையாளங்காட்டுகிறது. அமெ ரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், கனடா, பிரான்சு, ஜெர் மனி, இங்கிலாந்து, ருசியா, சௌதி அரே பியா, இத்தாலி, சீனா, இந்தியா ஆகிய 12 நாடுகளை, உலகின் மிக மோசமான கொடூரன்கள் என்று அது வரிசைப்படுத்தி யிருக்கிறது.

உலக மக்கட் தொகையில் 4.73 சதவீ தத்தைக் கொண்ட அமெரிக்க வல்லரசு, உலகளாவிய அளவில் 26 சதவீத கார் பன்-டை-ஆக்சைடையும் 20 சதவீத மீதேன் வாயுவையும் நச்சுக் கழிவாக வெளியேற்றி முதலிடம் வகிக்கிறது. பிற ஐரோப்பிய நாடுகளும் ரசியாவும் அதற்க டுத்த நிலையில் உள்ளன. உலக மக்கட் தொகையில் 24 சதவீதத்தைக் கொண்ட தொழில் வளர்ச்சியடைந்த ஏகாதிபத்திய நாடுகள் ஏறத்தாழ 70 சதவீதத்துக்கும் மேற் பட்ட உற்பத்திப் பொருட்களைப் பாவிக் கின்றன. மொத்த எரிசக்தியில் முக்கால் பங்கை விழுங்கும் இந்நாடுகளிலிருந்து

புவி வெப்பநிலை உயர்வால் அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள துவாலு தீவினைக் காப்பாற்றக் கோரி கோபன்ஹேகன் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.





தான் 75 சதவீத கார்பன்-டை-ஆக்சைடு வெளியாகிறது. அதேசமயம், ஏழை நாடுகள் கரிம வாயுக்களை வெளியேற்றுவதில் கடைசி வரிசையில்தான் இருக்கின்றன.

கரிம வாயுக்களை வெளியேற்றுவதையும், புவி வெப்பமடைவதையும் தடுப்பதற்காக 1992 முதல் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் தட்ப-வெப்ப நிலை மாற்றம் பற்றிய மாநாட்டுக் கட்டமைப்பு சார்பாக உலகின் பல்வேறு நகரங்களில் பதினைந்துக்கும் மேற்பட்ட உலக நாடுகளின் உயர்மட்ட கருத்தரங்குகளும் மாநாடுகளும் நடந்திருக்கின்றன.

பொதுவான, ஆனால் வெவ்வேறான பொறுப்புகள் - கடமைகளை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கையை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டும் என்ற ஒப்பந்தத்தை 1992-இல் தட்ப-வெப்ப நிலை பற்றிய ஐ.நா. மன்றத்தின் கட்டமைப்பு நிறைவேற்றியது. புவி தட்பவெப்ப நிலை சீர்குலைந்து போவதற்கான வரலாற்று வழிக் காரணகர்த்தாக்களாக உள்ள முன்னேறிய தொழில்மயமான நாடுகள் தாம் கரிம வாயுக்கள் வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக அந்நாடுகள் தமது பொருளுற்பத்தி மற்றும் நுகர்வுமுறைகளை மிகவும் தீவிரமான வேகத்தில் மாற்றிக் கொள்ள வேண்டும். வளரும் நாடுகள் தட்ப-வெப்ப நிலைக்குச் சாதகமானதாகத் தமது வளர்ச்சிப் பாதையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். ஏழை நாடுகள் வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியிருப்பதால், சீரான உலக தட்பவெப்ப நிலையை நிலை நாட்டுவதற்கான தமது பங்கை ஆற்றுவதற்கு வளர்ந்த நாடுகள் தேவையான தொழில்நுட்பங்களும் நிதி உதவிகளும் செய்தாக வேண்டும். இவை சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தாலும், கடந்த 18 ஆண்டுகளில் நடைமுறைக்கு வரவே இல்லை; வெறும் பேச்சாகத்தான் இருக்கிறது.

1997-ஆம் ஆண்டு ஜப்பானின் கியோட்டோ நகரில் நிறைவேற்றப்பட்ட கியோட்டோ உடன்படிக்கையின் படி, 1990 ஆண்டு தாம் வெளியேற்றிய கரிம வாயுக்களின் அளவைவிட 5 சதவீத அளவுக்கு வளரும் நாடுகள் 2005-2012 ஆகிய ஏழாண்டுகளில் குறைத்துக் கொள்ள வேண்டும்; தட்பவெப்ப நிலையில் பாதகம் ஏற்படுத்துவதை வளரும் நாடுகள் தவிர்ப்பதற்கு வளர்ந்த நாடுகள் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி செய்ய வேண்டும்; இவற்றோடு ஐரோப்பிய சமூகம் மற்றும் 37 வளர்ந்த தொழில்மயமான நாடுகளும் குறைத்துக் கொள்ள வேண்டிய கரிமவாயுக்கள் வெளியேற்ற அளவையும் கியோட்டோ உடன்படிக்கை சட்டபூர்வமாக வலியுறுத்தியது. உலகின் பெரும்பாலான நாடுகள் முதற்கட்ட இலக்கை நிறைவேற்றாதது மட்டுமல்ல, கீழே தள்ளிய குதிரை குழியையும் பறித்ததைப் போல, 1992-இல் நடந்த முதல் மாநாட்டிற்குப் பிறகு, கடந்த 17 ஆண்டுகளில் கரிம வாயுக்கள் வெளியேற்றும் அளவை 30 சதவீதம் அதிகரித்திருக்கின்றன.

இப்பூவுலகின் முதன்மை எதிரியான அமெரிக்காவோ, கியோட்டோ உடன்படிக்கையை இன்னமும் ஏற்க மறுப்பதோடு, அதற்குக் குழிபறிக்கும் வேலையிலும் தானே முன் நிற்கிறது. கறுப்பினத் தலைவர் பாரக் ஒபாமா அமெரிக்க அதிபரானதை ''உலக சமுகமே'' கொண்டாடியது. ஆப்கானில் ஆக்கிரமிப்பு பயங்கரவாதப் போரைத் தொடர்வதற்கு மேலும் படை அனுப்பும் ஒபாமா, கியோட்டோ உடன்படிக்கையை நிராகரிப்பதிலும் உறுதியாக நிற்கிறார். கியோட்டோ உடன்படிக்கையின்படி 2012-2016 ஆகிய இரண்டாவது அமலாக்கக் கட்டத்தில் உலக நாடுகளின் கரிமவாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் அளவை வரையறுப்பதற்காக நடந்த கோபன்ஹேகன் மாநாட்டில், அந்நோக்கம்




நிறைவேறாமல் தடுத்ததில் முக்கிய பங்காற்றியவர் அமெரிக்காவின் பாரக் ஒபாமாதான். தன் பங்கிற்கு அமெரிக்கா, 2005-ஆம் ஆண்டு தான் வெளியேற்றிய கரிம வாயுக்களின் கனஅளவில் 17 சதவீதத்தை 2020-இல் குறைத்துக் கொள்ளும் என்று ஒபாமா அறிவித்துள்ளார். இது 1990-இல் அமெரிக்கா வெளியேற்றிய அளவில் வெறும் 4 சதவீதம்தான். இதுவும் கூட, ஏற்கெனவே கியோட்டோ உடன்படிக்கையை 95 - 0 என்ற விகிதத்தில் நிராகரித்த அமெரிக்க செனட்டால் ஏற்றுக் கொள்ளப்படாமல், நிராகரிக்கப்பட வாய்ப்புண்டு.

இந்தியாவை விடத் தலைக்கு 18 மடங்கு அதிகமாகக் கரிம வாயுக்களை வெளியேற்றும் அமெரிக்கா இவ்வாறு நடந்து கொள்வதற்கான காரணம் நேரானது - எளிமையானது. தற்போதைய நிலை நீடித்திருப்பதற்காக ஆண்டுக்கு முன்னூறு மில்லியன் டாலர் செலவழிப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகளின் கும்பல்கள் பலவும் தயாராக உள்ளன. இவற்றில் அமெ

இம்மாநாடு, ஒரு துன்பவியல் நகைச்சுவை நாடகமாகவே நடந்து முடிந்திருக்கிறது. அலுவல் நாட்களில் எல்லாம் கேளிக்கை, விருந்து, அரட்டை என்று போக்கிவிட்டு, இறுதிநாளில்தான் அவசர அவசரமாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ரிக்காவின் 50 மாநிலங்களில் இருபத்திரண்டை ஆட்டிப் படைக்கும் நிலக்கரி முதலாளியக் கும்பல்கள், முன்னாள் அதிபர்களான புஷ் குடும்பத்துக்கு நெருக்கமான எரிசக்தி எண்ணெய் முதலாளியக் கும்பல்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் - நெடுஞ்சாலை முதலாளியக் கும்பல்கள் அடங்கும். அமெரிக்கா மட்டுமல்ல, இப்படிப்பட்ட ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகள்தாம் உலகின் தட்பவெப்ப நிலையையும் தலைவிதியையும் தீர்மானிக்கக்கூடியவர்களாக உள்ளார்கள்.

கியோட்டோ உடன்படிக்கையின் 2-வது கட்ட அமலாக்கத்தை, உலக நாடுகளின் கரிமவாயு வெளியேற்ற இலக்கை தீர்மானிப்பதற்காக, 2009-ஆம் ஆண்டு டிசம்பர் 18-ஆம் நாள், கோபன்ஹேகன் மாநாட்டில் 192 நாடுகளின் பெருந்தலைகளும், அவர்களின் எடுபிடிகளும் கலந்து கொண்டனர். இம்மாநாடு ஒரு துன்பவியல் நகைச்சுவை நாடகமாகவே நடந்து முடிந்திருக்கிறது. அலுவல் நாட்களில் எல்லாம் கேளிக்கை, விருந்து, அரட்டை என்று போக்கிவிட்டு, இறுதிநாளில் அவசர அவசரமாக சில தீர்மானங்களை நிறைவேற்றும் நான்காம் தர சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்களின் கேலிக்கூத்துகளைப் போலவே கோபன்ஹேகன் மாநாடும் நடந்துள்ளது.



தாம் வாழும் உலகம் பேரழிவை எதிர்கொண்டிருந்தபோதும், தமது சொந்த நாட்டு ஏகாதிபத்திய ஏகபோக முதலாளியக் கும்பல்களின் கொள்ளை இலாப வெறிக்குத் துணை நிற்பது ஒன்றையே கருத்தில் வைத்து, அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் ஏழை நாடுகளின் கதறல்களுக்குச் சிறிதும் செவிமடுக்க மறுத்துவிட்டனர். அவர்கள் கியோட்டோ உடன்படிக்கையை கிழித்தெறிந்தார்கள். மாநாட்டின் நிகழ்ச்சி நிரல்கள் எல்லாம் தோல்வியில் முடிவுற்றபிறகு, ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசு நாடுகள், இந்தியா, சீனா, பிரேசில் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய தமது நான்கு பெரும் தரகு முதலாளிய நாடுகளோடு இரகசிய - சதி உடன்படிக்கை போட்டுக் கொண்டு, புவி வெப்பமடைவதைத் தடுக்கும் இலக்கு - உறுதி, சட்டபூர்வ உடன்படிக்கை எதனையும் நிறைவேற்றாமல், வெறுமனே அரசியல் கூட்டறிக்கையை நிறைவேற்றிவிட்டுக் கலைந்தனர்.

● ஆர்.கே.

## மீளமுடியாத கடன் பிடியில் விவசாயிகள்... கொண்டாட்டத்தில் பெரும் முதலாளிகள்...

### — வி.வி.மு.வின் கருத்தரங்கம்

இடுபொருட்கள் விலை உயர்வு, கொள்முதல் விலை வீழ்ச்சி, உணவு தானிய தாராள இறக்குமதி முதலானவற்றால் இந்திய விவசாயிகள் போண்டியாகி, கந்துவட்டிக் கடன் சுமையில் சிக்கி ஓட்டாண்டிகளாகி வருகிறார்கள். மறுபுறம், விவசாயத்தைப் புறக்கணித்துவரும் ஆட்சியாளர்கள், உள்நாட்டு - வெளிநாட்டு முதலாளிகளின் பகற்கொள்ளைக்கு வரிச் சலுகைகள்,மானியங்கள் என்ற பெயரில் நாளொன்றுக்குப் பல நூறு கோடிகள் வீதம் வாரியிறைக்கின்றனர். விவசாய நாடான இந்தியாவை உணவுக்காக மேலை நாடுகளிடம் கையேந்த வைக்கும் இம் மறுகாலனியாக்கத் தாக்குதலை வீழ்த்த அறைகூவி, நாமக்கல் மாவட்ட வி.வி.மு.வினர் முத்துகாபட்டியில், தோழர்கள் செல்லப்பன்-சின்னுசாமி அரங்கில் (புகழேந்தி திருமண அரங்கில்) கருத்தரங்கம் மற்றும் கலைநிகழ்ச்சியை 13.12.09 அன்று நடத்தினர்.

வி.வி.மு. வட்டார அமைப்பாளர் தோழர் அசோகன் தலைமையில் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை நடந்த இக்கருத்தரங்கில், வர்த்தக சூதாடிகள், பெரு முதலாளிகளின் இரும்புப் பிடியிலிருந்து இடுபொருட்கள் மற்றும் சந்தையை விடுவிக்காமல், இயற்கை வேளாண்மை முறையை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை இந்நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய இயற்கை வேளாண் முன்னணியாளர்கள் இடித்துரைத்தனர். வி.வி.மு.வின் திருவெண்ணெய் நல்லூர் வட்ட அமைப்பாளர் தோழர் அம்பேத்கர், கம்பம் வட்ட அமைப்பாளர் தோழர் மோகன் ஆகியோர் விவசாயத்தின் சீரழிவுக்கும் விவசாயிகளின் ஓட்டாண்டித்தனத்துக்கும் தனியார்மய-தாராளமய-உலகமயமாக்கலே முதன்மைக் காரணம் என்பதைப் புள்ளிவிவர ஆதாரங்களுடன் விளக்கினர். அதைத் தொடர்ந்து, மறுகாலனியாக்கத்தின் கோரத்தாண்டவம் குறித்தும், அதை வீழ்த்தி விவசாயிகள்-தொழிலாளர்களின் அதிகாரத்தை நிலைநாட்டும் புதிய ஜனநாயகப் புரட்சியே ஒரே தீர்வு என்பதையும் ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன் விரிவாக விளக்கினார்.

ம.க.இ.க.மையக் கலைக்குழுவினர் இக்கருத்தரங்கின் இடையிடையே புரட்சிகர கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். வி.வி.மு.வில் முன்னோடிகளாகச் செயல்பட்டு விபத்திலும் நோய்தாக்கியும் மறைந்த தோழர்கள் செல்லப்பன், சின்னுசாமி ஆகியோரின் உருவப் படங்களைத் தோழர் காளியப்பனும் தோழர் மோகனும் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினர். திரளான விவசாயிகளும் இயற்கை வேளாண் முன்னணியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்த இக்கருத்தரங்கம், மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு விவசாயிகள் போராட வேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக அமைந்தது.

— பு.ஜ.செய்தியாளர், நாமக்கல்.

# விலைவாசி உயர்வை ரசிக்கும் கோமான்களின் வக்கிர ஆட்சி!

**விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது என்ற பேச்சுக்கே மன்மோகன் சிங் ஆட்சியில் இடம் கிடையாது.**

பிரதமர் மன்மோகன் சிங் கடந்த அக்டோபர் மாதம் மும்பய் நகரில் நடந்த கூட்டமொன்றில், ''நமது கஷ்ட காலம் முடிவுக்கு வந்துவிட்டதாக'' அருள்வாக்கு சொன்னார். அவர் எந்த நேரத்தில் திருவாய் மலர்ந்தாரோ தெரியவில்லை, அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் நாடெங்கும் உருளைக்கிழங்கு, வெங்காயம், தக்காளியின் விலை தாறுமாறாக உயர்ந்து, பாமர மக்களை மயக்கம் போட வைத்தது. கடந்த மூன்று மாதங்களாக அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் மற்றும் காய்கறிகளின் விலை ராக்கெட் வேகத்தில் உயர்ந்து கொண்டே போகிறது. இது, கடந்த பத்தாண்டுகளில் இல்லாத விலை உயர்வு என முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களே அச்சப்படுமளவிற்கு, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன.

ஒரு ரூபாய் அரிசியையும், 50 ரூபாய்க்கு அஞ்சறைப் பெட்டிச் சாமான்களையும் ரேஷனில் தருவதைக் காட்டி, விலைவாசி உயர்வுக்கு எதிராக மாபெரும் நடவடிக்கைகளை எடுத்துவிட்டதைப் போல தி.மு.க. அரசு காட்டிக் கொள்கிறது. அதே சமயம், அவரது கூட்டாளிகளோ இந்த விலை உயர்வை நியாயப் படுத்தும் திமிரோடு நடந்து வருகின்றனர். ''விலைவாசி உயர்ந்தால் அதன் பலன் விவசாயிகளுக்குத்தான் போய்ச் சேருகிறது'' எனத் திட்ட கமிசனின் துணைத் தலைவரும் மன்மோகன் சிங்கின் மனசாட்சியுமான மாண்டேக் சிங் அலுவாலியா பேசியிருக்கிறார். ''இந்த விலை உயர்வு எதிர்பாராத ஒன்றல்ல; இதனைக் கட்டுப்படுத்த அவசரகால நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியமும் இல்லை'' எனக் கூறி வருகிறார், நிதி அமைச்சகச் செயலர். ''ஐயா, இப்படியெல்லாம் பேசி மக்களின் கோபத்தைத் தூண்டிவிடாதீர்கள்'' என முதலாளித்துவப் பத்திரிகைகளே அறிவுரை சொல்லும் அளவிற்கு, ஆளும் கும்பலின் திமிர்த்தனம் கரைபுரண்டு ஓடுகிறது.

விலைவாசி உயர்வு, இது போன்ற நோஞ்சான் குழந்தைகளைப் பட்டினிச் சாவிற்குள் தள்ளிவிடாதா?



கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவிற்கு, அத்தியாவசிய மளிகைப் பொருட்கள்-காய்கறிகளின் விலை உயர்வுக்குக் காரணம் என்ன? என்று கேட்டால், அவர்கள் கீறல் விழுந்த ரெக்கார்டைப் போல ஒரே பதிலைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். ''இந்தியர்களின் உணவுத் தேவை அதிகரித்து வருகிறது; அந்தளவிற்கு உணவுப் பயிர் உற்பத்தி அதிகரிக்கவில்லை'' என்பதுதான் அந்தப் பதில்.

ஏதோ 100 கோடி இந்தியர்களும் தின்று கொழுப்பதைப் போல ஆளும் கும்பல் கூறிவருவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும். உலகிலுள்ள பல்வேறு நாடுகளின் அரசுகள் பட்டினிக்கு எதிராக எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி அறிக்கை தயாரித்துள்ள ஐ.நா.மன்றத்தின் உணவு முகாமை, அதில், ''இந்தியாவில் 3 கோடி பேர் உணவு கிடைக்காமல் தினந்தோறும் பட்டினி கிடப்பதாகவும், பட்டினிக்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்பதில் இந்தியா, எத்தியோப்பியாவைவிடப் பின்தங்கி இருக்கிறதென்றும்'' குறிப்பிட்டுள்ளது. இந்தப் பட்டினி பட்டாளம் ஒருபுறமிருக்க, இந்திய மக்களுள் ஏறத்தாழ 26 கோடிப் பேர் சத்தான உணவைப் பெறும் வசதியின்றி, வெந்ததைத் தின்று உயிர்வாழ்ந்து வருவது ஊரறிந்த உண்மை. விலைவாசி உயர்வுக்கு இந்தப் பட்டினிப் பட்டாளத்தின் மீதும் பழி போடுவது வக்கிரமானது.

''தேவைக்கும் வரத்துக்கும் இடையே இடைவெளி இருந்தால், விலைவாசி உயர்வது இயல்பு; ஆனால், தற்போதைய விலைவாசி உயர்வுக்கு இது முழுமையான காரணமாகத் தெரியவில்லை'' என ''பிசினஸ் லைன்'' ஆங்கில நாளிதழ் குறிப்பிடுகிறது. உணவுப் பொருள் உற்பத்தியில் பற்றாக்குறை நிலவுவது உண்மையான காரணம் இல்லையென்றால், மன்மோகன் சிங் யாரைப் பாதுகாக்க இந்தப் பொய்யைத்

திரும்பத் திரும்பச் சொல்லி வரு கிறார்?

விலைவாசி உயர்வு பற்றி ஆராய்ந்துள்ள நிதி அமைச்சகத்தின் நிலைக்குழு, ‘‘சர்க்கரை விலை உயர்வுக்குக் கரும்புச் சாகுபடி பரப்பு குறைந்து போயிருப்பது காரணமல்ல; சர்க்கரை ஆலை அதிபர்களின் கூட்டுக் களவாணித்தனம் தான் காரணம்’’ என உண்மையைப் போட்டு உடைத்துள்ளது. இது சர்க்கரைக்கு மட்டுமல்ல, அரிசி, கோதுமை, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட மற்ற உணவுப் பொருட்களுக்கும் பொருந்தும்.

பருப்பு மற்றும் எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் நமது நாடு தன்னிறைவு அடையவில்லை. கடந்த பத்தாண்டுகளாக்கும் மேலாகவே உள்நாட்டுத் தேவையை ஈடுகட்ட இறக்குமதியைச் சார்ந்திருக்கும் கொள்கையைத்தான் மைய அரசு கடைப்பிடித்து வருகிறது. இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை பொய்த்துப் போனதால், அரிசி உற்பத்திகூட எதிர்பார்த்த அளவு இருக்காது என்பதும் உறுதியாகிவிட்டது. ‘‘எதிர்பார்த்த அளவு உற்பத்தியில்லை என்பது பதுக்கலைத் தூண்டிவிட்டிருப்பதாக’’ப் போகிறபோக்கில் முதலாளித்துவப் பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன.



**தனியார் நுகர்வை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வது என்ற மன்மோகன் சிங்கின் திட்டம் தான் உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்குக் காரணமாகும்.**

தொழிலாளர்களின் போராட்டத்தால் தொழிற்சாலைகளில் உற்பத்தி முடங்கிப் போய்விட்டால், அவர்கள் மீது அத்தியாவசிய பணிப் பாதுகாப்புச் சட்டத்தைப் பாய்ச்சத் தயங்காத அரசு, அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தின் கீழ் இதுவரை எந்தவொரு பதுக்கல் வியாபாரியையும் கைது செய்யவில்லை. மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைக் கட்டுப்படுத்தி வரும் சரத் பவார் உணவு அமைச்சராக இருக்கும்பொழுது, சர்க்கரை ஆலை முதலாளிகள் மீது இந்தச் சட்டம் பாய்ந்துவிடுமா?

இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் இரண்டு கோடி டன் அரிசியும், 2.6 கோடி டன் கோதுமையும் கையிருப்பில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இக்கையிருப்பில் இருந்து தேவையான அளவு அரிசியை எடுத்து ரேஷன் கடைகளின் மூலம் விநியோகித்திருந்தால், வெளிச்சந்தையில் அரிசியின் விலை தாறுமாறாக உயர்ந்திருப்பதைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். இதற்குத் தயாராக இல்லாத மன்மோகன் சிங் அரசு, இந்த விலை உயர்வைப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளை இலாபம் அடிக்கத் திட்டம் போட்டு வருகிறது. ஒரு குவிண்டால் கோதுமையை ஆயிரம் ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து வாங்கியுள்ள மைய அரசு, ஒரு குவிண்டாலுக்கு ரூ.1,550/- என விலை நிர்ணயம் செய்து, 15 இலட்சம் டன் கோதுமையைத் தனியார் வியாபாரிகளிடம் விற்பதற்கு பேரம் நடத்தி வருகிறது. இதன்மூலம், மைய அரசும், பெரு வியாபாரிகளும் நல்ல இலாபம் பார்ப்பதற்கு உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பற்றாக்குறையை ஈடு செய்வது என்ற பெயரில் தனியார் வியாபாரிகள் வெளிநாடுகளில் இருந்து அரிசி, பருப்பு வகைகள், சர்க்கரையைத் தாராளமாக இறக்குமதி செய்து கொள்வதற்கு வசதியாக, அப்பொருள்களுக்கு இறக்குமதி வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த இறக்குமதியினால் விலைவாசி உயர்வு கட்டுக்குள் வரவில்லை என்பது தெரிந்த பிறகும்கூட, வரிச் சலுகையினை ரத்து செய்ய மறுக்கிறார், மன்மோகன் சிங். இதற்கும் மேலாக, சர்க்கரை மீதான இணையதள வர்த்தகத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை, டிசம்பர் 31-ஆம் தேதியன்று நீக்கிவிடவும் ஒப்புக்கொண்டிருக்கிறார். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதைவிட, அதன்மூலம் பெருவியாபாரிகளின் கல்லாப்பெட்டியை நிரப்புவது பற்றித்தான் மன்மோகன் சிங் அக்கறை கொள்கிறார்.

உண்மையைச் சொன்னால், பொருளாதார நெருக்கடியில் இருந்து தரகு முதலாளிகளைக் காப்பாற்ற, மன்மோகன் சிங் அவர்களுக்கு அளித்துவரும் சலுகைகள் தான் பணவீக்கம் அதிகரித்திருப்பதற்கும், அத்தியாவசியப் பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து கொண்டே போவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

தனியார் நுகர்வை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளத் திட்டம் போட்ட மன்மோகன் சிங், இதற்காக கடந்த ஆண்டு அக்டோபருக்குப் பின் ஏறத்தாழ 1,86,000 கோடி ரூபாயை வங்கிகளில் இருந்து எடுத்து, சந்தையில் புழங்கவிட்டார். அதற்கு முன்னதாக மைய அரசு ஊழியர்களுக்கு ஆறாவது ஊதிய கமிசன் பரிந்துரையின்படி சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டது. உற்பத்தி தேங்கிப் போயிருக்கும் சமயத்தில், சந்தையில் அதிகப்படியான பணம் புழக்கத்தில் இருந்து வருவதுதான் பண வீக்கத்தையும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகளையும் உயர்த்தியிருப்பதாக முதலாளித்துவப் பொருளாதார அறிஞர்கள்கூட ஒப்புக் கொள்கின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த சந்தையில் இருக்கும் அதிகப் பணப்புழக்கத்தைத் திரும்பப் பெறுவதோடு, வங்கிகள் கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்; வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டும் என்ற ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இப்படிச் செய்தால், 7 சதவீதப் பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியாமல் போகும் எனத் தரகு முதலாளிகள் பயமுறுத்தி வருகிறார்கள். அடித்தட்டு மக்கள் பட்டினி கிடக்க நேர்ந்தாலும், தங்களின் கல்லாப்பெட்டி நிரம்புவதில் எந்தக் குறையும் இருக்கக் கூடாது என்பதுதான் அவர்களின் விருப்பம்.

இதுவொருபுறமிருக்க, விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஒப்பந்த விவசாயச் சட்டத்தை எளிமையாக்குவது; உணவுப் பொருள் மீதான இணைய தள சூதாட்ட வர்த்தகத்தைத் தாராளமயமாக்குவது; அத்தியாவசிய உணவுப் பொருள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவது; உணவுப் பொருள் கொள்முதல்-விற்பனை நடவடிக்கைகளில் இடைத் தரகர்களை ஒழித்துக் கட்டும் விதமாக, சில்லரை விற்பனையில் தாராளமயத்தைப் புகுத்துவது எனத் தரகு முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஆதரவான ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தச் சொல்லும் கதைதான் இது.

இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தினால், அடித்தட்டு மக்களுக்குத் தற்பொழுது இருந்து வரும் அரைகுறை உணவுப் பாதுகாப்புகூட நாசமாகிவிடும். இந்திய விவசாயிகளையும், உணவுப் பாதுகாப்பையும் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்றால், ‘‘விவசாய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை கிடைப்பதை உறுதி செய்; பதுக்கல் வியாபாரிகளைக் கைது செய்; இந்திய மக்கள் அனைவரையும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதோடு, அத்தியாவசிய உணவுப் பொருட்களை ரேஷன் கடைகளின் மூலம் விநியோகிப்பதை உத்தரவாதப்படுத்து’’ என்ற முழக்கங்களை முன்வைத்து உழைக்கும் மக்கள் போராட வேண்டிய தருணமிது.

• குப்பன்

# சட்டவிரோத வேலை நீக்கத்தை எதிர்த்து ஒப்பந்தத் தொழிலாளர்களின் போராட்டம்


வடசென்னை அனல் மின்நிலையம் (NCTPS), 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கீழுள்ள அரசுத்துறை நிறுவனம். நாளொன்றுக்கு 60,000 டன் நிலக்கரி கையாளப்படும் இந்த நிறுவனத்தில், கரியள்ளும் பிரிவில் பத்தாண்டுகளுக்கும் மேலாக உழைத்த 261 தொழிலாளர்கள் இன்று வேலையிலிருந்து வீசியெறியப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஒப்பந்தத் தொழிலாளிகள்; இராதா என்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் முடிந்துவிட்டதால் இவர்களுக்கு இனி வேலை கிடையாது என்கிறது நிர்வாகம். அந்த ஒப்பந்த நிறுவனமோ, தொழிலாளிகளுக்கு மாதம் ரூ.5000 மட்டும் கொடுத்துவிட்டு கடந்த ஏழு ஆண்டுகளில் பல கோடிகளைச் சுருட்டியுள்ளது. இந்த ஒப்பந்ததாரருக்கு முன்பிருந்தே இங்கு பணியாற்றியவர்களும் வேலையிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். இப்போது புதிய ஒப்பந்ததாரர் மூலம் புதிய ஒப்பந்தத் தொழிலாளிகளை நிர்வாகம் வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ளது. புதிய ஒப்பந்த நிறுவனமோ, புதிதாக வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளிகளிடம் ரூ.20,000 லஞ்சமாக வாங்கிக் கொண்டு வேலைக்கு எடுக்கிறது. இதில் மின்வாரிய அதிகாரிகள் முதல் மேலிடம் வரை ஊழல் புழுத்து நாறுகிறது. தொழிலாளர் சட்டப்படி, ஒப்பந்தத் தொழிலாளிகள் நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசுத் துறை நிறுவனமான மின் துறையே சட்டத்தை மதிப்பதில்லை.



தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கும் ஒப்பந்த முறையை எதிர்த்தும், சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்வதை எதிர்த்தும் தொழிலாளர்களை அணிதிரட்டி வந்த புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, வடசென்னை அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர் சங்கத்தைக் கட்டியமைத்து, அதன் தொடக்கவிழாவை கடந்த 11.12.09 அன்று அத்திப்பட்டு ரயில் நிலையம் அருகே புதுநகரில் நடத்தியது. பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் சங்கக் கொடியேற்றி, பெயர்ப் பலகை திறந்து வைக்க, அதன் பிறகு நடந்த பொதுக்கூட்டத்தில் பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசு, திருவள்ளூர் மாவட்டச் செயலர் தோழர் சுதேஷ் குமார், ஒப்பந்தத் தொழிலாளர் சங்கத் தலைவர் தோழர் மதியழகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். குடும்பத்தோடு திரண்டு வந்த தொழிலாளர்களிடம் வர்க்க உணர்வூட்டி, போராட்டத் திசையைக் காட்டியது, ம.க.இ.க.மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி. பு.ஜ.தொ.மு. தலைமையில் உருவாகியுள்ள இச்சங்கம், வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்தி நிரந்தரமாக்கக் கோரியும், ஒப்பந்த முறையை ஒழிக்கக் கோரியும்போராட்டத்தை உறுதியாக நடத்தி வருவதோடு, அனைத்து ஒப்பந்தத் தொழிலாளர்களையும் போராட்டத்துக்கு அணி திரட்டி வருகிறது.

— பு.ஜ.செய்தியாளர்கள்



# தலித் முரசின் "வர்க்காஸ்ரம" வெறி!

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஆளும் வர்க்க விசுவாசத்தோடு கம்யூனிச எதிர்ப்புக்குக் கரசேவை செய்துவரும் ''தலித்முரசு'' இதழ், தனது நவம்பர் 2009 இதழில், ''அதிகாரம்+நக்சலைட்டுகள்= வர்ணாஸ்ரமம்'' என்ற தலைப்பில் செய்தி வெளியிட்டு, தனது வர்க்காஸ்ரம வெறியைக் காட்டியுள்ளது.

தலைமறைவாகச் செயல்பட்டுவரும் மாவோயிஸ்டு கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரும், இந்திய அரசால் தேடப்படும் 'மாவோயிஸ்டு பயங்கரவாதிகளின் பட்டியலில்' இரண்டாம் இடத்தில் இருப்பவரும், அக்கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினருமான தோழர் கிஷன்ஜி எனப்படும் கோடீஸ்வர ராவ், ''தெகல்கா'' ஆங்கில வார இதழுக்கு (நவம். 21, 2009) அளித்த நேர்காணலில், தனது கல்லூரி வாழ்க்கை, தனித் தெலுங்கானா மாநிலம் கோரி நடந்த போராட்டத்தில் ஈடுபட்டது, பின்னர் முற்போக்கு மாணவர் சங்கத்தைக் கட்டியமைத்தது, அன்றைய அரசியல் சூழ்நிலை, முற்போக்கான குடும்பப் பின்னணி, அவரது தந்தையார் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு காங்கிரசுக் கட்சியின் மாநிலத் துணைத் தலைவராக இருந்தது, பார்ப்பனர்களாக இருந்த போதிலும் தமது குடும்பத்தினர் சாதியத்தில் நம்பிக்கையின்றி நடந்து கொண்டது, தனது தந்தையாருக்கு சோசலிசத்தின் மீது நம்பிக்கை இருந்த போதிலும், ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை இல்லாதது முதலானவற்றைப் பற்றிச் சுருக்கமாக விவரித்திருக்கிறார்.

இதில், தமது பெற்றோர் மற்றும் குடும்பம் பற்றிச் சொல்லுமிடத்தில், ''நாங்கள் பார்ப்பனர்களாக இருந்த போதிலும், எங்கள் குடும்பத்தில் சாதி பார்ப்பதில்லை'' என்று ("we are brahmins, but our family never believed in caste") கூறியுள்ளார். தான் வளர்ந்த முற்போக்கான சூழ்நிலையாக, தமது குடும்பம் சாதியத்தில் நம்பிக்கையற்று இருந்ததைக் குறிப்பிடுகிறார்.

இந்த வார்த்தையை மட்டும் எடுத்துக் கொண்டு ''நாங்கள் பிராமணர்கள்'' என்று சாதியப் பாசத்தோடு அவர் குறிப்றபிடுவதாக தலித் முரசு இட்டுக்கட்டி எழுதி அவதூறு செய்திருக்கிறது. இன்னும் ஒருபடி மேலேபோய், ஆயுதம் ஏந்தாத நக்சலைட்டுகள் ஏற்கெனவே பூணூலிஸ்டுகளாக இருப்பது போலவும், இப்போது ''ஆயுதம் ஏந்திய நக்சலைட்டுகளும் பூணூலிஸ்டுகளாகத்தான் இருக்கிறார்கள்'' என்றும் 'கண்டுபிடித்து' கொச்சைப்படுத்தியுள்ளது. ''தான் பிராமணன் என்பதில் அவருக்கு நம்பிக்கை இருக்கிறது. சதுர்வர்ணத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது'' என்றெல்லாம் வலிந்து இட்டுக்கட்டி எழுதியிருக்கிறது. ''மாவோயிஸ்டுகளின் லட்சியம் சரிதான். ஆனால் அது ஜாதியொழிந்த அதிகாரமாக ஜனநாயகமாக இருக்க வேண்டாமா?'' என்று உபதேசமும் செய்கிறது.

அக்டோபர் மாத தலித் முரசு இதழில் ''ஒருநபர் ராணுவமாகச் செயல்பட்டவர்'' என்று மறைந்த மனித உரிமைப் போராளி தோழர் பாலகோபாலைப் பற்றி (அவரும் பிறப்பால் பார்ப்பனர்தான்) எழுதிய அப்பத்திரிகை, கிஷன்ஜி ஆயுதமேந்தி, ஒரு நபர் இராணுவமாக நின்று கொண்டிருக்கும்போது, அவரைப் ''பார்ப்பான்'' என்று அலறுவதன் மூலம் தனது முற்போக்கு ஜனநாயக வேடத்தைத் தானே கழற்றி எறிந்து விட்டது.

ஒருவனைப் பிறப்பின் அடிப்படையிலேயே தீர்மானிப்பதும், அணுகுவதும்தான் பார்ப்பனியம். ஆளும் வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில், மக்களை ஒன்று திரள விடாமல் சாதி ரீதியாகப் பிரித்து மேய்வதுதான் பார்ப்பனியம். நூல் பிசகாமல், பார்ப்பனியம் கொடுத்த வேலையை பரிசுத்த ஆவியோடு செய்து முடித்திருக்கிறது, தலித் முரசு.




தலித் முரசு வாசகர்கள், தெகல்கா இதழைப் படித்திருக்க மாட்டார்கள், படித்திருந்தாலும் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்று கருதிக் கொண்டு, இப்படி கீழ்த்தரமாகக் கொச்சைப்படுத்தியிருக்கிறது அப்பத்திரிகை. இது பார்ப்பனியத்தின் மீதான வெறுப்பின் காரணமாக வரவில்லை. மாறாக, கம்யூனிசத்தின் மீதான வர்க்க வெறுப்பின் வெளிப்பாடுதான் இது. தலித்தியம் என்பதும், அடையாள அரசியல் என்பதும் ஏகாதிபத்தியம் பெற்றெடுத்த கள்ளக்குழந்தை அல்லவா? அதனால்தான் தமது ஏகாதிபத்திய எஜமானர்களின் மனம் குளிர இப்படி அவதூறு செய்து எழுதியிருக்கிறது அப்பத்திரிகை.

● சுடர்விழி

# “நீங்கள் என்னை நக்சல்பாரி ஆக்கினீர்கள்!”

**வர்க்கப் போராட்டத்தில் நடுநிலை வகிக்க முடியாது என்பதைப் புரிந்து கொண்ட வெச்சபல் பழங்குடியின மக்களின் அனுபவம்.**

*‘‘நீங்கள் நடுநிலையாளர்களாக இருப்பதென்பது குற்றம்!’’*

*— இந்திய அரசு விடுக்கும் எச்சரிக்கை!*

அது, தெற்கு சத்தீஸ்கரின் வெச்சபல் கிராமம். காட்டின் மடியிலிருந்த அந்தக் கிராமத்தில், அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தார் பொன்யாம் பந்துரு. இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு வந்த துப்பாக்கிகளின் வேட்டுச்சத்தம் பந்துருவின் தூக்கத்தைக் கலைத்தது. ‘‘ஐயோ! கொலைகாரர்கள் வந்துவிட்டார்கள்’’ என்ற அலறல் எங்கும் எதிரொலித்தது.

தீவட்டியும் துப்பாக்கியும் ஏந்திக் கொலைவெறியுடன் தாக்க வரும் குண்டர்களிடமிருந்து தப்பிக்க அவர் ஓட ஆரம்பித்தார். வில்லையும் அம்பையும் கையில் பிடித்தபடி, தனது நான்கு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அருகிலிருந்த அடர்ந்த காட்டுக்குள் பந்துரு தப்பி ஓடினார். அவரைப் போலவே மொத்த கிராமமும் உயிரைக் கையில் பிடித்தபடி ஓடியது.



‘‘ஊருக்கு வெளியே இருக்கும் அய்யனாரைப் போல, எங்களை ஒடுக்குபவர்களிடமிருந்து எங்களைக் காப்பவர்கள் நக்சலைட்டுகள்தான்’’ என்கிறார், பொன்யாம் பந்துரு.

தொடர்ந்து வந்த துப்பாக்கிகளிலிருந்து சீறிப்பாயும் குண்டுகளின் பேரொலி, மெல்லக் குறைந்து அடங்கும் வரை கிராம மக்கள் ஓடிக்கொண்டே இருந்தார்கள். அவரைப் போலவே இன்னும் சிலரும் கொலைகாரர்களிடமிருந்து தப்பிவிட்டனர். அவரது கிராமமோ முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது. வேகமாக ஓட முடியாமல் மாட்டிக் கொண்டவர்கள், காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டனர். வீடுகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன; அவர்களது தானியங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. அவர்கள் வளர்த்து வந்த கோழிகள், மாடுகள்கூடக் கொன்றொழிக்கப்பட்டன.


காடுகளில் சுற்றித்திரிந்த அவர்கள், நான்கு நாட்கள் கழித்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு திரும்பி வந்து பார்த்தபோது, அங்கே அவர்களது கிராமம் சுடுகாடாகிக் கிடந்தது. வெறும் சாம்பல் குவியலாய்க் கிடந்த தனது வீட்டிற்கு முன்பு வந்தமர்ந்த பந்துரு, ‘‘சல்வா ஜுடுமில் சேர மறுத்ததால், அவர்கள் எங்களை நக்சலைட்டுகள் என்கிறார்கள்; அடிக்கடி இப்படி தாக்குதல் தொடுக்கிறார்கள்’’ என்று வேதனையில் விம்முகிறார்.

இதுதான், சத்தீஸ்கர் மாநில காட்டோரக் கிராமங்களின் இன்றைய நிலை. நக்சலைட்களோடு தொடர்புடையதாகக் கருதப்படும் வெச்சபல் போன்ற 700 கிராமங்கள் அரசின் ஆதரவு பெற்ற கூலிப்படையான சல்வா ஜுடுமால் தாக்கி அழிக்கப்படுவது அங்கே தொடர்கதை. இதே வெச்சபல் கிராமம், கடந்த மூன்று ஆண்டுகளில் பன்னிரண்டு முறைக்கும் மேல் கொளுத்தப்பட்டுள்ளது.

ஈவிரக்கமற்ற அரசு பயங்கரவாதக் கூலிப்படையான சல்வா ஜுடுமை, கடந்த 2005-ஆம் ஆண்டு, சத்தீஸ்கர் அரசு உருவாக்கியதிலிருந்து, இந்தக் கிராமங்கள் தொடர்ந்து தாக்கப்படுகின்றன. வாழ்விழந்த ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள், சொந்த நாட்டிலேயே அகதிகளாக, அரசு நடத்தும் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். மேலும், இரண்டரை லட்சம்பேர் வரை அடர்ந்த காட்டிற்குள் தப்பியோடி வாழ்ந்து வருகின்றனர். பஞ்சத்திலும், பசியிலும், பயத்திலும் இந்த மக்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது.

எப்போது தாக்குதல் வரும் எனத் தெரியாமல், அச்சத்துடன் கோடாரிகளை இறுகப் பற்றியபடி இரவு நேரங்களில் தங்களது குடிசைகளில் பதுங்கிக் கிடக்கிறார்கள் இந்தப் பழங்குடியின மக்கள். தொடர்ச்சியாக வீடுகள் கொளுத்தப்பட்டதால், சிலர் தங்களது வீடுகளை திரும்பக் கட்டும் எண்ணத்தையேகூடக் கைவிட்டுவிட்டனர். வீடற்ற இவர்கள், இரவு நேரங்களை அருகிலுள்ள காடுகளில் தார்பாய்க் கூடாரங்கள் அமைத்துத் தங்கிக் கழிக்கின்றனர்.

சல்வா ஜுடும் அமைக்கப்படுவதற்கு முன்பு வெச்சபலுக்கு சென்றவர்கள், இந்த பகுதிகள் எப்பொழுதுமே நக்சல் ஆதரவு பகுதிகளாக இருந்ததில்லை என்கிறார்கள். துப்பாக்கியேந்தித் தாக்கும் அடியாள் படையிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள தாங்களே ஆயுதமேந்த வேண்டிய சூழலுக்கு அரசு இவர்களைத் தள்ளிவிட்டுள்ளது. இப்பொழுது மக்கள் தங்களது எதிரியாக அரசையும், தங்களது நேசசக்தியாக நக்சல்பாரி போராளிகளையும் பார்க்கின்றனர்.




''ஊருக்கு வெளியே இருக்கும் அய்யனாரைப் போல, எங்களை ஒடுக்குபவர்களிடமிருந்து எங்களைக் காப்பவர்கள் நக்சலைட்டுகள்தான்'' என்கிறார் பந்துரு. மேலும், ''இந்தியக் கொடிக்கு மரியாதை செலுத்துவதெல்லாம் இப்போது கிடையாது; மரியாதை எல்லாம் செங்கொடிக்கு மட்டும்தான்'' என்கிறார் அவர். கிராம மக்கள் தங்களது பாரம்பரிய ஆயுதங்களான வில், அம்பு, கோடாரிகளைக் கொண்டே, தாக்க வரும் சல்வாஜூடும் குண்டர்படைகளை எதிர்த்து இன்னும் வீரியத்துடன் போரிடும் வகையில், அவர்களுக்கு மாவோயிஸ்டுகள் பயிற்சியளித்து வருவதாகவும் அவர் கூறுகிறார். பிஜாபூர் மாவட்டத்திலுள்ள இந்த கிராமங்களுக்குச் செல்லும் வெளிநபர்களை ''லால் சலாம்''(செவ்வணக்கம்)தான் இப்போதெல்லாம் வரவேற்கிறது. கிராமப்புற மக்களும் தங்களது பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக, போராளிகளால் நடத்துபடும் மக்கள் நீதிமன்றங்களை நோக்கி அருகிலிருக்கும் காடுகளுக்குத் திரளாகச் சென்று வருகின்றனர்.

கோந்தி பழங்குடியினரைப் பெரும்பான்மையாக கொண்ட இந்தப் பகுதியில், மக்கள் கடும் வெயிலில், வியர்வை சொட்ட உழைத்து தமது விளைநிலங்களில் நெல் பயிரிடுகிறார்கள். பருவமழையை நம்பியுள்ள இவர்களின் வாழ்க்கைப் போராட்டம் மிக அவலமானது. ஏழ்மையில் வாடும் இந்த மக்கள், சல்வாஜூடுமில் சேர மறுத்த ஒரே காரணத்தினால், அவர்களைத் தண்டித்து வருகிறது அரசு. அடிப்படை சமூக நலத் திட்டங்களை இங்கு செயல்படுத்துவதை வெகு காலம் முன்பே அரசு நிர்வாகம் நிறுத்திவிட்டது. மின் இணைப்பு கொடுக்கப்படாததால், வெச்சபல் கிராமம் இரவு நேரங்களில் காரிருளில் மூழ்கி விடுகிறது. அரசாங்க உயர்நிலைப் பள்ளிக் கட்டிடமோ, மூன்று வருடங்களுக்கு முன்பு சல்வா ஜுடும் குண்டர்களால் எரிக்கப்பட்டு விட்டது. உள்ளூர் பூசாரி ஓதும் மந்திரமும் பச்சிலைகளும்தான் நோயினால் தாக்கப்படும் இக்கிராம மக்களுக்கு ஒரே மருந்தாக உள்ளது.

''சத்தீஸ்கரின் கனிம வளங்களை டாடாவுக்கும் பன்னாட்டு கம்பெனிகளுக்கும் தாரை வார்க்க, இப்பகுதி வாழ் மண்ணின் மைந்தர்களை வெளியேற்றும் வன்மத்துடன் களமிறங்கியுள்ளது, அரசு. நடுநிலை வகிப்பதென்பது இங்கே குற்றமாகிவிட்டது. துணைராணுவப் படை கொண்டு இந்தப் பகுதிகளில் தாக்குதல் நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. வெச்சபல் போன்ற பல கிராமங்களில், அரசு பயங்கரவாத உள்நாட்டுப் போரைக் கட்டவிழ்த்துவிட்டு, கொடூரமான மனித இனப் படுகொலையை அரசு நடத்தப் போகிறது'' என்று அபாய எச்சரிக்கை செய்கிறார்கள், காந்தியவாதியான ஹிமான்ஷு குமார் உள்ளிட்ட மனித உரிமை இயக்க முன்னணியாளர்கள்.

இனி எப்படி வாழ்வது என்று புரியாமல் வேதனையில் தத்தளிக்கும் வெச்சப்பல் கிராம பழங்குடியின மக்கள்.



***(அபுதாபியிலிருந்து வெளிவரும் ''தி நேஷனல்'' என்ற நாளேட்டில், அனுஜ் சோப்ரா என்ற செய்தியாளர் 6.11.09 அன்று எழுதிய கட்டுரையின் சாரமான மொழியாக்கம்)***



இசுரேல் போர் விமானங்கள்
காசா முனை மீது நடத்திய தாக்குதலில்,
வீடு இடிந்து மண்ணில் புதையுண்டு
இறந்துபோன சிறுமி.

# எது பயங்கரவாதம்?

## அரசு பயங்கரவாதம்தான் உலக மக்களின் முதல் எதிரி என்பதை அம்பலப்படுத்தி, புதிய ஜனநாயகம் 1–15 மார்ச் 1986 இதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம்.

''இனியும் இது நீடிக்க முடியாது. எங்களுடைய பொறுமைக்கும் எல்லை இருக்கிறது. பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டு விட்டோம்'' என்று வானொளியில் தோன்றிய அமெரிக்காவின் தலைமைக் கொலை வெறியன் ரொனால்டு ரீகன் முழங்கினான்.

அமெரிக்க தேசியக் கொடி போர்த்தப்பட்ட சவப் பெட்டி ஒன்று இடுகாட்டுக்கு இராணுவ மரியாதையுடன் போகிறது. லெபனான் தலைநகர் பெய்ரூத்தில் 40 அமெரிக்கப் பணயக் கைதிகளுடன் நிற்கும் கடத்தப் பட்ட விமானத்திலிருந்து வீசியெறியப்பட்ட கடற்படை சிப்பாய் ராபர்ட் டீன் ஸ்டேதமின் சவப்பெட்டி.

அது புதைக்கப்படும் முன்னரே எல்சால்வடாரின் தலைநகர் சான்சால்வடாரிலிருந்து ரீகனுக்கு அதிர்ச்சியூட்டும் மற்றொரு செய்தி. மேலும் ஆறு அமெரிக்கர்கள் - நாலு கடற்படை வீரர்கள், இரண்டு வியாபாரிகள் - உட்பட பதின்மூன்று பேர் தெருவோர உணவு விடுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு முன்பே ஜெர்மனியின் பெரு நகரம் ஃப்ராங்க்பர்ட் விமான நிலையத்திலிருந்து இன்னுமொரு துயரச் செய்தி. பயணிகள் மண்டபத்தில் கேட்பாரற்றுக் கிடந்த பயணப் பெட்டி வெடித்துச் சிதறியது. இடிபாடுகளிடையே ஒரு போர்த்துக்கீசியன், இரண்டு ஆஸ்திரேலியக் குழந்தைகளின் பிணம், ஓர் அமெரிக்கன் உட்பட ஒன்பது தேசத்தைச் சேர்ந்த 42 பேர் படுகாயமுற்றனர்.

1985 ஜூன் கடைசி வாரத்தில் அடுத்தடுத்து நடந்த மூன்று சம்பவங்கள் இவை. ''மேற்கத்திய நாகரிகம் - பண்பாட்டின் மீது நாகரிகமற்ற - பண்பாடற்ற காட்டுமிராண்டிகளின் தாக்குதல்'' என்று மீண்டும் கூச்சலிட்டான், ரீகன்.

''பல வண்ணப் புனைவுருத் தோற்றங்களின் பயங்கரங்கள் நிறைந்த வாரம் அது'' என்றார்கள். பிறகு வந்த ஒவ்வொரு வாரமும் அப்படித்தான் மாறியது. 1982 இறுதியில் லெபனானில் இருந்து பாலஸ்தீனர்களை விரட்டியபோது பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து தாம் தப்பி விட்டதாக மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் கனவு கண்டன. ஆறு மாதத்திற்குள் அமெரிக்கத் தூதரகம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. வெடி குண்டுகள் ஏற்றிய லாரி ஒன்றை அமெரிக்க - பிரெஞ்சுப் படை தங்கியிருந்த விடுதியின் மீது மோதி 250 இராணுவத்தினரைக் கொன்றனர்.

இன்று பாலஸ்தீன - அரபு கொரில்லாக்களின் பயங்கரவாத நடவடிக்கைகள் உலகம் முழுவதும் விரி

வடைந்து விட்டது. இவர்கள் மட்டுமல்ல உலகம் முழுவதும் பலநாட்டுக் கொரில்லாக்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை அமெரிக்க மற்றும் மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் எதிர்கொண்டுள்ளன.

இரண்டு மாதங்களுக்கு முன்பு, வெளிநாடுகளில் எதிர்ப்புரட்சி வேலை செய்து விட்டுத் திரும்பிய 245 அமெரிக்க இராணுவ வீரர்களைச் சுமந்து வந்த இராணுவ விமானம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. சென்ற மாதம் ஆஸ்திரியத் தலைநகர் வியன்னா மற்றும் இத்தாலியத் தலைநகர் ரோமின் விமான நிலையங்கள் தாக்கப்பட்டன. பல பயணிகள் மாண்டனர். இந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு லிபியாவே காரணம் என்று கூறி, அந்நாட்டை இராணுவ-பொருளாதார முற்றுகையிட்டுள்ளது, அமெரிக்கா.

பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கு ஏகாதிபத்திய நாடுகள் மட்டும் தான் இலக்கு என்றில்லை. வடக்கு லெபனானில் உள்நாட்டுச் சண்டையின் காரணமாக வெடிகுண்டுகள் ஏற்றிய காரை மோதவிட்டு 75 பேரைக் கொன்றனர். இமயமலையிலுள்ள குட்டி நாடு நேபாளம். அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவேன் என்று அந்நாட்டு மன்னன் பிரேந்திரா அறிவித்த அடுத்தநாளே, அரண்மனையிலும் அரசு கட்டிடங்களிலும் குண்டு வெடித்ததில் ஏழு பேர் மாண்டனர்; 240 பேர் காயமுற்றனர். இலங்கையில், இரயிலேகூடக் கடத்தப்பட்டுத் தகர்க்கப்படுகிறது.

''இது முதலாளித்துவ உலகத்தின் பயங்கரவாத நடவடிக்கைகள்'' என்று கூறி, அவற்றிலிருந்து தப்பி விட்டதாகக் கனவு கண்டது ருஷ்ய சமூக ஏகாதிபத்தியம். ஆனால், அதன் தூதரக அதிகாரி டெல்லி நகரத் தெருவிலே காருக்குள்ளேயே சுட்டு வீழ்த்தப்பட்டார். ஆஃப்கானிஸ்தானின் கொரில்லாத் தாக்குதல்களுக்கு நாள்தோறும் ஏராளமான ரஷியர்கள் அங்கே பலியாகிறார்கள்.

''பயங்கரவாதம் ஏதோ வெளிநாட்டுப் பிரச்சினை; இது காந்தி பிறந்த தேசம். இங்கே அகிம்சையே நிலவும்'' என்று யாரும் நிம்மதியாக இருந்து விட முடியாது. காஷ்மீரி, சீக்கியத் தீவிரவாதிகளின், அசாம் மற்றும் திரிபுரா தீவிரவாதிகளின் பயங்கரவாதத்தில் சிக்கித் தவிக்கிறது, இந்தியா. ஆனால், அதன் பஞ்சாப் - அசாம் ஒப்பந்தத்திற்குப் பிறகு, பயங்கரவாதத்திலிருந்து மீண்டு விட்டதாக நம்பச் சொன்னது, இந்திய அரசு. ஆனால், ஒப்பந்த நாயகன் லோங்கோ வாலே பயங்கரவாதத்திற்குப் பலியானார். 529 பேரை ஏற்றி வந்த இந்திய விமானம் அட்லாண்டிக் கடலின் மீது வெடித்துச் சிதறியது. அதன் பிறகுதான், பயங்கரவாதம் இந்தியாவைக் கவ்விக் கொண்டிருப்பதாக ஒப்புக் கொண்டனர்.

ஆக, அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அணு ஆயுதப் போரை விட, நிகழ்ந்து வரும் பயங்கரவாதப் போர்தான் எல்லாப் பிற்போக்கு உலகத் தலைவர்களையும் ஆட்டிப் படைக்கிறது. பயங்கரவாதம் அவர்களைப் பயபீதியடையச் செய்துள்ளது. குண்டு துளைக்க முடியாத கார்களில், குண்டு துளைக்க முடியாத கோட்டு போட்டுக் கொண்டு ஆயுதந்தாங்கிய அதிரடிப்படைகள் புடை சூழத்தான் அவர்கள் நடமாட முடிகிறது; குண்டு துளைக்க முடியாத கூண்டுகளிலிருந்துதான் மக்களுக்குக் காட்சியளிக்க முடிகிறது; பெரும்பாலான நேரங்களில் தங்கள் மாளிகைகளிலேயே சிறைவாசம் செய்கின்றனர். இவ்வளவுக்கும் காரணம் பயங்கரவாதம்.

இவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகளிலிருந்தும் அமெரிக்க அதிபர் ரீகன், இங்கிலாந்து பிரதமர் தாட்சர், உலகக் கத்தோலிக்க மதகுரு போப் இரண்டாவது ஜான்பால் போன்றவர்களைக் கொலை செய்ய முயன்றுள்ளனர். எகிப்தின் அதிபர் சதாத், இந்திய பிரதமர் இந்திரா போன்றோர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.



இந்திரா காந்தி படுகொலையானதை அடுத்து, காங்கிரசு குண்டர்கள் தில்லியில் நடத்திய சீக்கியப் படுகொலை. (கோப்புப் படம்)

ஆனால், பயங்கரவாதத்திற்கு உலகப் பிற்போக்கு ஆளும் வர்க்கத் தலைவர்களும், விமானப் பயணிகளான மேட்டுக்குடியினரும், இராணுவத்தினரும் மட்டும் பலியாவதில்லை. குறித்த இலக்குகளைத் தாக்குவதிலிருந்து தாறுமாறாக சுடுவது, வெடிகுண்டு வீசுவது, குண்டு வைத்துத் தகர்ப்பது என்று சம்பந்தமே இல்லாத அப்பாவி மக்களைக் கொலை செய்து பயபீதியைப் பரப்பி அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற முயல்வது என்பதாக பயங்கரவாதம் வளர்ந்து விட்டது.

டெல்லி மற்றும் பிற வடநாட்டு நகரங்களில் அப்பாவி பஸ் பயணிகள் 'டிரான்சிஸ்டர்' வெடிகுண்டுக்குப் பலியாயினர். அயர்லாந்தில் கத்தோலிக்கர்களுக்கெதிராக நடந்த தாக்குதலுக்குப் பதிலடி கொடுப்பதாக நடந்த தாறுமாறான துப்பாக்கிச் சூட்டில் அப்பாவி புராட்டஸ்

டண்டுகள் கொல்லப்பட்டனர். இப்படி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஏராளமான மக்களும் பலியாகின்றனர். இதையே ஆதாரமாகக் கொண்டு பாசிச வெறியர்களான ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தனே முதல், உலகப் போர் வெறியன் ரீகன் வரை பயங்கரவாதத்திற்கெதிராகப் போராடும் வீரர்களாக வேடம் போடுகிறார்கள். அகிம்சா மூர்த்திகளாகக் காட்டிக் கொண்டு எல்லாவகையான வன்முறை நடவடிக்கைகளையும் பயங்கரவாதமாகச் சித்தரிக்கின்றனர்.

பயங்கரவாதத்தை எதிர்த்து ஒழித்துக் கட்டப் போவதாகக் கூறும் உலகப் பிற்போக்கு ஆளும் கும்பல்கள்தாம் முதன்மையாக பயங்கரவாதிகள். ஆனால் வெவ்வேறு நாடுகளில் நடக்கும் புரட்சிகர இயக்கங்களையும் பயங்கரவாதமென்று இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அயர்லாந்திலும் ஸ்பெயினிலும், போர்ச்சுக்கலிலும் தெருவில் ரத்த ஆறு ஒடுகிறது. துருக்கியில் 1977-இல் 262 அரசியல் படுகொலைகள் நடந்துள்ளன. கிரீஸின் ஏதென்ஸில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதற்காக வெடிகுண்டுகள் வீசி கலவரம் செய்தனர். நிகரகுவாவில் முந்தைய பாசிச வெறியன் சமோசா ஒரே மாதத்தில் 3000 மக்களைப் படுகொலை செய்தான். எல்சால்வடாரின் பாசிச கூலிப் படை ஒரு நாளைக்கு 200 பேர் வீதம் கொன்று வருகிறது. 1980 ஆகஸ்டு 7-ந் தேதி போடோசி என்ற பொலிவிய நகருக்கு அருகே 2000 விவசாயிகளை பொலிவிய பிளாங்கிஸ்டுகளும், அர்ஜென்டினா கூலிப்படையும், சி.ஐ.ஏ. உளவாளிகளும் அடங்கிய பொலிவிய பாசிச கும்பலும் வெட்டிப் படுகொலை செய்தது.

பண்டாரநாயகா, ஓமர் தோரி ஜேஸ், பாட்ரிஸ் லுமும்பா, ஒர்லாண்டே எலட்லியர், ஆஸ்கர் ஆர்நுல்போ ரோமிரோ - போன்ற பல நாட்டுத் தலைவர்கள் அமெரிக்காவின் சி.ஐ.ஏ.வினால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். லிபியாவின் மும்மர் கடாபியையும், கியூபாவின் பிடல் காஸ்ட்ரோவையும் கொலை செய்வதற்காக சி.ஐ.ஏ.வின் கூலிப் படைகள் மீண்டும் மீண்டும் ஏவிவிடப்படுகின்றன.

இந்தியாவில் நக்சல்பாரி புரட்சியாளர்கள், கேரள கருணாகரன் - ஜெயராம்படிக்கல், தமிழ்நாடு எம்.ஜி.ஆர். - தேவாரம் கும்பல், ஆந்திரா என்.டி.ஆர். - வெங்கல் ராவ் கும்பல், மேற்கு வங்க சித்தார்த்த சங்கர்ரே - ரஞ்சித் குப்தா கும்பல், பீகாரில் ஜெகன்நாத் மிஸ்ரா - தாவே கும்பல் போன்ற பாசிச வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டனர். சீக்கியர்களின் பொற்கோயிலுக்குள் புகுந்து ஆயிரக்கணக்கானவரை இந்திய இராணுவம் படுகொலை செய்தது. இந்திரா சாவை அடுத்து பாசிச காங்கிரசு குண்டர்கள் டெல்லி மற்றும் பிற நகரங்களில் வெறியாட்டம் போட்டு 5000 சீக்கிய மக்களைக் கொன்றனர்.

இங்கே எடுத்துக் காட்டப்பட்ட இந்த படுகொலைகள் எதையும் பயங்கரவாத நடவடிக்கைகளாக உலகப் பிற்போக்கு ஆளும் கும்பல்கள் கருதவில்லை. இவை அனைத்தும் அரச பயங்கரவாதத்தின் சில சான்றுகள் தாம்.

புரட்சிகர வாய்ச் சவடால் அடித்துக் கொண்டே ருஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் அதன் தொங்கு சதை நாடுகளும் கூட அரச பயங்கரவாதத்தை ஏவி விடுகின்றன. முன்பு செக்கோஸ்லோவாக்கியாவிற்கெதிராக ஆக்கிரமிப்புத் தாக்குதல் நடத்தியது ருஷ்யா. தற்போது ஆஃப்கானை ஆக்கிரமித்துக் கொண்டு விடுதலை இயக்கங்களுக்கெதிராக பயங்கரவாத ராணுவத் தாக்குதல் தொடுக்கிறது. மேற்கே கியூபாவையும் கிழக்கே வியத்நாமையும் கூலிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. இந்திய மக்கள் மீது பாசிசத் தாக்குதல் தொடுத்த இந்திராவையும், எரிட்ரிய இன மக்களை அடக்கி ஒடுக்கும் எதியோப்பிய இராணுவ சர்வாதிகாரி மெங்குஸ்து ஹெய்லி மரியத்தையும் ருஷ்ய சமூக ஏகாதிபத்தியம் ஆதரிக்கிறது.

> ''பாட்டாளிகள் மற்றும் அரைப்பாட்டாளிகள், உழைக்கும் வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும்போது மிருகத்தனமானதாக, கிரிமினல் குற்றமாக பயங்கரவாதம் மாறிவிட்டது.''
>
> — லெனின்

அரச பயங்கரவாதம்தான் உலக மக்களின் முழு முதல் எதிரி ஆகும். ஆனால், இவர்களது ஒடுக்குமுறை சுரண்டலுக்கெதிராகப் போராடும் புரட்சிகர இயக்கங்களையும், தேசிய விடுதலை இயக்கங்களையும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான சுதந்திரப் போராட்டங்களையும் பயங்கரவாதமென்று சித்தரிக்கின்றனர்.

உண்மையில் புரட்சிகர இயக்கங்கள் எதுவும் புரட்சிகர மக்கள் திரள் வன்முறை இன்றி வெற்றி பெற முடியாது. வன்முறையைப் புரட்சிகர அரசியல் நோக்கத்திற்கு பயன்படுத்துவதாலேயே, புரட்சிகர இயக்கங்களையும் பயங்கரவாதமென்று பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் சித்தரிக்கின்றன.

இனவெறி, நிறவெறி, அதி தீவிர வலதுசாரி பயங்கரவாதங்கள் அனைத்தும் புரட்சிக்கு எதிரானவை என்பது யாவரும் அறிந்த உண்மையே. ஆனால், புரட்சிச் சவடால் அடிக்கும் அதிதீவிர இடதுசாரி பயங்கரவாத இயக்கங்கள் பல உலகிலுள்ளன. ''செம்படை'', ''செங்காவலர்கள்'', ''ஆயுதந்தாங்கிய பாட்டாளிகளின் கருக்குழு'', ''செம்படைப் பிரிவு,'' ''சுயேச்சைப் படைக்குழு''

> **புரட்சியாளர்கள்**
> **தனிநபர் பயங்கரவாதத்தை**
> **நிராகரிக்கும் அதேவேளையில்,**
> **புரட்சிகர மக்கள்திரள்**
> **பயங்கரவாதத்தை ஏற்கிறோம்.**
> **ஏனெனில், அந்த முறையில்தான்**
> **பயங்கரவாதத்தையே**
> **நிரந்தரமாக ஒழிக்க முடியும்.**

என்று பல பெயர்களில், குறிப்பாக ஜப்பான், இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி போன்ற ஏகாதிபத்திய நாடுகளில் இவை உள்ளன.

மக்களைச் சார்ந்து நின்று புரட்சிகர வன்முறை மூலம் உழைக்கும் மக்களின் அதிகாரத்தை நிறுவுவது என்கிற மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனை இவர்களது சித்தாந்தம் அல்ல. ஆயுதங்களைச் சார்ந்து நின்று ஒரு நடுத்தர வர்க்கக் குட்டி முதலாளித்துவ சிறு கும்பலே தனிநபர் படுகொலைகள் மூலம் ஆட்சியைப் பிடிப்பது என்கிற சேகுவாரா, ரேஜிஸ்தேப்ரே, மரிகெல்லா போன்றவர்களின் தனிமனித பயங்கரவாதமே இவர்களது சித்தாந்த அடிப்படை. நடுத்தர வர்க்கத்தின் உறுதியின்மை, அவசர வெற்றி பற்றிய ஆசை ஆகியவற்றின் விளைவே இது. எனவே, அதிதீவிர இடது பயங்கரவாதம் போலி புரட்சிவாதம். இன்றைய ஏகாதிபத்தியம் அதிதீவிர இடது பயங்கரவாதிகள் பலரைத் தமது எதிர்ப்புரட்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறது.

ஆனால், அதிதீவிர இடது பயங்கரவாதச் செயல் புரிந்துள்ள தனிநபர்களைப் பற்றி புரட்சிகர இயக்கம் என்ன கண்ணோட்டம் கொள்கிறது? புரட்சிகரமான சமுதாய மாற்றத்தில் நேர்மையான நம்பிக்கையும், ஒடுக்குமுறை சுரண்டலுக்கு எதிரான போராட்டத்தை துரிதப்படுத்துவதில் நேர்மையான நோக்கமும் இருப்பின் அத்தகைய தனிநபர்களை புரட்சிகர இயக்கங்கள் ஆதரிக்க வேண்டும். பயங்கரவாத நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதற்குக் காரணம் அவர்களல்ல; எதிர்ப்புரட்சி பயங்கரவாதம் தான். பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் எப்போதுமே தமது சொந்த பயங்கரவாத நடவடிக்கைகளை நியாயப்படுத்தியே வந்திருக்கின்றன. ஆனால், அவற்றின் பயங்கரவாதத்திற்குப் பலியானவர்களின் எதிர்த்தாக்குதலைப் பழிதூற்றியே வந்திருக்கின்றன.

புரட்சியாளர்கள் தனிநபர் பயங்கரவாதத்தை நிராகரிக்கும் அதேவேளையில், புரட்சிகர மக்கள் திரள் பயங்கரவாதத்தை ஏற்கிறோம். ஏனெனில், அந்த முறையில் தான் பயங்கரவாதத்தையே பூண்டோடு நிரந்தரமாக ஒழிக்க முடியும்.

மக்கள் திரள் பயங்கரவாதத்தை மேற்கொள்வதாலேயே புரட்சியாளர்களையும் கிரிமினல் குற்றவாளிகளைப் போலச் சித்தரிக்கிறார்கள், ஆளும் வர்க்கத்தினர். இதுவொன்றும் புதிதல்ல. அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய தமது கடிதத்தில் லெனின் இதைத் தெளிவுபடுத்தி விட்டார். இதுதான் எல்லாப் புரட்சியாளர்களின் பதிலுமாகும்.

''நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராகத் தமது சொந்த நலன்களுக்காகப் பயங்கரவாதிகள் கட்டவிழ்த்து விட்ட போது, பயங்கரவாதம் நியாயமானதாக நீதியானதாக இருந்தது. முதலாளிகளுக்கெதிராகத் தொழிலாளர்களும் விவசாயிகளும் பயன்படுத்தத் துணிந்தபோது பயங்கரவாதம் மிருகத்தனமானதாக கிரிமினல் குற்றமாக மாறி விட்டது! சுரண்டும் ஒரு சிறுபான்மைக்குப் பதிலாக மற்றொரு சுரண்டும் சிறுபான்மை வருவதற்காகப் பயன்படுத்தப்பட்டபோது, பயங்கரவாதம் நியாயமானதாக நீதியானதாக இருந்தது. ஒவ்வொரு சுரண்டும் சிறுபான்மையையும் தூக்கியெறியும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும்போது, உண்மையில் பரந்துபட்ட பெரும்பான்மை நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும்போது, பாட்டாளிகள் மற்றும் அரைப்பாட்டாளிகள், உழைக்கும் வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படும் போது பயங்கரவாதம் மிருகத்தனமானதாக கிரிமினல் குற்றமாக மாறி விட்டது.''

ஒடுக்குமுறை சுரண்டலுக்கெதிராக, உழைக்கும் மக்களின் விடுதலைக்காகப் போராடும்போது மிருகத்தனமானதாக, கிரிமினல் குற்றமாகக் கருதப்பட்டாலும், மக்கள் திரள் பயங்கரவாதத்தையே உயர்த்திப் பிடிப்போம்!

● ஆர்.கே.

முசுலீம் தீவிரவாதிகள் மும்பய் சத்ரபதி சிவாஜி ரயில் நிலையத்தில் அப்பாவி பொதுமக்கள் மீது நடத்திய படுகொலைத் தாக்குதலின் சுவடுகள்.
(கோப்புப் படம்)



# அணுசக்தி கடப்பாடு மசோதா:
# பலியாவதா மக்களின் உயிர்?

**அமெரிக்க முதலாளிகளின் இலாபத்தையும், கிரிமினல் குற்றங்களையும் பாதுகாப்பதே அணுசக்தி கடப்பாடு மசோதாவின் நோக்கம்.**

போபால் விஷவாயுப் படுகொலையால் பாதிக்கப்பட்ட மக்கள் உரிய நட்ட ஈடு வழங்கக் கோரியும், யூனியன் கார்பைடு முதலாளி வாரன் ஆண்டர்சனைக் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் தண்டிக்கக் கோரியும் இன்று வரை போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில், மன்மோகன் சிங் அரசு, அணு ஆலை விபத்துக்கள் தொடர்பாக ஒரு புதிய மசோதாவொன்றைத் தயாரித்து, அதனைச் சட்டமாக்கிவிட முயன்று வருகிறது.

அம்மசோதாவின் பெயர் குடிமை அணுசக்தி கடப்பாடு மசோதா (Civil Nuclear Liability Bill). இந்தியாவிலுள்ள அணு மின்சாரம் தயாரிக்கும் அணுக்கூடங்களில் விபத்து ஏற்பட்டால், அவ்விபத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு எவ்வளவு நட்ட ஈடு தருவது, அந்த நட்ட ஈட்டை யார் தருவது என்பது பற்றி வரையறுக்கிறது, இம்மசோதா. பிரதமர் மன்மோகன் சிங் கடந்த டிசம்பர் மாதம் அமெரிக்காவிற்குக் கிளம்பிச் செல்வதற்கு முன்பாக, இம்மசோதா மைய அமைச்சரவையின் ஒப்புதலோடு அறிவிக்கப்பட்டது. இதிலிருந்தே, யாரைத் திருப்திபடுத்துவதற்காக இம்மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அமெரிக்காவில் அணு மின்சாரம் தயாரிக்கத் தேவைப்படும் இயந்திரங்களைத் தயாரிப்பது, அணு உலைகளை நிர்மாணிப்பது, அவற்றை இயக்குவது ஆகிய நடவடிக்கைகள், இந்தியாவைப் போல முழுக்க முழுக்க அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனி, வெஸ்டிங்ஹவுஸ் எலெக்ட்ரிக் கம்பெனி போன்ற தனியார் நிறுவனங்கள்தான் அணு மின்சாரத் தயாரிப்புத் தொழிலில் கோலோச்சி வருகின்றன. இத்தனியார் நிறுவனங்கள் தயாரித்து நிர்மாணித்த அமெரிக்க அணு உலைகளில் ஏதாவது விபத்து ஏற்பட்டால், அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இந்நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டியதும் இல்லை; பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டிய கடப்பாடும் அந்நிறுவனங்களுக்குக் கிடையாது. அமெரிக்காவில் சட்டபூர்வமாகவே இப்பாதுகாப்பு இத்தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இயங்கி வரும் அணு உலைகளில் விபத்து ஏற்பட்டால், அவ்விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்குவதற்காக காப்பீடு திட்டமொன்றை அமெரிக்க அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஆனால் இந்தியாவிலோ, ஆலைகளை யார் நடத்தி வருகிறார்களோ, அவர்கள்தான் அவ்வாலையினால் பொதுமக்களுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கத் தனியார் நிறுவனங்கள் இந்தியாவில் இரண்டு இடங்களில் அணு உலைகளை அமைக்க முன் வந்திருப்பதையொட்டி, இந்திய அரசு தனது கொள்கையை மாற்றிக் கொண்டு, குடிமை அணுசக்தி கடப்பாடு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. அமெரிக்காவின் உள்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் இந்தியாவிற்கு வந்திருந்தபொழுது, இந்தியாவின் அணு மின்சார உற்பத்தியில் முதலீடு செய்ய முன்வரும் அமெரிக்க நிறுவனங்களுக்கு அமெரிக்காவில் இருப்பதைப் போன்ற சட்டபூர்வ பாதுகாப்பு இந்தியாவிலும் வழங்கப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டுச் சென்றிருந்தார். அக்கட்டளையை நிறைவேற்றிவிட்டு, அமெரிக்காவிற்குப் பறந்திருக்கிறார் மன்மோகன் சிங்.

''இந்தியாவின் அணு மின்சார உலைகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்களைத் தரும் நிறுவனங்கள், அவ்வணு உலைகளில் ஏற்படும் விபத்துக்களுக்குப் பொறுப்பேற்க வேண்டியதில்லை; அவ்வணு உலைகளை யார் இயக்கி வருகிறார்களோ, அந்நிறுவனம்தான் விபத்தினால் ஏற்படக்கூடியப் பாதிப்புகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும். இதற்காக அந்நிறுவனம் 45 கோடி அமெரிக்க டாலர் பெறுமான தொகைக்கு (ஏறத்தாழ 2,300 கோடி ரூபாய்) விபத்துக் காப்பீடு எடுக்க வேண்டும். விபத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு வழங்க வேண்டிய நட்ட ஈடு 2,300 கோடி ரூபாய்க்கு அதிகமானால், அதனை இந்திய அரசுதான் வழங்க வேண்டும்.'' — இவைதான் இம்மசோதாவின் முக்கிய அம்சங்கள்.

மைய அரசின் கீழுள்ள அணுசக்திக் கழகம்தான் இந்தியாவிலுள்ள அணு உலைகளை இயக்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. எனவே, எதிர்காலத்தில் அமெரிக்காவின் தயவில் இயங்கும் இந்திய அணு உலைகளில் ஏதாவது விபத்து ஏற்பட்டால், நட்ட ஈடு வழங்குவது உள்ளிட்ட அதற்கான முழு பொறுப்பையும் இந்திய அரசுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் இம்மசோதா சுற்றி வளைத்துச் சொல்லும் செய்தி.

அணு உலைகளை நிர்மாணிப்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தையும், ராயல்டியையும் சுருட்டிக் கொள்ளும் அமெரிக்க நிறுவனங்கள், தாங்கள் வழங்கிய அணு

உலைகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்குப் பொறுப் பெடுத்துக் கொள்ளாமல் தட்டிக் கழிப்பது எந்தவொரு வர்த்தக நியாயத்திலும் அடங்காது. ஆனால், அமெரிக்க எஜமானர்களோ, ''அமெரிக்க நிறுவனங்கள் அணு உலைகளை வழங்கினாலும், அதை இயக்கப் போவதும், அவ்வணு உலைகளில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தை அனுபவிக்கப் போவதும் இந்தியாதானே; எனவே, விபத்தினால் ஏற்படக்கூடிய சுமைகளை இந்தியாதான் சுமக்க வேண்டும்'' எனக் கூறி, இந்த அடாவடித்தனமான மசோதாவை நியாயப்படுத்தி வருகிறார்கள்.

அடுத்த இருபது ஆண்டுகளுக்குள் 40,000 மெகாவாட் மின்சாரத்தை அணு ஆற்றலைப் பயன்படுத்தித் தயாரிக்கவும் (இதற்கு ஏறத்தாழ 9 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு தேவைப்படும்) அதற்கேற்பஅணு மின்சார உற்பத்தியில் தனியாரை அனுமதிக்கவும் இந்திய அரசு திட்டமிட்டிருப்பதால், இந்த ஒருதலைப்பட்சமான மசோதாவை இந்தியத் தரகு முதலாளிகளும் வரவேற்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், டாடா, ரிலையன்ஸ், எல் அண்ட் டி, காமோன் ஆகிய இந்திய நிறுவனங்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டுதான் இந்திய அணுசக்தித் துறை இம்மசோதாவையே தயாரித்திருக்கிறது. இம்முதலாளிகளின் பேராசைதான் மசோதாவாக அவதாரமெடுத்திருக்கிறது.

இப்படிபட்ட சட்டபூர்வ பாதுகாப்பு அளிக்கப்பட்டதால்தான் அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவின் அணு மின்சாரத் துறையில் முதலீடு செய்ய முன்வரும் எனத் தனது சரணாகதிக்கு விளக்கம் அளிக்கிறது, இந்திய அரசு. இந்திய அணுசக்தித் துறையில் முதலீடு செய்ய விருப்பமுள்ள ரசியாவும், பிரான்சும் இப்படிபட்ட அடாவடித்தனமான பாதுகாப்பைக் கோரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே, அமெரிக்க முதலாளிகளுக்கு இப்படிபட்ட சலுகையை அளித்து ஒரு ஏமாளித்தனமான ஒப்பந்தத்தைப் போட்டுக் கொள்ள வேண்டிய அவசியமே இந்திய அரசிற்குக் கிடையாது. ஆனாலும், டாக்டர் மன்மோகன் சிங் இந்திய மக்களின் நலன்களுக்கு எதிரான ஒப்பந்தத்தைப் போட்டுக் கையில் எடுத்துக் கொண்டு அமெரிக்காவிற்குப் பறந்து போகிறார் என்றால், இத்தகைய அமெரிக்க அடிவருடி இன்னும் இந்தியப் பிரதமர் பதவியில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு இந்திய மக்கள் வெட்கப்பட வேண்டும்.

அமெரிக்காவின் தயவில் உருவாகும் இந்திய அணு உலைகளை இயக்கப் போகும் இந்திய அணுசக்திக் கழகம், 2,300 கோடி ரூபாய்க்கு விபத்துக் காப்பீடு எடுத்துக் கொள்ள வேண்டும் என ஒரு நட்ட ஈட்டுக் கணக்கைப் போட்டிருக்கிறார்களே, அக்கணக்குக்குப் பின்னும் அமெரிக்க எஜமானர்களின் இரக்கமற்ற வக்கிரப் புத்திதான் வெளிப்பட்டுள்ளது. போபால் விஷவாயுப் படுகொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு யூனியன் கார்பைடு நிறுவனம் 300 கோடி அமெரிக்க டாலர் நட்ட ஈடாகத் தர வேண்டும் என இந்திய மக்களின் சார்பாகக் கோரப்பட்டது. ஆனால், இந்திய அரசும், அமெரிக்காவின் யூனியன் கார்பைடு நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு, இந்திய உச்ச நீதி மன்றத்தின் மூலம் கட்டப் பஞ்சாயத்து செய்து 45 கோடி அமெரிக்க டாலருக்கு மேல் ஒரு சல்லிக்காசுகூட நட்ட ஈடாகத் தர முடியாது என அறிவித்தன.

அந்தக் கட்டப் பஞ்சாயத்து கணக்கைத்தான் அணு உலை விபத்துக் காப்பீடு தொகையாக இந்திய, அமெரிக்க முதலாளிகள் அறிவித்திருக்கிறார்கள். மேலும்,




போபால் நகரத் தலைமை நீதிபதி யூனியன் கார்பைடு தலைவர் வாரன் ஆண்டர்சனைக் கைது செய்ய உத்தரவு பிறப்பித்ததையடுத்து, போபால் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்). இது போன்ற ''சங்கடங்கள்'' எதிர்காலத்தில் வரக்கூடாது என்ற நோக்கத்தோடுதான், இந்திய அரசு அணுசக்தி கடப்பாடு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறது.

போபால் படுகொலைக்குக் காரணமான யூனியன் கார்பைடு நிறுவனத்தின் முன்னாள் தலைவர் வாரன் ஆண்டர்சனைக் கைது செய்து அழைத்து வந்து விசாரிக்க வேண்டும் என இந்திய மக்கள் இன்றும்கூடக் கோரி வருவதால், அப்படிபட்ட சிக்கல்கள் எதிலும் அமெரிக்க அணுசக்தி நிறுவன முதலாளிகள் எதிர்காலத்தில் மாட்டிக் கொண்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான், இந்த குடிமை அணுசக்தி கடப்பாடு மசோதாவில் அம்முதலாளிகளுக்கு விபத்துக்குப் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டிய கடப்பாடிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

போபால் விஷவாயுப் படுகொலை சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் (ஏறத்தாழ 6 இலட்

சம் பேர்) கிடைத்துள்ள நட்ட ஈட்டுத் தொகை வெறும் 500 அமெரிக்க டாலர்கள்தான். விஷவாயுவால் பாதிக்கப் பட்டவர்களின் ஓராண்டு மருத்துவச் செலவை ஈடு கட்டக்கூட இந்த அற்பத் தொகை பயன்படாது என முதலாளித்துவப் பத்திரிகைகளே அம்பலப்படுத்தி எழுதியுள்ளன. அணு உலைகளில் விபத்து ஏற்பட்டால், அது போபால் 'விபத்தை'க் காட்டிலும் பல மடங்கு அதிகமான பாதிப்புகளை இந்திய மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படுத்தும் வாய்ப்பிருக்கும்பொழுது, இந்த 2,300 கோடி ரூபாய் காப்பீடு என்பது வெறும் சுண்டைக்காய் பணம்தான். ஆனால், அணுசக்தித் துறை அதிகாரிகளோ, இதற்கு மேல் யாரால் நட்ட ஈடு தர முடியும் எனக் கேட்டு, இந்தக் கண்துடைப்பு நட்ட ஈட்டை நியாயப்படுத்த முனைகிறார்கள். ஒருபுறம், அணு உலை விபத்துக்களுக்குப் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டிய கடப்பாடிலிருந்து அமெரிக்க முதலாளிகளுக்கு விலக்கு அளிப்பது; இன்னொருபுறம், விபத்தினால் பாதிக்கப்படக்கூடிய இந்திய மக்கள் உரிய நட்ட ஈட்டைக் கோரிப் பெற முடியாமல் தடுப்பது என இரண்டு அபாயங்களைக் கொண்டுள்ளது, இம்மசோதா.

அமெரிக்காவின் கட்டளைக்கு அடிபணிந்து இம்மசோதாவை நிறைவேற்றியுள்ள மன்மோகன் சிங் கும்பல், இதே போன்று அணு உலை விபத்துக்களில் இருந்து தனியார் முதலாளிகளைக் காப்பாற்றும் நோக்கத்தோடு ஏகாதிபத்திய நாடுகளால் உருவாக்கப் பட்டுள்ள வியன்னா ஒப்பந்தத்திலும் கையெழுத்திடச் சம்மதம் தெரிவித்திருப்பதாகச் செய்திகள் கசிந்து வெளிவருகின்றன. அமெரிக்கா இன்னும் நெருக்கிப் பிடித்தால், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில்கூட கையெழுத்திடுவதற்கு மன்மோகன் சிங் கும்பல் தலையாட்டிவிடும்.

இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவப்போவதாக அதன் ஆதரவாளர்கள் ஊதிப் பெருக்கி வருகிறார்கள். ஆனால், அவ்வொப்பந்தம் இந்திய மக்களின் உயிர் வாழும் உரிமைக்கும், இந்தியச் சுற்றுச்சூழலுக்கும் வேட்டு வைக்கும் கயமைத்தனம் நிறைந்தது என்பதை இம்மசோதா அம்பலப்படுத்தியிருக்கிறது.

● ரஹீம்

## 25-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம் சிறப்பு வாசகர் வட்டக் கூட்டம்

இருபத்தைந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள புதிய ஜனநாயகம் இதழை வாழ்த்தியும், வாசகர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை விளக்கியும் திருச்சி வாசகர் வட்டத் தோழர்கள் தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து கடந்த 6.12.09 அன்று மாலை அரங்கக் கூட்டத்தைப் பேருற்சாகத்துடன் நடத்தினர். திருச்சி-புத்தூர் நாலுரோடு சண்முகா திருமண அரங்கில், மாணவர்களும் மாணவிகளும் இணைந்து நடத்திய தப்பாட்டத்தோடு தொடங்கிய இக்கூட்டத்திற்கு ம.க.இ.க. மையக் கலைக்குழு தோழர் கோவன் தலைமை தாங்கினார். 25 ஆண்டுகளுக்கு முன்பு புதிய ஜனநாயகம் இதழ் தொடக்கவிழாவின் போது, தான் கலை நிகழ்ச்சி நடத்தியதைப் பெருமிதத்துடன் குறிப்பிட்ட அவர், அதன் புரட்சிகர அரசியலையும், அது எவ்வாறு ஒரு அமைப்பாளனாகச் செயல்பட்டது என்பதையும் தனது தலைமையுரையில் விளக்கினார்.

''புதிய ஜனநாயத்தின் தொலைநோக்கும் நிரூபிக்கப்பட்ட முன்னோக்குகளும்'' என்ற தலைப்பில் ம.க.இ.க. கவிஞர் தோழர் துரை.சண்முகம் ஆற்றிய சிறப்புரையில், எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி மார்க்சிய-லெனினிய அரசியலை நிலைநாட்டும் வகையில் இதழ் வெளிவருவதையும், எம்.ஜி.ஆரை பாசிஸ்டு என்று அச்சமின்றித் தோலுரித்துக் காட்டியதோடு, அமைதிப்படை என்ற பெயரில் ஈழ மக்கள் மீது ஆக்கிரமிப்புப் போரை ஏவிய பாசிச ராஜீவை ''கொலைகாரன் ராஜீவ்'' என்று அட்டைப்படத்தோடு வெளியிட்ட அதன் துணிவையும், பல்வேறு அடக்குமுறைகள் - பொய்வழக்குகளை எதிர்கொண்டு கொள்கை உறுதியோடு தொடர்ந்து இதழை வெளியிடுவதையும், பு.ஜ. முன்வைத்த அரசியல் எவ்வாறு சரியானவை என்பது இன்று நிரூபிக்கப் பட்டிருப்பதையும் தனக்கே உரித்தான சுவையோடு விளக்கினார். கால் நூற்றாண்டு காலமாக இந்த இதழை பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு நடுவே மக்களிடம் கொண்டு சென்று, புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்து வளர்த்த முந்தைய தலைமுறையைச் சேர்ந்த வாசகர்கள், விற்பனையாளர்கள், முகவர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்த அவர், புதிய ஜனநாயகம் முன்வைக்கும் அரசியலை மக்களிடம் கொண்டு சென்று அமைப்பாக்கி, புரட்சியைச் சாதிப்பதுதான் வாசகர்களாகிய நாம் ஆற்ற வேண்டிய மிக முக்கிய கடமை என்பதை உணர்த்தினார்.




இக்கூட்டத்தில் பு.ஜ. இதழின் புரட்சிகர அரசியலை வாழ்த்தியும், ஈழ மக்களின் அவலத்தையும் விளக்கியும் தோழர்கள் கவிதை வாசித்தனர். அரங்கில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த 24 ஆண்டுகால புதிய ஜனநாயகம் இதழ்களை ஆர்வத்தோடு எடுத்து படித்துப் பார்த்த பல புதிய வாசகர்கள், உடனடியாகச் சந்தா செலுத்தி, இதழ் வளர்ச்சிக்கு நன்கொடையும் அளித்தனர். முன்பேர வர்த்தகத்தால் விலைவாசி உயர்வதைச் சித்தரிக்கும் ''துவரம் பருப்பல்ல, துயரம் பருப்பு'' எனும் பு.மா.இ.மு. தோழர்கள் நடத்திய நாடகமும், மாணவர்களும் சிறுவர்களும் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சியும் புரட்சிகர அரசியலை ஏந்தி போராட அறைகூவுவதாக அமைந்தன.

— *பு.ஜ.செய்தியாளர்கள், திருச்சி.*

துபாய் நெருக்கடி:

# உலக வணிகத்தின் உல்லாசபுரி சுடுகாடானது!

**தனியார்மயத்தின் கீழ் நீடித்த, நிலையான வளர்ச்சி சாத்தியமில்லை என்பதை துபாய் நெருக்கடி மீண்டும் நிரூபித்திருக்கிறது.**

புர்ஜ் துபாய் என்ற உலகின் மிக உயர்ந்த கட்டடம், துபாய் மால் என்ற உலகின் மிகப் பெரிய பேரங்காடி, புர்ஜ் அல்அரப் என்ற உலகின் முதல்தர ஏழு நட்சத்திர தகுதி கொண்ட உல்லாச விடுதி, உலகின் எட்டாவது அதிசயம் எனப்படும் ''ஜுமெரா பாம்'' எனப்படும் ஈச்சமர வடிவத் தீவு, ஜபேல் அலி ஏற்றுமதி மையம் - எனக் கனவுலகை கண்முன்னே காட்டிய துபாய் இன்று கடனாளியாக நிற்கிறது. ஆரவாரம் அடங்கிவிட்டது. எங்கும் மயான அமைதி. எல்லோருடைய முகத்திலும் பீதி. அடுத்து என்ன நடக்குமோ என்று புரியாத குழப் பத்தில் உறைந்து கிடக்கிறது அந்நாடு.

ஐக்கிய அரபுக் குடியரசு எனப்படும் அமீரக சமஷ்டி கூட்டமைப்பிற்குள் ஒரு அங்கம்தான் துபாய். கடலில் மணலைக் கொட்டி, விரிந்த ஈச்சமர வடிவில் ஒரு தீவை உருவாக்கி, அதில் அடுக்கு மாடி ஆடம்பரக் குடியிருப்புகள்; இந்த உல்லா சத் தீவில் வீடு வாங்குவது ஒரு தனிச் சிறப் பான அந்தஸ்து என்ற மாயையில் உலக மகா கோடீசுவரர்கள் அதில் முதலீடு செய் யப் போட்டியிட்டனர். ஈச்சமர வடிவத் தீவுத் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, ''துபாய் வேர்ல்ட்'' என்ற புதிய வீட்டுமனைத் திட்டத்தை துபாய் அரசு கொண்டு வந்தது. உலகப் பட வடி வில் உருவாக்கப்படும் இப்புதிய தீவில் அடுக்குமாடி ஆடம்பரக் குடியிருப்புகள் கட்ட, கட்டுமானக் கழகங்களும் நிதி நிறு வனங்களும் போட்டி போட்டன. நகீல் என்ற அரசின் துணை நிறுவனம் இத்திட் டத்திற்கான கடன் பத்திரங்களை ''சுகுக் பாண்டுகள்'' என்ற பெயரில் 2004-இல் வெளியிட்டது. அது 2009-இல் முதிர்வடைவதால் முதலீட்டாளர்களுக்கு பணத்தைத் திருப்பித் தரவேண்டும். ஆனால், நகீல் நிறுவனத்தால் கடனைத் திருப்பித் தர முடியவில்லை.

துபாய் அரசுக்குச் சொந்தமான துபாய் வேர்ல்டு கார்ப் பரேஷன் என்ற நிறுவனம் 80 பில்லியன் டாலர் (ஏறத் தாழ 4,00,000 கோடி ரூபாய்) கடன் சுமையால் தத்தளிக் கிறது. பணக்கார நாடாகச் சித்தரிக்கப்படும் துபாய், இந்தக் கடனையும் அதற்கான வட்டியையும் கட்ட முடி யாமல் அனைத்துலக நாடுகளிடம் ஆறு மாத கால அவகாசம் கேட்டுள்ளது. இந்தச் செய்தி பரவி, பங்குச் சந்தையில் முதலீட்டாளர்கள் தங்கள் பங்குகளை விற்கத் தொடங்கியதும் தடதடவென ஆரம்பித்து விட்டது சரிவு. ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் தமது முதலீடுகளை அவசரமாக திரும்ப எடுத்துச் செல்லத் தொடங்கின. முதலீடுகளை மறுமதிப்பீடு செய்யும் போது மீண்டும் சரிவு ஏற்பட்டது.

ஏழு பெருநகர அமீராட்சியும் தனித்தனி பட்ஜெட் டும் கொண்டுள்ள ஐக்கிய அரபுக் குடியரசில் ரஸ் அல் கைமாஹ், அபுதாபியைப் போல துபாயில் எண்ணெய் வளம் இல்லை. பெட்ரோலியம் உறிஞ்சி எடுக்கப்பட்டு வற்றத் தொடங்கிவிட்டதால், வீட்டுமனைத் தொழில் மற்றும் சுற்றுலாத் துறையில் துபாய் அதிக அழுத்தம் கொடுத்தது. கொளுத்தும் வெய்யிலில் பாலைவனத்தின் நடுவேயுள்ள முகாம்களில் வாழும் ஏழை நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்கள், தொழிற்தேர்ச்சி பெற்று அதிக சம்பளம் வாங்கி நகரத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பு களில் குடும்பத்தோடு வாழும் நடுத்தர வர்க்கத்தினர், கோடானுகோடிகளை முதலீடு செய்துள்ள உலகின் பணக்கார வர்த்தகர்கள் எனப் பல்வேறு பிரிவு வெளி நாட்டவர்கள் துபாயில் குடியேறியுள்ளனர். துபாயின் மொத்த மக்கள்தொகையில் இவர்கள் ஏறத்தாழ 80 சத வீதம். துபாயில் கட்டப்படும் ஆடம்பர வீடுகளை வாங் குபவர்களுக்கு, அந்நாட்டில் நிரந்தரமாக வாழ்வதற்கான



குப்புற விழுந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அடையாளச் சின்னமாக நிற்கும் புர்ஜ் துபாய் எனும் உலகின் மிக உயர்ந்த கட்டடம்.

அனுமதிப் பத்திரம் அளிக்கப்படும் என்று அரசு ஆசை காட்டியது. இதனால் நடுத்தர வர்க்கமும் பெரும் வர்த்த கர்களும் உல்லாசிகளும் இத்தகைய புதிய ஆடம்பர வீடு களை வாங்கப் போட்டி போட்டனர். நடுத்தர வர்க்கத் தினர் வங்கியில் கடன் வாங்கியாவது வீடு வாங்க முண் டியடித்தனர்.

கடல் நடுவே பேரீச்சை மர வடிவில், உலக வரை பட வடிவில் என்றெல்லாம் செயற்கைத் தீவுகளை உரு வாக்கி, அவற்றில் ஆடம்பர அடுக்குமாடி வீடுகளைக் கட்டித் தரும் திட்டங்களை பன்னாட்டுக் கட்டுமானக் கம்பெனிகள் அறிவித்தன. கட்டடங்களை எழுப்பும் முன்னரே வீடுகளை விற்கும் திட்டம் தொடங்கியது. முன்கூட்டியே பணத்தைத் தவணை முறையில் செலுத்த வேண்டும். ஆனால், குடியேறுவதற்கு ஆண்டுக்கணக் கில் காத்திருக்க வேண்டும். நம்ம ஊரில் தேக்குப் பண்ணைத் திட்டம் என்ற பெயரில் ஒரு மோசடித் திட்டத்தை அறிவித்து, இதோ உங்கள் தேக்கு கன்று வளர்ந்து வருகிறது என்று ஒரு புகைப்படத்தை அனுப்பி ஏய்த்ததைப் போலத்தான், வெறும் கட்டடப் புகைப் படத்தைப் பார்த்துவிட்டு கற்பனை வீட்டுக்காகப் பலரும் பணத்தைக் கட்டினர். நடுத்தர வர்க்கத்தினர் வங்கிகளில் கடன் வாங்கிக் கட்டினர்.

''இன்றைய உலகில் வீட்டுமனை-கட்டடத் தொழி லில் முதலீடு செய்வதுதான் பாதுகாப்பானது. வீடுகளின் விலை குறைந்ததாக வரலாறில்லை'' என்ற பங்குச் சந்தை சோதிடர்கள் கூறும் அருள்வாக்கை பலரும் நம்பி னர். பங்குச் சந்தையில் செயற்கையாக ஊதிப் பெருக் கப்பட்டு வீட்டுமனை விலைகள் தாறுமாறாக உயர்ந் தன. பங்குச் சந்தை சூதாட்டத்தில் முதலீடு செய்த அனைத்துலக ஏகபோக வங்கிகளும் நிதி நிறுவனங் களும் கோடிகோடியாகக் கொள்ளையடித்த பிறகு, உண்மை மதிப்பு வீழ்ச்சியடையத் தொடங்கியது. முதலீடு செய்த வங்கிகளும் நிதி நிறுவனங்களும் வரப் போகும் வீழ்ச்சியை அறிந்து முன்கூட்டியே தமது முதலீ டுகளை திரும்ப எடுத்துச் சென்றன. இதனால், கடன்

நிதியாதிக்கக் கும்பல்களின் சூறையாடலில் நொறுங்கிப் போன கனவு: விரிந்த ஈச்சமர வடிவில் உருவாக்கப்பட்ட உல்லாசத் தீவா? கடலில் கொட்டப்பட்ட குப்பைமேடா?




**1997-இல் தென்கிழக்காசிய நாடுகள் திவால், 2001-இல் அர்ஜெண்டினா திவால், 2008-இல் அமெரிக்கா திவால், 2009-இல் துபாய் திவால் என முதலாளித்துவ நெருக்கடி உலகமயமாகி வருகிறது. ஆனால், இந்நெருக்கடிக்கான முடிவு எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை.**

சுமை அதிகரித்து துபாய் வேர்ல்டு என்ற அரசு சார்பு நிதி நிறுவனம் திவாலாகியது.

எல்லாம் இன்று குப்புற விழுந்துவிட்டது. பல நூறு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அரைகுறையாக எலும்புக் கூடுகளாக நிற்கின்றன. ஆடம்பர வீடுகளுக் காக உருவாக்கப்பட்ட செயற்கைத் தீவுகள் பலவும் கட லுக்குள் கொட்டப்பட்ட குப்பை மேடுகளாகக் காட்சி யளிக்கின்றன. இவையெல்லாம் கட்டி முடிக்கப்படுமா, அல்லது கைவிடப்படுமா என்று யாருக்கும் தெரியாது. ஆனால், கடன் கொடுத்த வங்கிகள் சும்மாயிருக்குமா? கடனை கட்டாமல் தப்பிக்க முடியாது என்று எச்சரித்து வசூல் வேட்டையைத் தீவிரப்படுத்துகின்றன.

மறுபுறம், குப்புற விழுந்துவிட்ட பொருளாதாரத்தால் துபாயில் வேலை இழப்பு தீவிரமாகியுள்ளது. இலட்சக் கணக்கானோர் வேலை இழந்துள்ளனர் என்று அதிகார பூர்வமற்ற செய்திகள் வருகின்றன. துபாய் சட்டப்படி, வேலையிழந்தவர்களின் தொழில் விசா ரத்து செய்யப் படும். ஒரு மாத இடைவெளியில் அவர்கள் வேறு வேலை தேடிக் கொண்டால் அந்நாட்டில் இருக்க முடியும். இல்லையேல், வெளியேற்றப்படுவர். இதனால் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்து நாடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அரைச் சம்பளத்துக்கு வேலை செய்கின்றனர். பணி நிரந்தரம் என்ற நம்பிக்கையில் கட்டட வடிவ மைப்பாளர், பொறியாளர் முதலானோர் வீடு வாங்கும் ஆசையில் வங்கியில் கடன் வாங்கிவிட்டு, திருப்பிச் செலுத்த வழி தெரியாமல் தவிக்கின்றனர்.

துபாயில் கடனை அடைக்க முடியாதவர்கள் சிறைக்கு அனுப்பப்படுவார்கள். வாழ்நாள் முழுவதும் அடிமையாக வேலை செய்துதான் கடனை அடைக்க வேண்டும். இதனால் கடனை அடைக்க வழிதெரியாத பலர் நாட்டைவிட்டுத் தப்பியோடுகின்றனர். எஞ்சியி ருக்கும் பணத்தை எடுத்துக் கொண்டு, எவரிடமும் விற்க முடியாத தமது விலையுயர்ந்த கார்களையும் உடமை களையும் அங்கேயே போட்டுவிட்டு ஓடுகின்றனர். துபாய் விமான நிலையத்தில் வாகன நிறுத்திமிடத்தில் கைவிடப்பட்டு யாரும் உரிமை கோராத கார்கள் மலை

போல குவிந்து கிடக்கின்றன. வீடுகள் காலியாகி, வீட்டுமனை விலை சரிந்து ஆளரவமற்ற தெருக்கள் பெருகி வருகின்றன.

‘‘இருப்பினும் இது தற்காலிக நெருக்கடிதான். நிலைமை படிப்படியாக மாறி வருகிறது. அபுதாபி அமீரகம் கடன் கொடுத்து மீட்டுவிட்டது. துபாயின் கனவுலகம் மீண்டும் ஒளிரும்’’ என்று ஊடகங்கள் ஆரூடம் கூறி வருகின்றன. துபாய் அரசாங்கம் புதிய ஊடக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதே இதற்குக் காரணமாகும். இச்சட்டத்தின்படி, துபாயில் பொருளாதார நெருக்கடி நிலவுவதாக எந்த ஊடகமும் செய்தியை வெளியிடக் கூடாது. மீறினால், இலட்சக்கணக்கில் அபராதமும் தண்டனையும் விதிக்கப்படும். எனவே, எல்லா ஊடகங்களும் வதந்திகளையே பரப்பி வருகின்றன. ஆனால், கடந்த ஓராண்டாகவே நெருக்கடிகள் முற்றி வந்தன. குடியிருப்புகளின் வாடகைகள் பாதியளவுக்குக் குறைந்த போதிலும், பெரும்பாலும் அவை காலியாகவே கிடந்தன. துபாய் மட்டுமின்றி, மத்திய கிழக்கு நாடுகளது மன்னர்கள்-அமீர்களது பொருளாதார நிலை பற்றி எந்த விவரமும் உலகுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. இதனால் நெருக்கடியின் பரிமாணத்தை எவராலும் மதிப்பிட முடியவுமில்லை.



கனவுலகம் கானல் நீரானது: வேலையிழந்த தொழிலாளி; முழுமையடையாமல் கைவிடப்பட்டு எலும்புக்கூடுகளாக நிற்கும் கட்டடங்கள்.

இந்தக் கூட்டமைப்பில் இன்று அபுதாபி மட்டுமே எண்ணெய் வளமும் பொருளாதார பலமும் கொண்டுள்ளது. பொருளாதார வீழ்ச்சியால் துபாய் திவாலாகி விழும் வரை உதவ மறுத்த அபுதாபி, இப்போது கடனளிக்க முன்வந்துள்ளது. துபாயைப் போல மேற்கத்திய கலாச்சாரத்தைக் கொண்டிராமல், இஸ்லாமிய அடிப்படைவாதக் கோட்பாடுகளைப் பின்பற்றி வரும் அபுதாபி, துபாய் பிராந்தியத்தை தனது இரும்புப் பிடி ஆட்சியின்கீழ் கொண்டுவந்து மேலாதிக்கம் செய்ய வாய்ப்புள்ளதாக அரசியல் பார்வையாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

1997-இல் தென்கிழக்காசிய நாடுகள் திவால், 2001-இல் அர்ஜெண்டினா திவால், கடந்த ஆண்டில் அமெரிக்கா திவால் என்று உலக முதலாளித்துவம் அடுத்தடுத்து குப்புற விழுந்து கிடக்கிறது. இது தொடக்கம்தான். ஆனால், இந்நெருக்கடிக்கான முடிவு எதுவும் கண்ணுக்குத் தெரியவில்லை.

லெமென் பிரதர்ஸ் என்ற நிதி நிறுவனம் திவாலாகிச் சரிந்தபோது, அது துபாயைப் பாதிக்கவில்லை என்று கூறி, உலக முதலாளித்துவ நெருக்கடி என்பது வேறு, துபாய் வேறு என்று நம்பச் சொன்னார்கள். ஆனால், துபாய் நெருக்கடி கசியத் தொடங்கியதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிதிச் சந்தைகள் ஆட்டங்காணுகின்றன. ஐரோப்பிய வங்கிளும் குறிப்பாக, பிரிட்டனைச் சேர்ந்த ஹெச்.எஸ்.பி.சி. ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு, பர்க்லேஸ், ஏ.பி.என்.அம்ரோ முதலான வங்கிகள் பல்லாயிரம் கோடிகளுக்கு மேல் பெருத்த இழப்பைச் சந்தித்துள்ளன. இந்தியாவின் பாங்க் ஆஃப் பரோடா 5,000 கோடி ரூபாய் இழப்பைச் சந்தித்துள்ளது. இது தவிர, பல இந்தியக் கட்டுமான நிறுவனங்கள் இழப்பைச் சந்தித்துள்ளன. பிரிட்டனும் ஜெர்மனியும் கடன் பத்திரங்களைப் பெருமளவில் வாங்கியுள்ளதால், அவற்றின் நிதியமைப்புமுறையே கடும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. வீட்டு விலைகள் உயரும் என எதிர்பார்த்துக் கடனை வாரியிறைத்துவிட்டு, இப்போது என்ன செய்வது என்று புரியாமல் அவை தவிக்கின்றன.

அரசாங்கத்தின் தலையீடோ, கட்டுப்பாடோ இல்லாமல் தாராளமயம் சுதந்திரமாகச் செயல்பட்டால், முதலாளித்துவம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி, பொருளாதாரம் பூத்துக் குலுங்கும் என்று ஏகாதிபத்திய வாதிகள் உபதேசித்து, அதைத் தீவிரமாகச் செயல்படுத்தினர். ஆனால், கட்டுப்பாடற்ற நிதியாதிக்கக் கும்பல்களின் சூறையாடல், துபாயின் பொருளாதாரத்தையே மீளமுடியாத பாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது. துபாய் மட்டுமின்றி இதர நாடுகளிலும் கட்டுமானத் துறையும் வீட்டுமனைத் தொழிலும் நொறுங்கிச் சரியும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது. அதி விரைவில் கிரீசும் அயர்லாந்தும் சரிவது நிச்சயமாகிவிட்டது. அனைத்துலக முதலாளித்துவம் மீள முடியாத நெருக்கடியில் சிக்கி மரணப் படுக்கையில் முனகுகிறது.

கோடீஸ்வர நாடான துபாயே ஆடிக்காற்றில் அம்மியாகப் பறக்கும்போது, ஏழை நாடுகளின் கதி இனி என்னவாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. திவாலாகும் வங்கி மற்றும் நிதி நிறுவனங்களை மக்களின் வரிப்பணத்தை வாரியிறைத்து முட்டுக் கொடுத்து முதலாளித்துவத்தை தூக்கி நிறுத்துவது என்ற கொள்கையைத்தான் அமெரிக்கா முதல் துபாய் வரை எல்லா அரசுகளும் பின்பற்றுகின்றன. நிதியாதிக்கக் கும்பல்களின் சூறையாடலை எவ்விதக் கட்டுப்பாடுமின்றி ஆதரிக்கும் இக்கேடுகெட்ட முதலாளித்துவக் கொள்கையால், எந்த நாடும் இனி மீளவே முடியாது என்பதைத்தான் துபாய் அனுபவமாக உணர்த்துகிறது.

● கலைமதி

# ஆப்கான் ஆக்கிரமிப்புப் போர்: புதைமணலில் சிக்கியது அமெரிக்கா!

**அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம், ஆப்கான் போரில் வெற்றியடைய முயற்சிக்கிறது, அமெரிக்கா.**

அமெரிக்க ஏகாதிபத்தியம் சின்னஞ்சிறு ஏழை நாடான ஆப்கானை ஆக்கிரமித்துக்கொண்டு, கடந்த எட்டு ஆண்டுகளாக அந்நாட்டின் மீது ஒரு அநீதியான போரை நடத்தி வருகிறது. சின்னஞ்சிறு ஏழை நாடாக இருந்தாலும், ''ஆப்கான் ஏகாதிபத்தியங்களின் இடுகாடு'' எனக் கூறப்படுவது மீண்டும் நிரூபணமாகி வருகிறது.

ஒசாமா பின்லேடனைப் பிடிப்பது, அல்-காய்தாவை நிர்மூலமாக்குவது, தாலிபானைத் தோற்கடிப்பது, ஆப்கானில் ஜனநாயக அரசைக் கட்டியமைப்பது - இவை அனைத்தையும் போரைத் தொடங்கிய ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே செய்து முடிப்பது எனத் தம்பட்டம் அடித்து, இந்த ஆக்கிரமிப்புப் போரைத் தொடங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியமும், அதனின் ''நேடோ'' கூட்டாளி நாடுகளும், தமது சபதங்களை நிறைவேற்றவும் வழியின்றி, அதே சமயம், ஆப்கானில் இருந்து கௌரவமாக வெளியேறவும் விருப்பமின்றி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றன.

இப்படிபட்ட தருணத்தில், ஆப்கானுக்கு மேலும் 30,000 அமெரிக்கத் துருப்புகளை அனுப்பப் போவதாக அறிவித்திருக்கிறார், அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா. அதனுடன், ''இன்றிலிருந்து 18 மாதங்கள் கழித்து, ஆப்கானில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறப் போவதாகவும்'' ஒபாமா அறிவித்திருக்கிறார். இராணுவச் சிப்பாய்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, போரை முன்னைவிடத் தீவிரமாக நடத்துவதற்கான முயற்சி என்பது பாமரனுக்கும் புரியும். ஆனால், அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவர் அல்லவா; அதனால், ''ஆப்கான் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகத்தான் சிப்பாய்களின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதாக''த் தேன் தடவிப் பேசியிருக்கிறார், அவர். இந்த விளக்கத்தைக் கேட்கும் பொழுது கேப்பையில் நெய் வழிகிறது என்ற நம்மூர் பழமொழி தான் நினைவுக்கு வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆப்கான் ஆக்கிரப்புப் போருக்காக 2006-ஆம் ஆண்டு செலவழித்த தொகை ஏறத்தாழ 1,900 கோடி டாலர்கள் (95,000 கோடி ரூபாய்). இந்தப் போர்ச் செலவு 2009-இல் மூன்று இலட்சம் கோடி ரூபாயாக (6,020 கோடி அமெரிக்க டாலர்கள்) அதிகரித்திருக்கிறது. தற்பொழுது துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதால், ஒவ்வொரு ஆண்டும் போர்ச் செலவு 10,000 கோடி அமெரிக்க டாலர்களைத் தொட்டுவிடும் என மதிப்பிடப்படுகிறது.

வேலையையும் வீட்டையும் இழந்து, பொருளாதார நெருக்கடியால் நடுத்தெருவுக்கு வந்துவிட்ட அமெரிக்கர்களின் மத்தியில் இந்த ஊதாரித்தனமான போர்ச் செலவு ஆப்கான் போருக்கு எதிரான மனோநிலையைத் தோற்றுவித்திருக்கிறது. எனவே, இந்த ஆக்கிரமிப்புப் போரையும் போர்ச் செலவையும் நியாயப்படுத்த தேசிய வெறியைத் தூண்டிவிடும் அயோக்கியத்தனத்தில் இறங்கியிருக்கிறார், ஒபாமா. அமெரிக்காவை மீண்டும் தாக்கும் திட்டங்கள் போடப்படுவதாகக் கூறி, அமெரிக்கர்களின் மத்தியில் பீதியூட்டி வருகிறார், அவர். கூடுதலாக 30,000 அமெரிக்கத் துருப்புகளை ஆப்கானுக்கு அனுப்ப எடுத்த முடிவை இராணுவத்தினர் மத்தியில் அறிவித்து, ஒபாமா உரையாற்றியதைக் கேட்டால், போர் வெறியன் ஜார்ஜ் புஷ் ஆவி ஒபாமாவுக்குள் புகுந்துவிட்டதோ என்ற சந்தேகம் தோன்றும்.

ஒபாமா அதிபரான பிறகு, துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே ஆப்கான் போரில் வெற்றியை ஈட்ட வேண்டும் என்ற போர்த் தந்திரத்தைக் கையாண்டு வந்தார். பொருளாதார நெருக்கடி நிலவும் சமயத்தில் துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்தால், போர்ச் செலவு அதிகரித்து, ஏழை அமெரிக்கர்

அமெரிக்க மேலாதிக்கப் படை ஆப்கானின் பாலா பாலுக் மாவட்டத்தில் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடும் ஆறு வயது சிறுமி நஸானின். (கோப்புப் படம்)



களின் கோபத்தை சம்பாதித்துக் கொள்ள நேரிடும்; அது, தனது எதிர்கால அரசியல் நலனுக்கு நல்லதல்ல என்பதாலேயே இந்தப் போர்த் தந்திரத்தைக் கையாள எண்ணி வந்தாரேயன்றி, வேறெந்த நல்லெண்ணமும் காரணம் அல்ல.

இதற்கு மாறாக, அமெரிக்கத் துணை அதிபர் ஜோ பிடேன், துருப்புகளின் எண்ணிக்கையைச் சற்று அதிகரிப்பதோடு, ஆளில்லா விமானத் தாக்குதலை ஆப்கான் மீது மட்டுமின்றி, பாகிஸ்தான் மீதும் தீவிரமாக நடத்த வேண்டும் எனக் கூறி வந்தார். அமெரிக்க அரசின் உள்துறைச் செயலர் ஹிலாரி கிளிண்டன், இராணுவச் செயலர் ராபர்ட் கேட்ஸ் மற்றும் அமெரிக்க இராணுவத் தளபதிகள் ஆகியோர் ஆப்கானில் அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க வேண்டும் எனக் கூறி வந்தனர். துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற திட்டத்திற்கு அமெரிக்காவின் பத்திரிகைகளும், குடியரசுக் கட்சியும், வலதுசாரி அறிவு ஜீவிகளும் ஆதரவு தெரிவித்தனர். கடந்த சில மாதங்களாக இந்த மூன்று அணிகளுக்கு இடையே ஆப்கான் ஆக்கிரமிப்புப் போரை எப்படி நடத்திச் செல்வது என்பது குறித்து நடந்து வந்த நாய்ச் சண்டையில், அதிபர் ஒபாமா தீவிர வலதுசாரி கும்பலிடம் சரணடைந்துவிட்டார்.




ஆப்கானின் ஃபாராஹ் மாகாணத்தில் பொதுமக்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து, காபூல் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி. (கோப்புப் படம்)

''தீவிரவாதத்துக்கு எதிரான போர்'' என்ற போர்வையில் கடந்த எட்டு ஆண்டுகளாக நடந்துவரும் இந்த ஆக்கிரமிப்புப் போர், தாலிபான் மற்றும் அல்-காய்தாவைத் தோற்கடிக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, குறிப்பாக ஆப்கான் மக்கள் மத்தியில் மீண்டும் தாலிபானின் செல்வாக்கு வளருவதற்கு வளமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது. அமெரிக்கா, ஆப்கான் மீது படையெடுத்த ஐந்து வாரங்களுக்குள்ளாகவே தாலிபானின் அதிகாரம் காபூல் பகுதியில் வீழ்த்தப்பட்டாலும், அப்பொழுதே ஆப்கானின் தென்மேற்கு பகுதியிலுள்ள ஹெல்மண்ட் மாகாணத்தில் ஒரு இணை அரசாங்கத்தை நடத்தும் அளவிற்கு, அப்பகுதியில் தாலிபான் செல்வாக்கு செலுத்தி வந்தது. இப்பொழுதோ, தாலிபானின் செல்வாக்கு ஆப்கானின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் வளர்ந்து வருவதாக முதலாளித்துவப் பத்திரிகைகள்கூட ஒப்புக் கொள்கின்றன.


''அவர்கள் இரத்தம் எங்கள் கரங்களில்...'' - அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் ஒசாமாவின் திட்டத்தைக் கண்டித்து லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.




இதனால், தாலிபானைத் தோற்கடிப்பதைவிட, அவ்வமைப்பின் செல்வாக்கு தலைநகர் காபூல் பகுதியில் மீண்டும் வளர்ந்துவிடாமல் தடுப்பதுதான் அமெரிக்காவிற்கும் அவர்களது கூட்டாளி நாடுகளுக்கும் தலைபோகிற விசயமாகிவிட்டது. இதற்காகவே துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதோடு, தாலிபானுக்கு எதிரான யுத்தப் பிரபுக்களோடு ஒரு புனிதக் கூட்டணியையும் அமெரிக்கா-நேடோ துருப்புகள் அமைத்துள்ளன. மேலும், தாலிபானை உடைத்து அமெரிக்காவிற்கு உதவக் கூடிய ''நல்ல'' தாலிபான்களை - கருங்காலிகளை- உருவாக்கவும் அமெரிக்கா முயன்று வருகிறது. இதற்காக அமெரிக்காவின் இராணுவ பட்ஜெட்டில் 130 கோடி அமெரிக்க டாலர்கள் ஒதுக்கப் பட்டுள்ளது.

•••

அமெரிக்காவின் தயவிலும், பாதுகாப்பிலும் ஆப்கானை 'ஆண்டு' வரும் ஹமித் கர்சாய் அரசோ, ஊழல் பேர்வழிகள், போதை மருந்து கடத்தும் அரசியல் தாதாக்கள், தாலிபானை எதிர்க்கும் யுத்தப்பிரபுக்களால் நிரம்பி வழிகிறது. ஆப்கான் அதிபர் ஹமித் கர்சாயின் சொந்த சகோதரரான அகமது வாலி கர்சாய் ஆப்கானைச் சேர்ந்த போதை மருந்து கடத்தல் பேர்வழிகளுள்



முக்கியமானவர் எனும்பொழுது, ஆப்கானில் அமெரிக்கா திணித்துள்ள ஆட்சியின் யோக்கியதைப் பற்றி மேலும் விரிவாக விளக்கத் தேவையில்லை. ''அகமது வாலி கர்சாயின் போதை மருந்து கடத்தல் தொழிலை மேற்குலக பத்திரிகைகள் அம்பலப்படுத்தத் துணிந்தால், நேடோ-அமெரிக்கத் துருப்புகளுக்கும் அதில் பங்கு இருப்பதை அம்பலப்படுத்துவேன்'' என அந்நாட்டின் போதை மருந்து கடத்தல் தடுப்பு அமைச்சரே எச்சரிக்கும் அளவிற்கு ஆப்கானில் போதை மருந்து கடத்தல் தொழில் கொடிகட்டிப் பறக்கிறது.

ஆப்கான் வரலாற்றிலேயே மிகக் கொடூரமான யுத்தப் பிரபுவாகக் கருதப்படும் முகம்மது ஃபஹிம்தான் அந்நாட்டின் துணை அதிபர். உஸ்பெக் இனத்தைச் சேர்ந்த மற்றொரு யுத்தப் பிரபுவான ரஷித் தோஸ்தம் அதிபர் கர்சாயின் நெருங்கிய அரசியல் கூட்டாளி. பஷ்டுன் இன மக்கள் வாழும் பகுதியில் அமெரிக்க-நேடோ துருப்புகளுக்குத் தேவைப்படும் ஆயுதத் தளவாடங்களைக் கொண்டு செல்வதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை யுத்தப் பிரபுக்கள்தான் செய்து கொடுத்து, சன்மானம் பெற்றுக் கொள்கிறார்கள். போதை மருந்து கடத்தல் தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் யுத்தப் பிரபுவான நஸ்ரி முகமது, ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையாக இருந்து வருவதை அமெரிக்காவைச் சேர்ந்த அனைத்துலக கூட்டுறவு மையம் என்ற அமைப்பு அம்பலப்படுத்தியிருக்கிறது.

ஆப்கானில் கடந்த இரு மாதங்களுக்கு முன்பாக நடந்த அதிபர் தேர்தலில் ஹமித் கர்சாய்க்கு விழுந்த வாக்குகளில் ஏறத்தாழ 10 இலட்சம் வாக்குகள் கள்ள வாக்குகள் எனக் கண்டுபிடிக்கப்பட்டதால், அதிபர் தேர்தலின் முதல் சுற்றில் கர்சாய் அடைந்த ''வெற்றி'', பின்னர் ரத்து செய்யப்பட்டது. எனினும், கர்சாய் இரண்டாம் சுற்றுத் தேர்தலைச் சந்திக்காமலேயே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தயவால் மீண்டும் நாட்டின் அதிபராக முடிசூட்டிக் கொண்டுள்ளார். பாலஸ்தீனத்தில் அமெரிக்காவை எதிர்க்கும் ஹமாஸ் இயக்கம் நியாயமான முறையில் தேர்தலைச் சந்தித்து, காசா முனையில் வெற்றி பெற்றதை இதுவரை ஏற்றுக் கொள்ளாத அமெரிக்க-ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள், ஆப்கானில் நடந்த மோசடித் தேர்தலையும், 'சட்டவிரோதமான' முறையில் கர்சாய் மீண்டும் அதிபராகியிருப்பதையும் எவ்வித முணுமுணுப்புமின்றி ஏற்றுக் கொண்டுள்ளன.

அந்நிய ஆக்கிரமிப்பு, அமெரிக்க மற்றும் நேடோ படைகள் நடத்திவரும் படுகொலைகள் — கடந்த எட்டு ஆண்டுகளில் ஏறத்தாழ 31,000 ஆப்கானியர்கள் ஆக்கிரமிப்புப் படைகளால் கொல்லப்பட்டுள்ளனர் — கர்சாயின் ஊழல் ஆட்சி, ஐ.நா. மன்றம் போடும் சோத்துப் பொட்டலத்தை நம்பியே வாழ்க்கையை ஓட்ட வேண்டிய அளவிற்கு உள்நாட்டுப் பொருளாதாரம் நாசமாகிக் கிடப்பது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஆப்கான் மக்கள் மத்தியில் தாலிபானின் செல்வாக்கு மீண்டும் வளரத் தொடங்கியிருக்கிறது. அமெரிக்கா இப்பொழுது இதனையே காரணமாகக் காட்டி துருப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்திருப்பதோடு, ஆளில்லா விமானத் தாக்குதலைத் தீவிரப்படுத்த வேண்டும்; அல்-காய்தாவை ஒழிக்க பாகிஸ்தான், சோமாலியா, ஏமன் ஆகிய நாடுகள் மீதும் தீவிரவாதத்துக்கு எதிரான போரைத் தொடுக்க வேண்டும் எனக் கூப்பாடு போடத் தொடங்கியிருக்கிறது.

ஆப்கானில் அமெரிக்க-நேடோ படைகள் சந்தித்து வரும் தோல்வியையும், அங்கு நிலவும் உள்நாட்டுக் குழப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டு ஆப்கானில் சமாதானத்தை ஏற்படுத்துவது என்ற பெயரில் ரசிய ஏகாதிபத்தியமும், சீனாவும் அந்நாட்டினுள் நுழைய முயன்று வருகின்றன. இந்தியா, ஆப்கானிலிருந்து பாகிஸ்தானை ஓரங்கட்ட வேண்டும் என்ற திட்டத்தோடு, அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு மட்டுமின்றி, கர்சாய் கும்பலுக்கும், தாலிபானை எதிர்க்கும் யுத்தப் பிரபுக்களுக்கும் ஆதரவு தெரிவித்து வருகிறது. மேலும், ஆப்கானைப் புனரமைப்பது என்ற போர்வையில் அமெரிக்க இராணுவத்திற்குத் தேவைப்படும் கள உதவிகளைச் செய்து கொடுத்தும் வருகிறது, இந்தியா. பாகிஸ்தானோ ஒருபுறம் அமெரிக்காவிற்கு ஆதரவளித்துக் கொண்டு, இன்னொருபுறம் தாலிபானுக்குக் கொம்பு சீவிவிடுகிறது. இப்படியாக ஆப்கான், தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் வேட்டைக் காடாக மாற்றப்பட்டுள்ளது.

இரானின் எல்லையையொட்டி அமைந்திருப்பதாலும், மத்திய ஆசியப் பகுதியில் கிடைக்கும் எண்ணெய் வளத்தை அரபிக்கடல் பகுதிக்கு எடுத்துச் செல்லுவதற்கான தரைமார்க்கமாகவும் இருப்பதாலும், ஆப்கான் நாட்டைத் தனது முழுக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவே அமெரிக்கா விரும்புகிறது. இந்த நிலையில் அதிபர் ஒபாமா பதினெட்டு மாதங்கள் கழித்து ஆப்கானில் இருந்து படைகளை முழுவதுமாகத் திரும்பப் பெற்றுக் கொள்வார் என நம்புவதற்கு இடமே கிடையாது. 19-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து ஏகாதிபத்தியமும், 20-ஆம் நூற்றாண்டில் சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் ஆப்கான் மக்களால் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டதைப் போல், அமெரிக்க மேலாதிக்க வல்லரசும் தோற்கடிக்கப்பட்டதால்தான், அதற்குப் படைகளைத் திரும்பப் பெறும் ''நல்ல புத்தி'' வரும்!

● செல்வம்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.




# சினிமா கழிசடை தமன்னா விளம்பரத்துக்குப் பல கோடி! உரிமைகளைக் கேட்கும் தொழிலாளருக்குத் தடியடி!

## -அடக்குமுறைக்கு எதிராக பவர் அண்டு அபிராமி சோப்ஸ் தொழிலாளர்களின் போராட்டம்

புதுச்சேரி - செம்பியப்பாளையத்தில் கடந்த பத்தாண்டுகளாக சுமார் 300 ஆண்-பெண் தொழிலாளர்களின் உழைப்பில் இயங்கி வருகிறது பவர் அண்டு அபிராமி சோப்ஸ் நிறுவனம். தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக நசுக்கியும் சுரண்டியும், அரசின் சலுகைகள் - மானியங்கள் என்ற பெயரில் உழைக்கும் மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடித்தும் இன்று சென்னை, காரைக்கால், வடக்கே சில்வாசா எனப் பல இடங்களில் கிளைகளைப் பரப்பி வளர்ச்சியடைந்துள்ளது.

இங்கு பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாகப் பணியாற்றிய எந்தத் தொழிலாளிக்கும் பணி நிரந்தர ஆணை வழங்கப்படவில்லை. உற்பத்தி அடிப்படையிலான முறையான ஊதியமும், ஊதிய உயர்வும், சீருடையும் வழங்கப்படுவதில்லை. உரிமைகளைக் கேட்டால் திருட்டுப் பட்டம் கட்டி பணிநீக்கம் செய்வது, விடுப்பெடுத்தால் வாரக்கணக்கில் வாயிலில் நிறுத்தி அவமானப்படுத்துவது, அடியாட்களை வைத்து மிரட்டுவது - என அடக்குமுறையை ஆலை நிர்வாகம் கட்டவிழ்த்து விடுகிறது. அதேசமயம், விளம்பரத்துக்காக சினிமா கழிசடை நடிகை தமன்னாவுக்கு பல கோடிகளை வாரி யிறைக்கிறது.

சட்டபூர்வ உரிமைகளைக்கூட காலில் போட்டு மிதித்து, கொத்தடிமைத்தனத்தை ஏவிவரும் பவர் அண்டு அபிராமி சோப்ஸ் நிர்வாகத்தின் அட்டூழியத்தை எதிர்த்து கடந்த ஆண்டு பிப்ரவரியில் தொழிலாளர்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு உள்ளிருப்பு வேலைநிறுத்தத்தை நடத்தினர். புதுச்சேரியில் இயங்கிவரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, உடனிருந்து வழிகாட்டி போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றதையடுத்து, தொழிலாளர்கள் இச்சங்கத்தில் திரண்டனர். தொழிலாளர்களின் போராட்டம் காரணமாக, இரு மாதங்களுக்குள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக எழுத்து பூர்வமாக நிர்வாகம் உத்தரவாதம் அளித்தது. ஆனாலும் அதை நிறைவேற்றாமல் இழுத்தடித்தது. தொழிலாளர் துறையிடம் சங்கத்தின் சார்பில் முறையிடுவதைக் கண்டு ஆத்திரமடைந்து 8 தொழிலாளர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டி விசாரணை நடத்தி மிரட்டியது. ரவுடிகளை ஏவி முன்னணியாளர்களை அச்சுறுத்திப் பார்த்தது. தொழிலாளர்களின் வர்க்க ஒற்றுமையால் இவையாவும் பிசுபிசுத்துப் போயின. ஆத்திரமடைந்த நிர்வாகம் கடந்த நவம்பரில், தனக்கே உரித்தான வர்க்க வெறியுடன் முன்னணியாளர்கள் 6 பேரைப் பணியிடை நீக்கம் செய்து பழி வாங்கியது. கொதிப்படைந்த தொழிலாளர்கள் 9.11.09 முதல் உள்ளிருப்பு வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். சுற்றுவட்டார உழைக்கும் மக்களிடம் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். இப்போராட்டத்தை ஆதரித்து பு.ஜ.தொ.மு. தலைமையிலான இந்துஸ்தான் யுனிலீவர் தொழிலாளர் சங்கத்தினர் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதற்கிடையே, பொய்யான காரணங்களைக் கூறி உயர்நீதி மன்றத்தில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டவர்களை ஆலைக்குள் அனுமதிக்கக் கூடாது என்று நிர்வாகம் தடையாணை வாங்கியது. உள்ளிருப்பு வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தற்காலிகமாக முடித்துக் கொண்ட தொழிலாளர்கள், 26.11.09 அன்று ஆலை மேலாளரின் வாகனத்தை மறித்து முற்றுகையிட்டு, பொய்க் காரணம் கூறி தடையாணை பெற்றதையும், ஆலை விளம்பரப் பலகையில் தடையாணைக்கு மாறாக அனைத்துத் தொழிலாளர்களும் ஆலைக்கு வெளியேதான் போராட வேண்டும் என்று அறிவிப்பு செய்ததையும் பற்றி கேள்வி எழுப்பினர்.

ஆலை வாயிலில் குவிக்கப்பட்டிருந்த போலீசு, இதுதான் சந்தர்ப்பம் என்று தொழிலாளர்களைச் சுற்றிவளைத்து தடியடித் தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டது. இக்காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் பெண் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் படுகாயமடைந்துள்ளனர். ஆலை மேலாளரைத் தொழிலாளர்கள் தாக்கியதாகவும், அதனால் கூட்டத்தைக் கலைத்ததாகவும் நியாயவாதம் பேசி நிர்வாகத்துக்கு விசுவாசமாக வாலாட்டுகிறது போலீசு.

போலீசின் வெறியாட்டத்தை எதிர்த்து பவர் சோப்ஸ் தொழிலாளர்கள் உடனடியாக இவ்வட்டாரமெங்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டு, 27.11.09 அன்று வில்லியனூர் அருகே மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். முதலாளித்துவச் சுரண்டலுக்கும் போலீசின் அடக்குமுறைக்கும் எதிராக, விண்ணதிரும் முழக்கங்களுடன் வர்க்க உணர்வோடு பல்வேறு ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் அணிதிரண்டு நடத்திய இந்த எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தில், சங்கத்தின் முன்னணியாளர்களும் இந்துஸ்தான் யுனிலீவர், மெடிமிக்ஸ், வியோ பாஸ்ட்னர்ஸ், கோத்ரெஜ் சாராலீ முதலான ஆலைகளைச் சேர்ந்த தொழிற்சங்க முன்னோடிகளும் கண்டன உரையாற்றினர்.

புதுவை மாநிலத்தை மறுகாலனியாக்கத்தின் வேட்டைக்காடாக்கிவரும் ஆட்சியாளர்களையும், அரசின் ஆதரவோடு சட்டபூர்வ உரிமைகளைப் பறித்து தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கிச் சுரண்டிக் கொழுக்கும் முதலாளிகளையும், அவர்களின் விசுவாச ஏவல்படையாகச் செயல்படும் போலீசையும் தோலுரித்துக் காட்டி, உழைக்கும் மக்களை இம்மறுகாலனியச் சூறையாடலுக்கு எதிராகப் போராட அறைகூவிய இந்த ஆர்ப்பாட்டம், தொழிலாளர்களிடமும் உழைக்கும் மக்களிடமும் பெருத்த வரவேற்பைப் பெற்றது. பவர் சோப்ஸ் தொழிலாளர்கள் புதிய உற்சாகத்தோடு அடுத்த கட்டப் போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

-பு.ஜ.செய்தியாளர்கள், புதுவை.



ஜன. 2010 புதிய ஜனநாயகம் 35

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

## ருச்சிகா மானபங்க வழக்கு:

# தீர்ப்பா? கேலிக்கூத்தா?

''காக்கிச்சட்டை கிரிமினல்கள்'' என நாம் போலீசாரைக் குற்றம் சுமத்தும்பொழுது, அது பற்றி முகம் சுளிப்பவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் (மறைந்து போன) ருச்சிகா கிர்ஹோத்ரா என்ற சிறுமியின் கதையை அறிந்துகொள்ள வேண்டும்.

ருச்சிகா கிர்ஹோத்ரா 1990-இல் தனது பெற்றோர் மற்றும் சகோதரனுடன் அரியானா மாநிலத் தலைநகர் சண்டிகர் அருகிலுள்ள பஞ்சகுலா பகுதியில் வசித்து வந்தார். அச்சிறுமிக்கு, எதிர்காலத்தில் தானொரு மிகச்சிறந்த டென்னிஸ் வீராங்கனையாக வர வேண்டும் என்ற கனவு இருந்ததோடு, அதற்கான பயிற்சியிலும் ஈடுபட்டு வந்தார். அச்சமயத்தில்,எஸ்.பி.எஸ்.ரத்தோர் அரியானா மாநிலக் கூடுதல் போலீசு தலைமை இயக்குநராகவும், அரியானா மாநில டென்னிஸ் சங்கத் தலைவராகவும் இருந்து வந்தான். ''ருச்சிகாவைத் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டு, டென்னிஸ் வீராங்கனையாக உருவாக்கிக் காட்டுவதாக'' அச்சிறுமியின் பெற்றோர்களிடம் கூறிவந்த ரத்தோர், இது தொடர்பாகத் தன்னை வந்து சந்திக்க ருச்சிகாவை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டான்.

இதன்படி, ருச்சிகா தனது தோழி ஆராதனாவை அழைத்துக் கொண்டு, ஆகஸ்டு 12, 1990 அன்று ரத்தோரைச் சந்திப்பதற்காக, அவனது அலுவலகத்திற்குச் சென்றார். ஆராதனாவை ஏதோவொரு சாக்கு சொல்லி வெளியே அனுப்பிய ரத்தோர், அதன்பின் சிறுமி ருச்சிகாவிடம் தனது வக்கிரத்தைக் காட்டத் தொடங்கினான். ஆராதனா போன வேகத்திலேயே திரும்பி விட்டதால், ரத்தோர் தனது வக்கிர விளையாட்டை நிறுத்திக் கொள்ள நேர்ந்தது. ரத்தோரின் வக்கிரப் புத்தியைப் புரிந்து கொண்ட ருச்சிகா, தனது தோழியோடு தப்பித்து வெளியே ஓடிவிட்டார்.

ருச்சிகா, சம்பவம் நடந்து இரண்டொரு நாட்கள் கழித்து, ரத்தோரின் பாலியல் தாக்குதலைத் தனது பெற்றோரிடமும், தனது தோழி ஆராதனாவின் பெற்றோரிடம் கூறினார். அவர்கள் இது குறித்து மாநில அரசிற்கும், போலீசு உயர்அதிகாரிகளுக்கும் புகார் அளித்தனர். அப்பொழுது அரியானா மாநிலப் போலீசு தலைமை இயக்குநராக இருந்த ஆர்.ஆர்.சிங் இப்புகார் குறித்து விசாரணை நடத்தி, அடுத்த மாதமே அது குறித்த அறிக்கையை மாநில அரசிடம் அளித்தார்.

அவ்வறிக்கை ருச்சிகாவின் புகாரை உண்மையென உறுதிப் படுத்தியிருந்த போதும், அரியானா மாநில அரசு அவ்வறிக்கையின்படி ரத்தோரின் மீது நடவடிக்கை எடுக்காததோடு, அறிக்கையினை வெளியிடவும் மறுத்துவிட்டது. அதேசமயம், ரத்தோர் தனது வரம்பற்ற போலீசு அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொண்டு, ருச்சிகாவின் குடும்பத்தை வேட்டையாடத் தொடங்கினான்.

ருச்சிகாவின் புகைப்படத்தோடு ஆனந்த் பிரகாஷ் மற்றும் அவரது மகள் ஆராதனா.



ருச்சிகா 'ஒழுங்கீனம்' காரணமாகப் பள்ளியில் இருந்து வெறியேற்றப்பட்டார். அவரது சகோதரன் ஆஷு கிர்ஹோத்ரா மீது 11 திருட்டு வழக்குகள் போடப்பட்டன. ரத்தோர் மீது கொடுத்த புகாரைத் திரும்பப் பெறுமாறு ருச்சிகா, ஆராதனாவின் பெற்றோர்கள் மாவட்ட போலீசு கண்காணிப்பாளராலும், ரத்தோர் ஏவிவிட்ட குண்டர்களாலும் மிரட்டப்பட்டனர். ஆஷு கிர்ஹோத்ரா சட்டவிரோதக் காவலில் வைக்கப்பட்டு, போலீசாரால் சித்திரவதை செய்யப்பட்டார். இந்தத் துன்புறுத்தல்களையும், அதனால் ஏற்பட்ட மன உளைச்சலையும் பொறுத்துக் கொள்ள முடியாத பதினான்கே வயதான சிறுமி ருச்சிகா 1993, டிசம்பரில் பூச்சி மருந்து குடித்துத் தற்கொலை செய்து கொண்டார். ருச்சிகாவின் பெற்றோர் போலீசின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி, சண்டிகரை விட்டு வெளியேறி தலைமறைவாக வாழத் தொடங்கினர்.



எஸ்.பி.எஸ். ரத்தோர்.

அதே பொழுதில் காக்கிச்சட்டை கிரிமினல் ரத்தோருக்கு மாநிலப் போலீசு தலைமை இயக்குநராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது. ஆராதனாவின் பெற்றோர் ஆனந்த் பிரகாஷும் மாது பிரகாஷும் போலீசின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல், ரத்தோர் மீது வழக்குப் பதிவு செய்யக்கோரித் தொடர்ந்து போராடினர். அரியானா மாநில உயர்நீதி மன்றமும், அதன்பின் உச்சநீதி மன்றமும் இப்புகாரில் தலையிட்ட பிறகுதான், 1999 ஆம் ஆண்டு டிசம்பரில் ரத்தோர் மீதான புகார் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதோடு, வழக்கு விசாரணையும் சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. அதன்பின் 11 ஆண்டுகள் கழித்து, டிசம்பர் 21, 2009 அன்றுதான் ரத்தோருக்கு ஆறு மாதக் கடுங்காவல் சிறை தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து, சி.பி.ஐ. நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இதற்குள் ரத்தோர் பணியிலிருந்து கௌரவமாக ஓய்வு பெற்றுக் கொண்டு போய்விட்டார்.

சட்டப்படி பார்த்தால், ரத்தோரின் மீது சுமத்தபட்டுள்ள குற்றச்சாட்டிற்கு இரண்டு ஆண்டுகள்வரை தண்டனை அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ரத்தோரின் வயோதிகத்தைக் காரணமாகக் காட்டி, அவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படாமல் கருணை காட்டப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, ரத்தோர் மீது சுமத்தப்பட்ட மற்ற குற்றச்சாட்டுகள் - ருச்சிகாவின் பெற்றோரை மிரட்டியது, ஆஷு கிர்ஹோத்ரா மீது பொய் வழக்கு போட்டது, ருச்சிகாவைத் தற்கொலை செய்யுமாறு தூண்டியது - அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. நீதிமன்றம் தனது சாயம் வெளுத்துப் போய்விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே, பேருக்கு தண்டனை அளித்திருக்கிறது. ரத்தோர் பத்தொன்பது ஆண்டுகளாக தண்டிக்கப்படாமல் அரசின் பாதுகாப்போடு சுற்றி வந்தது மட்டுமல்ல, இந்தப் பஞ்சு மிட்டாய்த் தீர்ப்பும் அருவெறுக்கத்தக்கதுதான்!